# சுவிசேஷங்கள்

பாடம் 4

## லூக்கா எழுதின சுவிசேஷம்

Manuscript

thirdmill

Biblical Education. For the World. For Free.

© 2021 by Third Millennium Ministries

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளன. இந்த வெளியீட்டின் எந்த பகுதியும் Third Millennium Ministries,Inc. 316 Live Oaks Blvd., Casselberry, Florida 32707. இன் வெளியீட்டாளரினுடைய எழுத்துப்பூர்வ அனுமதியின்றி எந்தவொரு வடிவத்திலும் அல்லது லாபத்திற்கான எந்த வகையிலும் மீண்டும் உருவாக்கப்படக் கூடாது. மதிப்பாய்வுக்கோ, கருத்து தெரிவிக்கவோ அல்லது ஆழ்ந்த அறிவுத்திறன் சம்பந்தப்பட்ட நோக்கங்களுக்காகவோ சுருக்கமான மேற்கோள்களாக எடுக்கப்படலாம்.

சுட்டிக்காட்டப்படாவிட்டால் எல்லா வேத மேற்கோள்களும் பரிசுத்த வேதாகமத்திலிருந்து வந்தவை, The Bible Society of India Version Tamil-O.V. (New Orhto), copyright © 2018 . அனுமதியுடன் பயன்படுத்தப்பட்டுள்ளது. அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளன.

## THIRDMILL ஊழியத்தைப் பற்றி

1997 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இந்த Thirdmill ஒரு இலாப நோக்கம் இல்லாத சுவிசேஷ மார்க்க கிறிஸ்தவ ஊழியமாகும்.

**வேதாகம கல்வி. உலகத்திற்காக. இலவசமாக.**

ஊழியத்திற்கு போதுமான பயிற்சி இல்லாத உலகெங்கிலும் உள்ள நூறாயிரக்கணக்கான போதகர்கள் மற்றும் கிறிஸ்தவ தலைவர்களுக்கு இலவச கிறிஸ்தவ கல்வியை வழங்குவதே எங்கள் குறிக்கோளாகும். ஆங்கிலம், அரபு, மாண்டரின், ரஷ்ய மற்றும் ஸ்பெயின் நாட்டு மொழிகளில் இணையற்ற பல்லூடகவியல் பாடசாலை பாடத்திட்டத்தை உருவாக்கி உலகளவில் விநியோகிப்பதன் மூலம் இந்த இலக்கை அடைகிறோம். எங்கள் பாடத்திட்டம் எங்கள் கூட்டு ஊழியங்கள் மூலம் பன்னிரண்டிற்கும் மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்படுகிறது. இந்த பாடத்திட்டத்தில் வரைகலை மூலம் இயக்கப்படும் காணொளி காட்சிகள், அச்சிடப்பட்ட கல்வி உபகரணங்கள் மற்றும் இணைய வழி கல்வி உபகரணங்கள் உள்ளன. இது இணைய வழியாகவும் நேரடியான கல்வி நிலையங்கள் மூலமாகவும் கற்றுக்கொடுப்பதற்கு  பள்ளிகள், குழுக்கள் மற்றும் தனிநபர்களால் பயன்படுத்தப்படும் பொருட்டு வடிவமைக்கப்பட்டுள்ளது.

பல ஆண்டுகளாக, மிகச்சிறந்த உள்ளடக்கம் மற்றும் தரத்திற்கான விருது பெற்ற பல்லூடகவியல் பாடங்களை உருவாக்கும் அதிக செலவு குறைந்த முறையை நாங்கள் உருவாக்கியுள்ளோம். எங்கள் எழுத்தாளர்கள் மற்றும் தொகுப்பாளர்கள் இறையியல் ரீதியாக பயிற்சி பெற்ற கல்வியாளர்கள் ஆவர், எங்கள் மொழிப் பெயர்ப்பாளர்கள் அவர்களின் சொந்த மொழிகளில் இறையியல் புலமை பெற்றவர்கள், மற்றும் எங்கள் பாடங்களில் உலகெங்கிலும் உள்ள நூற்றுக்கணக்கான மரியாதைக்குரிய பாடசாலை பேராசிரியர்கள் மற்றும் போதகர்களின் நுண்ணறிவு உள்ளது. இதனோடு கூட,

எங்கள் வரைகலை வடிவமைப்பாளர்கள், விளக்குபவர்கள் மற்றும் தயாரிப்பாளர்கள் அதிநவீன உபகரணங்கள் மற்றும் நுட்பங்களைப் பயன்படுத்தி மிக உயர்ந்த உற்பத்தித் தரங்களை வழங்குகின்றனர்.

எங்கள் விநியோக இலக்குகளை நிறைவேற்றுவதற்காக, Thirdmill ஊழியமானது சபைகள், பாடசாலைகள், வேதாகம பள்ளிகள், மிஷனரி ஊழியர்கள், கிறிஸ்தவ ஒளிபரப்பாளர்கள் மற்றும் செயற்கைக்கோள் தொலைக்காட்சி வழங்குநர்கள் மற்றும் பிற அமைப்புகளுடன் திறம் சார்ந்த கூட்டாண்மைகளை உருவாக்கியுள்ளது. இந்த உறவுகள் ஏற்கனவே தனியாக ஊழியம் செய்கிற தலைவர்கள், போதகர்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு எண்ணற்ற காணொளி பாடங்களை விநியோகித்துள்ளன. எங்கள் வலைத்தளங்கள் விநியோகத்திற்கான வழிகளாக உள்ளன. மேலும் உங்கள் சொந்த கற்றல் சமூகத்தை எவ்வாறு தொடங்குவது என்பதற்கான பாட உபகரணங்களையும் எங்கள் பாடங்களுக்கு கூடுதல் உபகரணங்களையும் வழங்குகின்றன.

Thirdmill ஊழியம் IRS என்கிற அமைப்பினால் 501(c)(3) கழகமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. சபைகள், நிறுவனங்கள், வணிகங்கள் மற்றும் தனிநபர்களின் தாராளமான, வரி விலக்கு பெற்ற பங்களிப்புகளை நாங்கள் சார்ந்து இருக்கிறோம். எங்கள் ஊழியத்தைப் பற்றிய கூடுதல் தகவலைப் பெறுவதற்கும் நீங்கள் எவ்வாறு ஈடுபடலாம் என்பதை அறிவதற்கும் தயவுசெய்து www.thirdmill.org. யைப் பார்வையிடவும்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

# பொருளடக்கம்


**முன்னுரை ... 1**

**பின்னணி ... 1**

**எழுத்தாளர் ... 2**

பாரம்பரிய கண்ணோட்டம் ... 3

தனிப்பட்ட வரலாறு ... 7

**முதல் வாசகர்கள் ... 10**

தேயோப்பிலு ... 11

பரந்த வாசகர்கள் ... 12

**எழுதப்பட்ட தருணம் ... 13**

தேதி ... 14

நோக்கம் ... 14

**அமைப்பு மற்றும் உள்ளடக்கம் ... 15**

**இயேசுவின் தொடக்கங்கள் ... 16**

பிறப்பு அறிவிப்புகள் ... 17

பிறப்புகள் மற்றும் குழந்தைப் பருவங்கள் ... 18

யோவான் இயேசுவை அடையாளம் காட்டுதல் ... 21

தேவ குமாரனைக் குறித்த உறுதிப்படுத்தல்கள் ... 23

**கலிலேயாவில் இயேசுவின் ஊழியம் ... 25**

நாசரேத்தில் பிரசங்கம் ... 26

போதனை மற்றும் அற்புதங்கள் ... 27

யோவான் ஸ்நானகன் ... 30

போதனை மற்றும் அற்புதங்கள் ... 31

பன்னிரண்டு அப்போஸ்தலர்களின் ஆயத்தம் ... 31

**இயேசுவின் எருசலேம் பயணம் ... 32**

சீஷனின் இயல்பு ... 32

அதிகரிக்கும் மோதல் ... 36

சீஷத்துவத்தின் விலை ... 38

இயேசுவின் அர்ப்பணிப்பு ... 38

**எருசலேமிலும் அதன் அருகிலும் இயேசுவின் ஊழியம் ... 39**

**இயேசு சிலுவையில் அறையப்படுதல் மற்றும் உயிர்த்தெழுதல் ... 42**

கைது, விசாரணை மற்றும் மரணம் ... 42

உயிர்த்தெழுதல் மற்றும் பரமேறுதல் ... 46

**முக்கிய கருப்பொருள்கள் ... 47**

**இரட்சிப்பின் விளக்கம் ... 48**

**இரட்சகராகிய தேவன்** ........ 52
தேவ வல்லமை ........ 52
தேவ திட்டம் ........ 53
தேவ குமாரன் ........ 54
**இரட்சிக்கப்படும் மக்கள்** ........ 55
**முடிவுரை** ........ 61



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

# முன்னுரை

பல ஆண்டுகளுக்கு முன்பு, எரியும் அலுவலக கட்டிடத்தில் ஒரு குழு சிக்கிக்கொண்டதாக செய்தி வந்தது. அப்போது ஒரு இளைஞன் அறைக்குள் புகுந்ததை அறிந்து அவனது குரலைப் பின்தொடர்ந்து பாதுகாப்பாக அங்கிருந்தவர்கள் சென்றனர். கட்டிடம் முழுவதும் தப்பிப்பிழைத்த பலர் அவர் கட்டிடத்தில் பணிபுரிந்த ஒரு தன்னார்வ தீயணைப்பு வீரர் என்று சொன்னார்கள். அவர் தீயில் எரிந்து போனாலும், பலரை அவர் மரணத்திலிருந்து காப்பாற்றினார்.

மற்ற எந்த சுவிசேஷ எழுத்தாளரையும் விட, லூக்கா இயேசுவை இரட்சகர் என்று அதிகம் விவரித்தார். நாம் உணர்ந்தாலும் அறியாவிட்டாலும், உதவியோ நம்பிக்கையோ இல்லாமல் மனிதநேயமானது தொலைந்து, அவநம்பிக்கையில் இருக்கிறது. நம்மை அச்சுறுத்தும் தேவனின் நியாயத்தீர்ப்பிலிருந்து தப்பிக்க நமக்கு வழி இல்லை. ஆனால் லூக்காவின் சுவிசேஷம் இயேசு தம்முடைய உயிரைப் பணயம் வைத்து நம்மைக் காப்பாற்ற வந்தார் என்பதை நமக்கு நினைவூட்டுகிறது.

இது நம் தொடரான சுவிசேஷங்களின் நான்காவது பாடமாகும், மேலும் இதற்கு "லூக்கா எழுதின சுவிசேஷம்" என்று தலைப்பிட்டுள்ளோம். இந்தப் பாடத்தில், புதிய ஏற்பாட்டின் மூன்றாவது சுவிசேஷத்தை எவ்வாறு அதிகப் புரிதலுடன் படிப்பது என்பதையும், அதன் போதனைகளை நம் வாழ்வில் எவ்வாறு பயன்படுத்துவது என்பதையும் ஆராய்வோம்.

லூக்காவின் சுவிசேஷத்தை மூன்று படிகளில் அணுகுவோம். முதலில், லூக்கா சுவிசேஷ புத்தகத்தின் பின்னணியைக் கருத்தில் கொள்வோம். இரண்டாவதாக, அதன் அமைப்பு மற்றும் உள்ளடக்கத்தை ஆராய்வோம். மூன்றாவதாக, இதிலுள்ள சில முக்கிய கருப்பொருள்களைப் பார்ப்போம். லூக்கா சுவிசேஷத்தின் பின்னணியுடன் ஆரம்பிக்கலாம்.

# பின்னணி

எழுத்தாளர் மற்றும் அவரது அசல் வாசகர்கள் மற்றும் அவர் எழுதின சந்தர்ப்பம் அல்லது சூழ்நிலை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு லூக்கா



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

சுவிசேஷத்தின் பின்னணியை ஆராய்வோம். முதலில் எழுத்தாளர் பற்றி பார்க்கலாம்.

## எழுத்தாளர்

ஆரம்பத்தில் இருந்தே, லூாக்காவின் சுவிசேஷம் இரண்டு அத்தியாயங்களைக் கொண்ட ஒரு தொகுதியின் முதல் அத்தியாயம் என்று பரவலாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்பதை நாம் குறிப்பிட வேண்டும். இரண்டாவது அத்தியாயம் அப்போஸ்தலருடைய நடபடிகள் ஆகும். இதன் காரணமாக, லூாக்காவின் எழுத்தாளர் பற்றிய கேள்விகள் அப்போஸ்தலருடைய நடபடிகளின் எழுத்தாளர் பற்றிய கேள்விகளுடன் பிணைந்திருக்கும். லூாக்கா 1:1-4 இல் உள்ள லூாக்கா சுவிசேஷத்தின் முன்னுரையை கவனியுங்கள்:

> மகா கனம்பொருந்திய தேயோப்பிலுவே, நாங்கள் முழுநிச்சயமாய் நம்புகிற சங்கதிகளை, ஆரம்பமுதல் கண்ணாரக்கண்டு வசனத்தைப் போதித்தவர்கள் எங்களுக்கு ஒப்புவித்தபடியே அவைகளைக் குறித்துச் சரித்திரம் எழுத அநேகம்பேர் ஏற்பட்டபடியினால், ஆதிமுதல் எல்லாவற்றையும் திட்டமாய் விசாரித்தறிந்த நானும் உமக்கு உபதேசிக்கப்பட்ட விசேஷங்களின் நிச்சயத்தை நீர் அறியவேண்டுமென்று, அவைகளை ஒழுங்காய் உமக்கு எழுதுவது எனக்கு நலமாய்த் தோன்றிற்று (லூாக்கா 1:1-4).

அப்போஸ்தலருடைய நடபடிகள் 1:1-2 இல் உள்ள இதே முன்னுரையுடன் இதை ஒப்பிட்டுப் பாருங்கள்:

> தெயோப்பிலுவே, இயேசுவானவர் தாம் தெரிந்துகொண்ட அப்போஸ்தலருக்குப் பரிசுத்தஆவியினாலே கட்டளையிட்ட பின்பு, அவர் எடுத்துக்கொள்ளப்பட்ட நாள்வரைக்கும் செய்யவும் உபதேசிக்கவும் தொடங்கின எல்லாவற்றையுங்குறித்து, முதலாம் பிரபந்தத்தை உண்டுபண்ணினேன் (அப் 1:1-2).

இந்த இரண்டு முன்னுரைகளும் ஆசிரியர் தேயோப்பிலு என்ற ஒருவருக்கு எழுதியதைக் குறிக்கின்றன. அப்போஸ்தலருடைய நடபடிகளின் முன்னுரை இதற்கு முன்பிருந்த ஒரு புத்தகத்தைக் குறிக்கிறது. பெரும்பாலான அறிஞர்கள் முந்தைய புத்தகம் லூாக்காவின் சுவிசேஷம் என்று முடிவு செய்ய இது வழிவகுத்தது.

இந்த இரண்டு புத்தகங்களையும் ஒரே நபர் தான் எழுதினார் என்பதற்கு வேறு சான்றுகள் உள்ளன. லூாக்கா சுவிசேஷத்தின் கிரேக்க பாணியானது,

அப்போஸ்தலருடைய நடபடிகளின் கிரேக்க பாணியைப் போலவே உள்ளது, ஆனால் மற்ற சுவிசேஷங்களின் பாணியிலிருந்து இது மிகவும் வேறுபட்டது. உலகளாவிய ரீதியில் சுவிசேஷம் கொடுக்கப்படுதல், பரிசுத்த ஆவியின் ஊழியம், தேவனுடைய சித்தம் மற்றும் வார்த்தையின் தவிர்க்கமுடியாத வல்லமை மற்றும் கிறிஸ்துவின் செயலாகிய ”இரட்சிப்பை” அடிக்கடி விவரிக்கும் ஒத்த கருப்பொருள்களையும் இந்த புத்தகங்கள் வலியுறுத்துகின்றன. எனவே, ஒரு எழுத்தாளர் இரண்டு புத்தகங்களையும் எழுதினார் என்று வைத்துக் கொண்டால், அவர் யார்?

மூன்றாவது சுவிசேஷத்தின் எழுத்தாளரை இரண்டு நிலைகளில் ஆராய்வோம். முதலில், லூக்கா என்பவரால் சுவிசேஷம் எழுதப்பட்டது என்ற பாரம்பரிய கருத்தை நாம் கருத்தில் கொள்வோம். இரண்டாவதாக, லூக்காவின் தனிப்பட்ட வரலாற்றை ஆராய்வோம். லூக்கா இந்த சுவிசேஷத்தை எழுதினார் என்ற பாரம்பரிய கண்ணோட்டத்தை முதலில் பார்ப்போம்.

## பாரம்பரிய கண்ணோட்டம்

லூக்காவின் சுவிசேஷமானது தொழில்நுட்ப ரீதியில் எழுத்தாளர் யாரென்று தெரியாத புத்தகம் என்று அழைக்கப்படுகிறது, ஏனெனில் அது அதன் எழுத்தாளரின் பெயரைக் குறிப்பிடவில்லை. இது ஆச்சரியமாக இருக்கக்கூடாது. தேயோப்பிலுவுக்கு இதை எழுதியவர் யார் என்று நிச்சயமாகத் தெரியும், எனவே எழுத்தாளர் தன்னை அடையாளம் காட்ட வேண்டிய அவசியமில்லை. இருப்பினும், எழுத்தாளரின் அடையாளத்தைப் பற்றிய பல தகவலை உடைய ஆதாரங்கள் உள்ளன.

லூக்கா மூன்றாவது சுவிசேஷத்தை எழுதினார் என்ற பாரம்பரியக் கருத்தை குறைந்தது மூன்று வகையான சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன. முதலாவதாக, புதிய ஏற்பாட்டின் பிற பகுதிகளிலிருந்து வரும் கருத்துக்கள் அவர் தான் ஆசிரியர் என்பதை சுட்டிக்காட்டுகின்றன.

மூன்றாவது சுவிசேஷத்தின் ஆசிரியர் பவுலின் ஊழியத்தின் பிற்பகுதியில் அவருடன் இருந்ததாக புதிய ஏற்பாடு குறிப்பிடுகிறது. உதாரணமாக, அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தில், ஆசிரியர் சில சமயங்களில் ”அவர்கள்” என்ற வார்த்தையையும் மற்ற நேரங்களில் ”நாங்கள்” என்ற வார்த்தையையும் உபயோகித்தார். அவர் நாங்கள் என்று குறிப்பிடுவது கடைசியாக அப்போஸ்தலருடைய நடபடிகள் 27:1–28:16 இல் பவுலின் ரோம் பயணத்தை விவரிக்கிறது.

இதற்கு அப்பால், பவுலின் நிருபங்கள், இந்தக் காலத்தில் அவருடன் பணிபுரிந்த சிலரில் லூக்காவும் ஒருவர் என்று குறிப்பிடுகின்றன. உதாரணமாக, 2 தீமோத்தேயு 4:11 இல், பவுலின் மரணம் நெருங்கிக்கொண்டிருந்தபோது, பவுல்

தீமோத்தேயுவிடம், ”லூக்கா மட்டும் என்னுடன் இருக்கிறார்” என்று கூறினார். லூக்கா மூன்றாவது சுவிசேஷத்தையும் அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தையும் எழுதினார் என்பதை இது போன்ற தகவல்கள் நிரூபிக்கவில்லை, ஆனால் அது ஒரு வலுவான சாத்தியத்தை உருவாக்குகிறது.

இரண்டாவதாக, லூக்கா சுவிசேஷத்தின் ஆரம்ப கையெழுத்துப் பிரதிகளும் லூக்காவை எழுத்தாளராக சுட்டிக்காட்டுகின்றன.

> ஆரம்பகால கையெழுத்துப் பிரதிகளின் தேதிகளை கண்டுபிடிப்பது உண்மையில் மிகவும் தொழில்நுட்ப அறிவியலாகும், மேலும் பழங்கால கையெழுத்துப் பிரதிகளின் காலத்தை கண்டுபிடிப்பதற்கு அறிஞர்கள் பயன்படுத்தும் மூன்று சான்றுகள் உள்ளன. இதில் முக்கியமான ஒன்று பேலியோகிராபி ஆகும். இது சில நேரங்களில் மாணவர்களையும் ஆச்சரியப்படுத்துகிறது. பேலியோகிராபி என்பது பண்டைய கையெழுத்தைக் குறிக்கிறது; ”பேலியோ” என்கிற பதம் பழையது என்பதையும் ”கிராஃபி” என்கிற பதம் எழுதுதல் என்பதையும் குறிக்கின்றன; ஆகவே மிகவும் பழமையான எழுத்து என்பதை இது குறிக்கிறது. அறிஞர்கள், பேலியோகிராஃபி வல்லுநர்களால் சில தசாப்தங்களுக்குள் ஒரு ஆவணம் எழுதப்பட்டது என்று சொல்ல முடியும். நிச்சயமாக ஐம்பது ஆண்டுகளுக்குள் ஒரு ஆவணத்தின் எழுதப்பட்டது கையெழுத்து ஒரு குறிப்பிட்ட மொழியில் காலப்போக்கில் மாறுகிறது. சில நேரங்களில் எழுத்துக்களே அது எழுதப்படுவதன் அடிப்படையில் மாறும், அதாவது விஷயங்கள் எழுதப்பட்ட விதம் மாறலாம்; அது தான் பேலியோகிராஃபி எனப்படுகிறது. இரண்டாவது சில வகையான இரசாயன பகுப்பாய்வு ஆகும். கார்பன் பதினான்கு தேதியிடுதல் உள்ளது, எடுத்துக்காட்டாக, மை அல்லது விலங்குகளின் தோல் ஆகியவற்றை சோதித்து அதன் வயதைக் கண்டறியக்கூடிய பிற சோதனைகள் உள்ளன. ஒரு கையெழுத்துப் பிரதியின் தேதிக்கான மூன்றாவது வழிமுறையானது அதைக் குறித்து உண்டான வெளிப்புறக் கருத்துகள் அல்லது செய்யப்பட்ட அறிக்கைகள் ஆகும். அவற்றைப் பார்த்து எழுதி நகல்களை உருவாக்கிய எழுத்தாளர்கள் எப்போதாவது அவைகளை தேதியிட்டனர், ஆனால் சில சமயங்களில் அவர்கள் உண்மையில் சில வகையான குறிப்புகள் அல்லது கருத்தை உருவாக்கலாம், அது அந்த ஆவணம் எப்போது



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> நகலெடுக்கப்பட்டது என்பதை குறிப்பாக அடையாளம் காண உதவும். எனவே கையெழுத்துப் பிரதிகள் தேதியிடப்பட்ட மூன்று வெவ்வேறு வழிகள் இவைகளே.
>
> Dr. மார்க் எல். ஸ்ட்ராஸ்

லூக்கா சுவிசேஷத்தின் மிகவும் நம்பகமான ஆரம்ப கையெழுத்துப் பிரதிகளில் ஒன்று பாப்பிரஸ் எண் 75 ஆகும், இது பெரும்பாலும் ”P-75” என்று குறிப்பிடப்படுகிறது. இந்த கையெழுத்துப் பிரதி, கி.பி.180 இல் தேதியிடப்பட்டது. இது மற்ற ஆரம்பகால கையெழுத்துப் பிரதிகளை விட அதிகமான மூன்றாவது சுவிசேஷத்தின் பிரதிகளை கொண்டுள்ளது, மேலும் இது ”லூக்காவின் புத்தகம்” என்ற தலைப்பைக் கொண்டுள்ளது.

பல பண்டைய கையெழுத்துப் பிரதிகளும் லூக்காவை இந்த சுவிசேஷ புத்தகத்தின் ஆசிரியராக அடையாளப்படுத்துகின்றன, மேலும் எந்த ஆரம்ப கையெழுத்துப் பிரதிகளும் அதை வேறு நபர் எழுதினார் என்று கூறவில்லை. மூன்றாவதாக, ஆரம்பகால சபையின் எழுத்துக்கள் லூக்காவை ஆசிரியராக அடையாளப்படுத்துகின்றன.

ஆரம்பகால சபையின் முக்கியமான ஆவணங்கள் மூன்றாம் சுவிசேஷத்தின் ஆசிரியர் லூக்கா என்பதைத் தொடர்ந்து கூறுகின்றன. கி.பி.170 முதல் 180 வரையில் இருந்ததாக தேதியிடப்பட்ட முராடோரியன் துண்டு, புதிய ஏற்பாட்டு புத்தகங்களை பட்டியலிடும் ஆரம்பகால ஆவணமாகும், இது ஆரம்பகால சபை இதன் மூலம் வேதாகமத்திலுள்ள உண்மையான புத்தகங்கள் எவை என்பதை கண்டறிய உதுவியது, மேலும் இது மூன்றாவது சுவிசேஷத்தின் ஆசிரியர் லூக்கா என்பதை தெளிவாக உறுதிப்படுத்துகிறது.

மற்றொரு பழங்கால சாட்சியாக லூக்காவின் சுவிசேஷத்திற்கு முன்னுரையாக எழுதப்பட்ட மார்சியோனைட் எதிர்ப்பு முன்னுரை உள்ளது, இது கள்ள போதகரான மார்சியனை மறுப்பதற்காக கி.பி.160 முதல் 180 வரையிலான தேதியில் எழுதப்பட்டது. இது மூன்றாவது சுவிசேஷத்தை இவ்வாறு அறிமுகப்படுத்துகிறது:

> லூக்கா, சிரியாவின் அந்தியோகியாவை சேர்ந்தவர், தொழிலில் ஒரு மருத்துவர், அப்போஸ்தலர்களின் சீஷன் ஆவார். பிற்காலத்தில் அவர் பவுலுடன் சேர்ந்தார்... லூக்கா, ஆவியின் தூண்டுதலின் கீழ், அகாயா பகுதியில் தனது முழு புத்தகத்தையும் இயற்றினார்.

மேலும், இரண்டாம் மற்றும் மூன்றாம் நூற்றாண்டுகளைச் சேர்ந்த பல சபைத் தலைவர்கள் லூக்காவை மூன்றாம் சுவிசேஷத்தின் ஆசிரியராக அங்கீகரித்தனர். உதாரணமாக, லூக்கா தான் எழுத்தாளர் என்பது ஐரேனியஸால் வலியுறுத்தப்பட்டது, அவர் கி.பி.130 முதல் 202 வரை வாழ்ந்தார்; சுமார் கி.பி.150 முதல் 215 வரை வாழ்ந்த அலெக்ஸாண்டிரியாவின் கிளமெண்ட்; மற்றும் கி.பி.155 முதல் 230 வரை வாழ்ந்த டெர்டுல்லியன் போன்றவர்களாலும் இது வலியுறுத்தப்பட்டது .

> மூன்றாவது சுவிசேஷத்தை எழுதியவர் லூக்கா என்பதில் நாம் உறுதியாக இருக்க முடியும் என்று நினைக்கிறேன். லூக்கா ஒரு மருத்துவர் என்பதை அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்திலிருந்து நாம் அறிவோம், உண்மையில், பவுல் ஆசியா மைனரின் உச்சியில் துரோவா என்ற இடத்திற்கு வந்தபோது அவரை சந்தித்தார். அவர் லூக்காவை சந்திக்கிறார், அவர்கள் ஒன்றாக பிலிப்பு பட்டணத்திற்கு பயணம் செய்கிறார்கள், பின்னர் லூக்கா அங்கு ஒரு மருத்துவராக பிலிப்**புவி**ல் தங்கியிருக்கலாம், பின்னர் அவர் **பிலிப்**புவி**ல்** இருந்து எருசலேமுக்கு கி.பி.57 இல் செல்லும்போது பவுலுடன் பயணத்தில் மீண்டும் இணைகிறார். லூக்கா பவுலை நன்கு அறிந்த ஒருவர், அவருடன் பயணம் செய்தவர், மேலும் இந்த லூக்கா தான் இந்த சுவிசேஷத்தை எழுதும் ஒரே நபர் என்பதற்கு எல்லா ஆதாரங்களும் உள்ளன என்பதை புதிய ஏற்பாட்டிலிருந்து கற்றுக் கொள்கிறோம்.
>
> Dr. பீட்டர் வாக்கர்

> பவுலின் தோழரின் பெயரை நீங்கள் வெறுமனே யூகித்தால், ஒருவேளை லூக்கா உங்கள் நினைவுக்கு வரமாட்டார். பவுலின் நிருபங்களில் அவர் ஒரு முக்கிய நபராக இல்லை. தீத்து அல்லது வேறு ஒருவர் உங்கள் நினைவிற்கு வரலாம். எனவே, பவுலின் நிருபங்களில் அவர் மிக முக்கியமான நபராக இல்லை என்ற உண்மையே, சுவிசேஷம் மற்றும் அப்போஸ்தலருடைய நடபடிகள் ஆகிய இரண்டிலும் இது லூக்காவாகத் தான் இருக்க முடியும் என்பதை கூறுகிறது. ஆனால், சுவிசேஷங்கள் முதன்முதலில் புழக்கத்தில் இருந்தபோது, சுவிசேஷங்கள் கூறு**ம்** நபர்களின் பெயர்கள் மிக ஆரம்ப நிலைக்குச் செல்கின்றன என்று நினைப்பதற்கு நல்ல காரணம் இருப்பதாக நான் நினைக்கிறேன். எனவே, லூக்கா தான் ஆசிரியராக இருக்க

முடியும் என்பதற்கான சான்று மற்றும் அப்போஸ்தலருடைய நடபடிகளின் ஆசிரியர் பவுலின் தோழராகத் தான் இருக்க முடியும் என்பவைகளை சேர்த்துப் பார்க்கும்போது, இரண்டு புத்தகங்களின் ஆசிரியர் பவுலின் சில பயணங்களில் அவருடன் சென்ற லூக்காவாக இருக்கலாம் என்று நான் நினைக்கிறேன். பவுலின் சக ஊழியர்களில் ஒருவராக அவர் இருந்தார்.

Dr. ரிச்சார்ட் பாக்கம்

லூக்கா இந்த சுவிசேஷ புத்தகத்தை எழுதினார் என்ற பாரம்பரிய கருத்தை இப்போது நாம் உறுதிப்படுத்தியுள்ளோம், லூக்காவின் தனிப்பட்ட வரலாற்றைப் பார்ப்போம்.

## தனிப்பட்ட வரலாறு

புதிய ஏற்பாடு லூக்காவின் தனிப்பட்ட வரலாற்றைப் பற்றி குறைந்தது நான்கு விஷயங்களைக் கூறுகிறது. முதலில், அவர் ஒரு அப்போஸ்தலன் அல்ல. உண்மையில், லூக்கா தனது சுவிசேஷ புத்தகத்தில் தெரிவித்த எந்த நிகழ்வையும் நேரில் பார்த்ததாக தெரியவில்லை.

லூக்கா 1:1-2 லிருந்து இந்த விவரங்களைக் கவனியுங்கள்:

நாங்கள் முழுநிச்சயமாய் நம்புகிற சங்கதிகளை, ஆரம்பமுதல் கண்ணாரக்கண்டு வசனத்தைப் போதித்தவர்கள் எங்களுக்கு ஒப்புவித்தபடியே அவைகளைக் குறித்துச் சரித்திரம் எழுத அநேகம்பேர் ஏற்பட்டார்கள் (லூக்கா 1:1-2).

வரலாற்றின் ஒரு படைப்பை அறிமுகப்படுத்த ஒரு வரலாற்றாசிரியர் அடிக்கடி எழுதும் முன்னுரை இந்த சுவிசேஷத்தில் மட்டுமே உள்ளது. எனவே, அந்தக் காலத்தின் வரலாற்று முறையைப் பின்பற்றுவதில் **லூக்கா** கவனமாக இருந்தார் என்பதை இது குறிக்கிறது. மேலும் அவர் முன்னுரையில் தனது ஆதார மூலங்களைப் பற்றி பேசுகிறார். அவர் தன்னை நேரில் கண்ட சாட்சி என்று கூறவில்லை, ஆனால் நேரில் கண்ட சாட்சிகளை எடுத்து பதிவு செய்வதாக கூறுகிறார். எனவே, நேரில் கண்ட சாட்சிகளின் சாட்சி நம்மிடம் உள்ளது. ஆனால் பவுல் எருசலேமுக்கு வந்த பிறகு, எருசலேமுக்கு சென்ற அவரது கடைசி பயணத்தில் லூக்கா

> அவருடன் இருக்கிறார், பவுல் சுமார் 2 ஆண்டுகள் சிறையில் இருக்கிறார். அந்த காலகட்டத்தில் லூக்கா எருசலேம் மற்றும் பாலஸ்தீனத்தின் பிற இடங்களில் சுற்றித் திரிந்தது போல் தெரிகிறது. எனவே, அவருக்கு நிறைய வாய்ப்புகள் இருந்தன, உண்மையில், 2 ஆண்டுகள், அவரால் நேர்காணல் செய்ய முடியும் - ஒரு நல்ல பண்டைய வரலாற்றாசிரியரைப் போல ஆய்வு செய்திருக்க முடியும் - அவர் எருசலேம் தேவாலயத்தில் உறுப்பினர்களாக இருந்த நேரில் கண்ட சாட்சிகளை நேர்காணல் செய்திருக்கலாம், கர்த்தரின் சகோதரரான யாக்கோபு போன்றவர்கள் அங்கிருந்திருக்கலாம். பன்னிரண்டு அப்போஸ்தலர்களில் சிலர் எருசலேமில் அல்லது பாலஸ்தீனத்தின் பிற பகுதிகளில் இருந்தனர். எனவே, லூக்கா உண்மையில் நேரில் கண்ட சாட்சிகளை நேர்காணல் செய்வதற்கான மிகவும் நல்ல நிலையில் இருந்தார். பின்னர் அவர் பவுலுடன் ரோமுக்குச் செல்கிறார், அங்கு இயேசுவைப் பற்றிய கதையைப் அவர்கள் நினைவில் வைத்திருப்பதை சொல்லகூடியவர்கள் இருந்திருக்கலாம். எனவே, லூக்கா நேரில் கண்ட சாட்சிகளுடன் நேரடியாக தொடர்பு கொள்வதற்கு வாய்ப்பு இருந்திருக்கும்.
>
> Dr. ரிச்சார்ட் பாக்கம்

இரண்டாவதாக, புறஜாதியான லூக்காவும் கிறிஸ்தவத்திற்கு மாறியவராகத் தெரிகிறது. சிறையிலிருந்து கொலோசெயர்களுக்கு பவுல் கடிதம் எழுதியபோது, பவுலுடன் இருந்த லூக்காவிடமிருந்து வாழ்த்துக்களை அனுப்பினார். கொலோசெயர் 4:14 இல் பவுல் எழுதியதைக் கவனியுங்கள்:

> பிரியமான வைத்தியனாகிய லூக்காவும், தேமாவும், உங்களுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறார்கள் (கொலோசெயர் 4:14).

இது குறிப்பிடத்தக்கது, ஏனென்றால் 10-11 வசனங்களில், அரிஸ்தர்க்கு, மாற்கு மற்றும் யுஸ்து ஆகியோர் அந்த நேரத்தில் தன்னுடன் பணிபுரிந்த யூதர்கள் என்று பவுல் கூறியிருந்தார். எனவே, லூக்கா ஒரு புறஜாதி என்று முடிவு செய்வது நியாயமானது. அப்போஸ்தலருடைய நடபடிகள் 1:19 இல், லூக்கா அராமியம்"அவர்களின் மொழி" என்று விவரித்ததன் மூலம் இது உறுதிப்படுத்தப்படுகிறது. அராமியம் யூதர்களின் மொழி, ஆனால் அது அவருடையது அல்ல.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

மூன்றாவதாக, லூக்காவும் நன்கு படித்தவராகத் தெரிகிறது. புதிய ஏற்பாட்டில் உள்ள பல புத்தகங்கள் கிரேக்க மொழியில் மிகவும் பொதுவான பாணியில் எழுதப்பட்டுள்ளன. ஆனால் லூக்கா சுவிசேஷம் மொழியின் பயன்பாட்டில் அதிக நுட்பத்தைக் காட்டுகிறது.

லூக்கா நன்கு படித்தவர் என்பது கொலோசெயர் 4:14 இல் பவுல் அவரை ”மருத்துவர்” என்று அடையாளம் காட்டியதில் பிரதிபலிக்கிறது. புதிய ஏற்பாட்டின் நாட்களில் மருத்துவம் என்பது ஒரு முறையான படிப்பாக இல்லாவிட்டாலும், அதற்கு இன்னும் திறமை மற்றும் கற்றல் பட்டம் கொண்ட நபர்களே அதில் ஈடுபட முடியும்.

லூக்காவின் தனிப்பட்ட வரலாற்றைப் பற்றி நாம் அறிந்த நான்காவது விஷயம் என்னவென்றால், அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தில் நாம் பார்ப்பது போல பவுலின் ஊழியத்தில் உடன் வேலையாளாக இருந்தார்.

பிலேமோன் வசனம் 24 இல் பவுல் அவரை விவரித்தபடி, லூக்கா அவருடைய “உடன் வேலையாள்” ஆவார். அப்போஸ்தலருடைய நடபடிகள் 16:6-10 இன் படி, லூக்கா முதலில் பவுலுடன் துரோவாவில் சேர்ந்தார், அவர் மக்கதோனியாவுக்குச் செல்லும் மிஷனரி அழைப்புக்கு பதிலளித்தபோது அவருடன் சென்றார். அப்போதிருந்து, அப்போஸ்தலருடைய நடபடிகள் 16:40-20:5 இல் பதிவு செய்யப்பட்டுள்ள பிலிப்பு பட்டணத்தில் நீண்ட காலம் தங்கியிருப்பதைத் தவிர, லூக்கா அடிக்கடி பவுலுடன் இருந்தார். லூக்காவின் உண்மைத்தன்மை குறிப்பாக அப்போஸ்தலருடைய நடபடிகள் 27:1 இல் வெளிப்படுத்தப்பட்டது, அங்கு அவர் ரோமுக்கு செல்லும் பவுலின் ஆபத்தான பயணத்தில் சேர்ந்தார்.

> புதிய ஏற்பாட்டில் உள்ள அனைவரையும் நான் நினைக்கிறேன், நான் லூக்காவை சந்திக்க விரும்புகிறேன். ஒரு காலத்தில் நான் ஒரு மருத்துவராக வேண்டும் என்று நினைத்தேன், அதனால் அவர் எப்போதும் என்னைக் கவர்ந்தார். மேலும், சுவிசேஷங்களில் ஒன்றை எழுதுவதற்கு அவர் தகுதிபெறும் போது, எனது பார்வையில் பல விஷயங்கள் பொருந்துகின்றன என்று நான் நினைக்கிறேன். முதலில் அவர் யார் என்பது முக்கியம். அப்போஸ்தலருடைய நடபடிகள் 16 இல் லூக்கா “நாம்”என்கிற பதத்தை பேசத் தொடங்குகிறார். திடீரென்று அவர் தோன்றுகிறார்; அவர் மூன்றாம் நபரிடமிருந்து இந்த காரியங்களைப் பெறவில்லை. ஆனால் லூக்கா உண்மையில் என்ன நடக்கிறது என்பதை அறிய விரும்பும் மக்களுடன் இருக்கிறார், மேலும் அவர்கள் ஆரம்பகால கிறிஸ்தவத்தை நேரடியாக அனுபவிக்கும் வாய்ப்பைப் பெற்றனர். மேலும் இது ஒரு உற்சாகமான விஷயம் என்று நான் நினைக்கிறேன்.

> இரண்டாவது விஷயம், அவர் ஒரு மருத்துவர் என்பதுதான். நானே ஒருவராக ஆவதற்கான பயிற்சியைப் பற்றி யோசித்து, நோயறிகுறியைச் சரியாகப் பெற விரும்பும் நபர் அப்படிப்பட்டவர் என்பதை நான் அறிவேன். அவர்கள் தங்கள் உண்மைகளை நேராகப் பெறுவதில் மிகவும் கவனமாக இருக்கப் போகிறார்கள், உங்களுக்குத் தெரியும், அவர்களின் விவரங்கள் துல்லியமாக இருக்க வேண்டும் என்று அவர்கள் விரும்புகிறார்கள், ஏனென்றால் அவர்கள் என்ன முடிவு செய்தாலும் அது நோயாளியின் நன்மைக்காகவே இருக்கும். லூக்காவைப் பற்றி என்னை பாதித்த மூன்றாவது விஷயம் கிரேக்க-ரோம உலகில் அவர் பயணித்த முன்னோக்கு ஆகும். சுவிசேஷ விவரிப்பு பற்றிய அவரது முன்னோக்கு இஸ்ரவேல் அல்லது பாலஸ்தீனத்தோடு முடிந்துவிடவில்லை. இது ஒரு உலகளாவிய கண்ணோட்டம். கிறிஸ்தவ சுவிசேஷம் உலகமயமாக்கப்படுவதைப் பற்றி நாம் கவலைப்படும் ஒரு நாளில், கிரேக்கத்திலும் ரோமிலும் கிரேக்க-ரோம உலகின் பிற பகுதிகளிலும் அவருக்கு வாய்ப்பு கிடைத்ததால், லூக்காவை சில உண்மையான புரிதலுடன் படிக்கலாம். இயேசுவின் செய்தி கொடுக்கப்படும் கலாச்சாரத்திற்கு எவ்வாறு பொருந்தப் போகிறது என்பதைப் பார்க்கும் வாய்ப்பு அவருக்குக் கிடைத்தது.
>
> — Dr. ஸ்டீவ் ஹார்ப்பர்

இப்போது மூன்றாவது சுவிசேஷத்தின் ஆசிரியரைப் பற்றி ஆராய்ந்துவிட்டோம், லூக்காவின் அசல் வாசகர்களின் அடையாளத்தைப் பார்ப்போம்.

## முதல் வாசகர்கள்

லூக்காவின் அசல் வாசகர்களை இரண்டு வழிகளில் ஆராய்வோம். முதலில், தேயோப்பிலுவுக்கு இந்த புத்தகம் எழுதப்பற்றவற்றைக் குறித்து பார்ப்போம். இரண்டாவதாக, புத்தகம் ஒரு பரந்த வாசகர்களுக்காக வடிவமைக்கப்பட்டுள்ளது என்பதை நாம் கருத்தில் கொள்வோம். லூக்காவின் முதல் வாசகரான தேயோப்பிலுவுடன் ஆரம்பிக்கலாம்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

## தேயோப்பிலு

> தேயோப்பிலு யார், அது லூக்கா 1:1-4 இல் எதைக் குறிக்கிறது என்பது குறித்து பல நூற்றாண்டுகளாக ஒரு பெரிய விவாதம் உள்ளது, மேலும் அவர் அப்போஸ்தலருடைய நடபடிகள் 1:1-2 இல் குறிப்பிடப்பட்டுள்ளார். "தேயோப்பிலு" என்ற வார்த்தை "தேவனை நேசிப்பவர்" என்று பொருள்படும், அதனால், தேயோப்பிலு ஒரு உண்மையான தனிநபராக இல்லை, ஆனால் சபையில் தேவனை நேசிப்பவர்களாக இருக்கும் லூக்காவின் இந்த சுவிசேஷத்தின் அனைத்து வாசகர்களையும் குறிப்பதாக இருக்கிறது. மற்ற முக்கிய சாத்தியக்கூறு, நிச்சயமாக, தேயோப்பிலு ஒரு தனிநபர் ஆவார். பெரும்பாலான அறிஞர்களைப் போல நானும் இந்த இரண்டாவது பார்வையுடன் உடன்படுகிறேன், இரண்டாவது பார்வையில் லூக்கா அவரை "மிகச் சிறந்தவர்," "கிராட்டிஸ் (கனம் பொருந்தியவர்)" என்று விவரிக்கிறார், மேலும் லூக்கா பின்னர் "கிராட்டிஸ்டே" என்ற வார்த்தையைப் பயன்படுத்துகிறார். இது ரோம அதிகாரிகளான பெலிக்ஸ் மற்றும் அக்ரிப்பா ஆகியோரைக் குறிப்பிடுகின்றது. எனவே, லூக்காவின் மனதில் இது ஒரு உயர் நிலைப்பாட்டை கொண்ட ஒரு நபரைக் குறிப்பிடும் ஒரு தொழில்நுட்ப வெளிப்பாடாகும், மற்றும் குறிப்பாக ரோம அரசாங்கத்தில் உயர் பதவியில் இருப்பவரை இது குறிக்கிறது. அதற்கு அப்பால், லூக்கா 1:1-4 ஒரு அர்ப்பணிப்பு போல் தெரிகிறது. இது அறிமுக அர்ப்பணிப்பு வகையை சார்ந்தது. வரலாற்றுப் படைப்புகள் பெரும்பாலும் இந்த வகையான மொழியைப் பயன்படுத்தி ஒரு புரவலருக்கு அர்ப்பணிக்கப்பட்டன, அவர் படைப்பின் உற்பத்திக்கு பணம் செலுத்தினார். எனவே, அர்ப்பணிப்பு அறிக்கைகளைப் பற்றி நமக்குத் தெரிந்தவற்றுடன் இது உண்மையில் பொருந்துகிறது, அந்த காரணத்திற்காக, நான் சொல்வது போல், நிச்சயமாக தேயோப்பிலு ஒரு உண்மையான நபர் ஆவார்.
>
> Dr. டேவிட் ஆர். பாவுர்

லூக்காவின் முன்னுரை, தேயோப்பிலு அவருடைய புரவலர் என்பதையும் அவருடைய எழுத்திற்கு நிதி உதவி செய்தவர் என்பதையும் குறிக்கிறது. லூக்கா 1:3 இல், லூக்கா புத்தகத்தை "கனம் பொருந்திய தேயோப்பிலு" அல்லது *க்ராட்டிஸ்ட்*



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

*தியோபிலேக்கு* எழுதினார். *க்ராட்டிஸ்ட்* என்ற சொல் உயர்ந்த மரியாதையின் வெளிப்பாடாகும். உண்மையில், இது முழு புதிய ஏற்பாட்டிலும் மற்ற இரண்டு நபர்களான ரோம ஆளுநர்களான பெலிக்ஸ் மற்றும் பெஸ்து ஆகியோரை மட்டுமே விவரிக்கப் பயன்படுகிறது. தேயோப்பிலு ஒரு உயர் பதவியில் இருந்த ரோம அதிகாரியாக இல்லாவிட்டால், அவர் நிச்சயமாக மதிப்பும் முக்கியத்துவமும் கொண்டவராக இருக்கக் கூடும்.

ஆனால் லூக்காவுக்கும் தேயோப்பிலுவுக்கும் இடையிலான உறவு புரிந்து கொள்ளக் கடினமான ஒன்று. ஏதோ ஒரு வகையில், தேயோப்பிலு லூக்காவின் மாணவராகவும் இருந்தார். 1:3-4 இல் இந்த வார்த்தைகளை வாசிக்கிறோம்:

> ஆதிமுதல் எல்லாவற்றையும் திட்டமாய் விசாரித்தறிந்த நானும் உமக்கு உபதேசிக்கப்பட்ட விசேஷங்களின் நிச்சயத்தை நீர் அறியவேண்டுமென்று, அவைகளை ஒழுங்காய் உமக்கு எழுதுவது எனக்கு நலமாய்த் தோன்றிற்று (லூக்கா 1:3-4).

தேயோப்பிலு இயேசுவைப் பற்றி ஏற்கனவே அறிந்திருந்தார். ஆனால் தேயோப்பிலுவுக்கு அவர் கற்பித்தவற்றில் அவர் உறுதியான நம்பிக்கை வைப்பதற்காக லூக்கா இயேசுவின் வாழ்க்கையைப் பற்றிய இந்த முழுமையான மற்றும் ஒழுங்கான பதிவை எழுதினார். லூக்கா தனது முதல் வாசகரான தேயோப்பிலுவுக்கு எழுதுகிறதைப் பார்த்த பிறகு, லூக்கா பரந்த வாசகர்களுக்கு எழுதுவதைப் பற்றி சிந்திக்கவும் இது உதவியாக இருக்கும்.

## பரந்த வாசகர்கள்

தேயோப்பிலுவுக்கு மட்டும் லூக்கா எழுதாமல் பலருக்கு அவர் இந்த புத்தகத்தை எழுதினார் என்று நினைக்க பல காரணங்கள் உள்ளன. ஒன்று, ஆரம்பகால கிறிஸ்தவர்கள் கடிதங்களையும் மற்ற எழுத்துக்களையும் ஒருவருக்கொருவர் பகிர்ந்துகொள்ள முனைந்தனர். ஒரு உதாரணத்திற்கு, கொலோசெயர் 4:16 ல் பவுல் எழுதியதைக் கவனியுங்கள்.

> இந்த நிருபம் உங்களிடத்தில் வாசிக்கப்பட்டபின்பு இது லவோதிக்கேயா சபையிலும் வாசிக்கப்படும்படி செய்யுங்கள், லவோதிக்கேயாவிலிருந்து வரும் நிருபத்தை நீங்களும் வாசியுங்கள். (கொலோசெயர் 4:16).

ஆரம்பகால கிறிஸ்தவர்கள் தங்கள் எழுத்துக்களைப் பகிர்ந்து கொள்ள முனைந்ததால், தேயோப்பிலு லூக்காவின் புத்தகங்களைப் பகிர்ந்து கொள்ள ஆர்வமாக இருந்திருப்பார் என்று கருதுவது நியாயமானது.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இதற்கு அப்பால், இந்த புத்தகத்தின் உயர் இலக்கிய குணம், லூக்காவும் பரந்த வாசகர்களை மனதில் கொண்டிருந்தார் என்பதை உறுதிப்படுத்துகிறது. இந்த புத்தகத்தின் நடையானது இது ஒரு நபருக்கு மட்டும் எழுதப்பட்ட புத்தகம் அல்ல என்பதை தெளிவுபடுத்துகிறது. லூக்கா 1:3 இல் குறிப்பிடப்பட்டுள்ள விரிவான வரலாற்று ஆராய்ச்சி இது ஒரு பரந்த வாசகர்களுக்குத் தான் எழுதப்பட்டது என்பதைக் குறிக்கிறது. இதற்கு அப்பால், இந்த புத்தகம் மற்றும் அப்போஸ்தலருடைய நடபடிகள் பெரிய புத்தகங்களாக இருப்பதால், லூக்கா ஒரு பெரிய படைப்பை அவர் அதிக பார்வையாளர்களுக்காகத் தயாரித்ததாக தெரிகிறது. ஆனால் இவ்வளவு பரந்த வாசகர்கள் யார்?

லூக்கா முதன்மையாக புறஜாதி கிறிஸ்தவர்களுக்காக எழுதியதாக தெரிகிறது. உதாரணமாக, அவருடைய கிரேக்க மொழி நடை புறஜாதியினரின் நடையைப் போல இருந்தது. தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்த இந்த சுவிசேஷ புத்தகத்தின் உலகளாவிய முக்கியத்துவம், இரட்சிப்பு அனைத்து தேசங்களுக்குமானது என்று வலியுறுத்தியது. நிச்சயமாக, லூக்காவின் சுவிசேஷம் யூத கிறிஸ்தவர்களுக்கும் மதிப்புமிக்கதாக இருந்திருக்கும். ஆனால் மத்தேயுவின் சுவிசேஷத்தைப் போல அது அவர்களுக்கு அனுப்பப்படவில்லை.

ஒரு பொது அர்த்தத்தில் சொன்னால், தேவன் எப்போதும் எல்லா காலங்களிலும் முழு வேதத்தையும் தம்முடைய மக்கள் அனைவரும் படிக்கவும் புரிந்துகொள்ளவும் வேண்டுமென்று விரும்புகிறார். ஆனால் பரிசுத்த ஆவியானவர் குறிப்பிட்ட எழுத்தாளர்களை குறிப்பிட்ட புத்தகங்களை எழுத தூண்டியபோது, அவர் அவர்களின் தனிப்பட்ட ஆளுமை மற்றும் ஆர்வங்கள் மூலம் செயல்பட்டார் என்பதை அங்கீகரிப்பது முக்கியம். இந்த முதன்மையான அர்த்தத்தில், லூக்கா தனது சுவிசேஷத்தை தேயோப்பிலு மற்றும் பிற முதல் நூற்றாண்டு புறஜாதி கிறிஸ்தவர்களின் தேவைகளை நேரடியாகப் பேசுவதற்காக வடிவமைத்தார். இதற்கு நேர்மாறாக, நவீன வாசகர்கள் லூக்கா அவர்களுக்கு எழுதியதைக் கேட்கிறார்கள். ஆனால், லூக்காவையும் அவருடைய அசல் வாசகர்களையும் நாம் அவருடைய சுவிசேஷத்தைப் படிக்கும்போது மனதில் வைத்திருந்தால், அவர் எழுதியதைப் புரிந்துகொள்வதற்கும், அதை நம் சொந்த வாழ்க்கையில் பயன்படுத்துவதற்கும் நாம் சிறப்பாக தயாராக இருப்போம்.

சுவிசேஷத்தின் எழுத்தாளர் மற்றும் வாசகர்கள் யார் என்பதை அறிந்து, அதன் சந்தர்ப்பத்தை ஆராய நாம் தயாராக இருக்கிறோம்.

## எழுதப்பட்ட தருணம்

லூக்கா சுவிசேஷத்தின் சந்தர்ப்பத்தை இரண்டு வழிகளில் ஆராய்வோம். முதலில், அது தொகுக்கப்பட்ட தேதியைக் கருத்தில் கொள்வோம். இரண்டாவதாக,



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

லூக்கா இந்த சுவிசேஷத்தை எழுதியதன் நோக்கத்தை ஆராய்வோம். லூக்கா சுவிசேஷத்தின் தேதியைப் பற்றி முதலில் பார்க்கலாம்.

## தேதி

குறைந்தது இரண்டு காரணிகள் கி.பி.65 மற்றும் 67 க்கு இடைப்பட்ட தேதியை சுட்டிக்காட்டுகின்றன. முதலாவதாக, லூக்காவின் சுவிசேஷம் மற்றும் மாற்கு சுவிசேஷத்திற்கு இடையிலான ஒப்பீடுகள், பெரும்பாலான புதிய ஏற்பாட்டு அறிஞர்கள் மாற்கு சுவிசேஷத்தை லூக்கா தனது ஆராய்ச்சி ஆதாரங்களில் ஒன்றாகப் பயன்படுத்தினார் என்பதை ஒப்புக்கொள்ள வழிவகுத்தது. மாற்கு சுவிசேஷம் பற்றிய நம்முடைய முந்தைய பாடத்தில், அதன் ஆரம்ப தேதி கி.பி.64 என்று முடிவு செய்தோம். லூக்கா மாற்குவை ஆதாரமாகப் பயன்படுத்தியிருந்தால், அவருடைய சுவிசேஷத்திற்கான ஆரம்பகால தேதி இதற்குப் பிறகு இருக்கலாம். அநேகமாக கி.பி.65 ஆக இருக்கலாம்.

இரண்டாவதாக, அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகம் நிச்சயமாக கி.பி.69 க்குப் பிந்தைய தேதியை சுட்டிக்காட்டுகிறது. மேலும் கி.பி.67 க்குப் பிறகு இல்லை. கி.பி.65 இல் நடந்த பவுல் கொல்லப்படுதல், கி.பி.68 இல் முடிவடைந்த நீரோ மன்னனின் உபத்திரவங்கள் அல்லது கி.பி.70 இல் எருசலேமின் வீழ்ச்சி போன்ற முக்கியமான நிகழ்வுகளை அப்போஸ்தலருடைய நடபடிகள் பதிவு செய்யவில்லை. இந்த நிகழ்வுகள் நடைபெறுவதற்கு முன்பு அல்லது குறைந்தபட்சம் அவர் அவற்றைப் பற்றி அறிந்து கொள்வதற்கு முன்பே லூக்கா அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தை எழுதினார் என்பதால் தான் இந்த நிகழ்வுகள் இந்த புத்தகத்தில் இடம்பெறவில்லை. அப்போஸ்தலருடைய நடபடிகள் 1:1 இன் படி, லூக்கா அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தை எழுதுவதற்கு முன்பே அவருடைய சுவிசேஷம் முடிக்கப்பட்டது. எனவே லூக்கா தனது சுவிசேஷத்தை கி.பி.67 க்குள் முடித்திருக்கலாம் என்று தெரிகிறது. மேலும், எருசலேமின் வீழ்ச்சிக்கு முன்னதாக, கி.பி.69 க்குள் அவர் அதை நிச்சயமாக முடித்தார்.

லூக்கா எழுதிய தேதியை இப்போது நாம் கருத்தில் கொண்டோம், அவருடைய நோக்கத்தைப் பற்றி பார்ப்போம்.

## நோக்கம்

லூக்கா 1:3-4 இல், இந்த சுவிசேஷத்தை ஆராய்ந்து எழுதுவதற்கு லூக்கா பின்வரும் காரணத்தைக் கூறினார்:

> ஆதிமுதல் எல்லாவற்றையும் திட்டமாய் விசாரித்தறிந்த நானும் உமக்கு உபதேசிக்கப்பட்ட விசேஷங்களின் நிச்சயத்தை நீர்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> அறியவேண்டுமென்று, அவைகளை ஒழுங்காய் உமக்கு எழுதுவது எனக்கு நலமாய்த் தோன்றிற்று (லூக்கா 1:3-4).

லூக்கா தேயோப்பிலுவுக்காகவும், அவரைப் போன்ற புறஜாதி கிறிஸ்தவர்களுக்காகவும், அவர்கள் மேசியாவாகிய இயேசுவின் மீதான நம்பிக்கையை வலுப்படுத்துவதற்காக எழுதினார்.

லூக்கா எழுதும் போது, தேயோப்பிலு போன்ற புறஜாதி கிறிஸ்தவர்கள் தங்கள் விசுவாசத்திற்கு குறிப்பிடத்தக்க சவால்களை எதிர்கொண்டனர். இந்த சவால்கள் குறைந்தது இரண்டு மூலங்களிலிருந்து வந்தவை. முதலாவதாக, ரோமில் கிறிஸ்தவர்களை நீரோ துன்புறுத்தியதால், பேரரசு முழுவதும் உபத்திரவம் பரவக்கூடும் என்ற பரவலான அச்சத்தை இது உருவாக்கியது. இந்த பயம் இயேசு தேவனுடைய ராஜ்யத்தைக் கொண்டுவந்தார் என்ற கிறிஸ்தவ கூற்றை சிலர் சந்தேகிக்க வைத்தது.

இரண்டாவதாக, பெரும்பாலும் மனந்திரும்பிய புறஜாதி கிறிஸ்தவர்கள் யூதர்கள் பெரும்பான்மையாக இருக்கும் சபையில் அங்கம் வகித்ததைக் குறித்து வாதிட்டனர். இந்த தவறான எண்ணமும் பிரிவினையும் மனித இனத்தின் ஒவ்வொரு குடும்பத்திற்கும் இயேசு இரட்சிப்பை வழங்கினார் என்ற கூற்றைக் குறித்து சந்தேகங்களை எழுப்பியது.

இந்த சவால்கள் மற்றும் சந்தேகங்களுக்கு பதிலளிக்கும் விதமாக, புறஜாதி விசுவாசிகள் இயேசுவைப் பின்பற்றுவதற்காக எடுத்த முடிவு சரியானது என்பதை உறுதியளிக்கும் பொருட்டு இந்த புத்தகத்தை லூக்கா எழுதினார். இயேசு உண்மையில் தேவனுடைய ராஜ்யத்தைத் துவக்கியிருந்தார். புறஜாதி கிறிஸ்தவர்கள் உண்மையில் தேவனுடைய குடும்பத்தில் முழு அங்கத்தினர்களாக இருந்தனர். அவர்கள் இயேசுவுக்கு உண்மையாக இருந்தால், இரட்சிப்பின் அனைத்து ஆசீர்வாதங்களையும் பெறுவார்கள் என்று அவர்கள் உறுதியாக நம்பலாம்.

இப்போது லூக்கா சுவிசேஷத்தின் பின்னணியை ஆய்வு செய்துள்ளோம், நமது இரண்டாவது முக்கிய தலைப்பான அதன் அமைப்பு மற்றும் உள்ளடக்கத்தைப் பார்ப்போம்.

# அமைப்பு மற்றும் உள்ளடக்கம்

பெரிய அளவில், நான்கு சுவிசேஷங்களும் இயேசுவின் வாழ்க்கையை காலவரிசைப்படி கையாளுகின்றன என்பதை நீங்கள் நினைவுபடுத்துவீர்கள்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

என்பதை இந்தத் தொடரின் முந்தைய பாடங்களிலிருந்து அறிந்து கொள்ளலாம். ஆனால், சிறிய அளவில், அவர்கள் சில சமயங்களில் இயேசுவைப் பற்றிய தங்கள் கதைகளை வெவ்வேறு கொள்கைகளின்படி ஒழுங்கமைக்கிறார்கள். உதாரணமாக, மத்தேயுவும் மாற்குவும் சில சமயங்களில் சில கருப்பொருள்களின்படி தங்கள் செய்திகளை வடிவமைத்திருப்பதைக் கண்டோம். ஒப்பிடுகையில், லூக்கா தனது சுவிசேஷத்தின் பெரும்பகுதியை புவியியல் படி ஏற்பாடு செய்தார்.

இந்தப் பாடத்தில் நம் நோக்கங்களுக்காக, லூக்கா சுவிசேஷத்தை ஆறு பிரிவுகளாகப் பிரிப்போம்: 1:1-4 இல் ஒரு சிறிய முன்னுரை, அதைத் தொடர்ந்து ஐந்து முக்கியக் கதைகள்:

இந்த புத்தகத்தின் முதல் பெரிய பிரிவு இயேசுவின் தொடக்கத்தை விவரிக்கிறது மற்றும் யூதேயா மற்றும் யோர்தான் நதியின் பகுதியில் கவனம் செலுத்துகிறது. இந்தப் பகுதி 1:5–4:13 ஆகும்.

இரண்டாவது பெரிய பிரிவு, கலிலேயாவில் இயேசு செய்த ஊழியத்தின் விவரிப்பு ஆகும், இது 4:14–9:50 வரை நீட்டிக்கப்படுகிறது.

மூன்றாவது பெரிய பிரிவு 9:51-19:27 இல் எருசலேமுக்கு இயேசு செல்கிற பயணத்தை தெரிவிக்கிறது.

நான்காவது பெரிய பிரிவு 19:28-21:38 இல் எருசலேமிலும் அதற்கு அருகாமையிலும் இயேசு செய்த ஊழியத்தின் விவரிப்பு ஆகும்.

இறுதியாக, லூக்கா சுவிசேஷத்தின் ஐந்தாவதும் கடைசியுமான முக்கியப் பிரிவு, 22:1–24:53 இல் காணப்படுகிறது, இது எருசலேமுக்கு வெளியே இயேசு சிலுவையில் அறையப்பட்டு உயிர்த்தெழுந்த கதையாகும்.

லூக்காவின் முன்னுரையை நாம் ஏற்கனவே பார்த்திருப்பதால், லூக்கா 1:5-4:13 இல் இயேசுவின் தொடக்கத்தில் தொடங்கி, அவருடைய கதையின் ஐந்து முக்கிய பிரிவுகளில் கவனம் செலுத்துவோம்.

## இயேசுவின் தொடக்கங்கள்

இயேசுவின் தொடக்கத்தைப் பற்றிய லூக்காவின் தகவல் விவரம், இயேசு பிறப்பதற்குச் சற்று முன்பு தொடங்கி, அவருடைய பொது ஊழியத்திற்கு முன்பாக அவருடைய வாழ்நாள் முழுவதும் பரவுகிறது. இந்த அதிகாரங்களில் லூக்காவின் முக்கிய அக்கறை, இயேசு தேவனுடைய குமாரன் மற்றும் தாவீதின் குமாரன் என்று இருவரையும் காட்டுவதாக இருந்தது, அவரை முழு தெய்வீக மற்றும் முழு மனிதனாக காட்டினார். மேலும், தாவீதின் குமாரனாக, இயேசு மேசியா அல்லது



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

கிறிஸ்துவாக இருக்கிறார், தேவனுடைய ராஜ்யத்தை பூமிக்கு கொண்டு வருவதன் மூலம் உலகிற்கு இரட்சிப்பை வழங்குபவராக இருக்கிறார்.

இந்த விவரிப்பு முழுவதும், லூக்கா பழைய ஏற்பாட்டில் தேவனுடைய வாக்குத்தத்தங்களை தவறாமல் குறிப்பிட்டார், தேவன் இந்த வாக்குத்தத்தங்களை இயேசுவின் மூலம் நிறைவேற்றுகிறார் என்பதைக் காட்டுவதற்காக இப்படிச் செய்தார். எனவே, தேவனுக்கு உண்மையாக இருப்பதற்கும் அவருடைய ராஜ்ய ஆசீர்வாதங்களைப் பெறுவதற்கும் ஒரே வழி இயேசுவை ராஜாவாகவும் இரட்சகராகவும் ஏற்றுக்கொள்வதுதான்.

இந்த அதிகாரங்களை நான்கு முக்கிய பிரிவுகளாகப் பிரிக்கலாம்: யோவான் ஸ்நானகன் மற்றும் இயேசுவின் பிறப்பு பற்றிய அறிவிப்புகள்; அவர்களின் பிறப்பு மற்றும் குழந்தைப் பருவங்கள்; யோவான் இயேசுவை அடையாளம் காணுதல்; மற்றும் இயேசு தேவனுடைய குமாரன் என்கிற மூன்று உறுதிப்படுத்தல்கள். லூக்கா 1:5-56 இல் உள்ள பிறப்பு அறிவிப்புகளுடன் ஆரம்பிக்கலாம்.

## பிறப்பு அறிவிப்புகள்

லூக்கா தனது சுவிசேஷத்தை காபிரியேல் தூதனின் தோற்றத்துடன் தொடங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது. நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு, தானியேலின் புத்தகம் 9 ஆம் அதிகாரம் இஸ்ரவேலின் சிறைபிடிப்பு நூற்றுக்கணக்கான ஆண்டுகள் நீடிக்கும் என்று காபிரியேல் அறிவித்ததாகக் கூறியது. தேவனின் நியாயத்தீர்ப்பின் கீழ் இருக்கும் வரை, இஸ்ரவேல் அடிமைத்தனத்தில் இருக்கும். ஆனால் லூக்கா சுவிசேஷத்தில், நியாயத்தீர்ப்பு காலம் முடிவடைவதாக காபிரியேல் அறிவித்தார்.

லூக்கா 1:5-25 இல், காபிரியேல் யோவான் ஸ்நானகனின் பிறப்பை முன்னறிவித்தார். காபிரியேல் யூதேயாவில் ஆசாரியனான சகரியாவைச் சந்தித்தார், அவருடைய பிள்ளையில்லாத மனைவி எலிசபெத் அதிசயமாக ஒரு மகனைப் பெறுவாள் என்று கூறினார். பையனுக்கு யோவான் என்று பெயரிட வேண்டும். அவர் பிறப்பிலிருந்தே பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்படுவார், மேலும் தேவனின் இரட்சிப்புக்கான வழியைத் தயார் செய்ய பெரிய தீர்க்கதரிசி எலியாவின் ஆவியில் ஊழியம் செய்வார். முதலில், சகரியா காபிரியேலின் செய்தியை சந்தேகித்தார், அதனால் அவர் தனது மகன் பிறக்கும் வரை ஊமையாக இருந்தார்.

லூக்கா 1:26-38 இல் உள்ள இயேசுவின் பிறப்பைப் பற்றிய காபிரியேலின் பெரிய அறிவிப்போடு யோவானின் பிறப்பு அறிவிப்பை லூக்கா இணைத்தார். மரியாளின் வயிற்றில் தேவன் அற்புதமாக ஒரு குமாரனைப் பிறப்பிப்பார் என்றும், தேவனே அந்த குழந்தையின் பிதாவாக இருப்பார் என்றும் காபிரியேல் கூறினார். தேவனுடைய குமாரனுக்கு இயேசு என்று பெயரிடப்பட வேண்டும், அதாவது

"இரட்சகர்" என்பது இந்தப் பெயரின் அர்த்தமாகும். மேலும், அவர் தனது முற்பிதாவான தாவீதின் சிங்காசனத்தைப் பெறுவார், அதாவது அவர் மேசியாவாக இருப்பார், தேவனுடைய நித்திய ராஜ்யத்தின் இரட்சிப்பை பூமிக்குக் கொண்டுவருவார்.

மரியாளும் எலிசபெத்தும் உறவினர்களாக இருந்ததால், மரியாள் யூதேயாவில் உள்ள தனது உறவினரான எலிசபெத்தை சந்தித்து தன்னுடைய வயிற்றில் உருவாகியிருப்பது தேவனுடைய குமாரன் என்று சொன்னாள். இதைப் பற்றி லூக்கா 1:39-56 இல் வாசிக்கிறோம். மரியாள் எலிசபெத்தை வாழ்த்தியபோது, யோவான் தனது தாயின் வயிற்றில் மகிழ்ச்சியுடன் துள்ளிக் குதித்தார், எலிசபெத் உடனடியாக ஆவியால் நிரப்பப்பட்டாள், அதனால் அவள் குழந்தையின் முக்கியத்துவத்தை அவள் புரிந்துகொண்டாள். எலிசபெத் மரியாளை ஆசீர்வதித்தாள், மரியாளின் குமாரனைத் தன் கர்த்தர் என்று அழைத்தாள். அதற்குப் பதிலளிக்கும் விதமாக, மரியாள் லூக்கா 1:46-55 இல், பெரும்பாலும் மாக்னிபிகட் என்று அழைக்கப்படும் தனது புகழ்பெற்ற துதி பாடலைப் பாடினாள், தனது குழந்தை மூலம் வரும் இரட்சிப்பின் பேரில் மிகுந்த மகிழ்ச்சியை வெளிப்படுத்தினாள்.

பிறப்பு அறிவிப்புகளைத் தொடர்ந்து, லூக்கா 1:57-2:52 இல் யோவான் மற்றும் இயேசுவின் பிறப்பு மற்றும் குழந்தைப் பருவத்தை லூக்கா ஒப்பிட்டார்.

## பிறப்புகள் மற்றும் குழந்தைப் பருவங்கள்

யோவானின் பிறப்பு மற்றும் குழந்தைப் பருவத்தைப் பற்றிய லூக்காவின் விவரத்தை லூக்கா 1:57-80 இல் காணலாம். வயதான பெற்றோருக்கு யோவான் பிறந்தார். எட்டாம் நாள் விருத்தசேதனம் செய்ய அவரைக் ஆலயத்துக்குக் கொண்டுவந்தபோது, அவனுடைய தந்தை தன் குரலைத் திரும்பப் பெற்றார். அந்த நேரத்தில், சகரியா பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு, தாவீதின் குமாரனாகிய மேசியாவிற்கு தனது மகன் வழியை ஆயத்தப்படுத்துவான் என்று தீர்க்கதரிசனம் கூறினார். லூக்கா 1:69-76 இல் மேசியாவின் பாத்திரத்தை சகரியா எவ்வாறு விவரித்தார் என்பதைக் கவனியுங்கள்:

> [தேவன்] நம்முடைய பிதாக்களுக்கு வாக்குத்தத்தம்பண்ணின இரக்கத்தைச் செய்வதற்கும்; தம்முடைய பரிசுத்த உடன்படிக்கையை நினைத்தருளி: அவர் நம்முடைய பிதாவாகிய ஆபிரகாமுக்கு இட்ட ஆணையை நிறைவேற்றுவதற்கு தம்முடைய தாசனாகிய தாவீதின் வம்சத்திலே நமக்கு இரட்சணியக்கொம்பை ஏற்படுத்தினார். நீயோ பாலகனே, உன்னதமானவருடைய தீர்க்கதரிசி என்னப்படுவாய்; நீ கர்த்தருக்கு வழிகளை ஆயத்தம்பண்ணவும்,



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> நமது தேவனுடைய உருக்கமான இரக்கத்தினாலே அவருடைய ஜனத்துக்குப் பாவமன்னிப்பாகிய இரட்சிப்பைத் தெரியப்படுத்தவும், அவருக்கு முன்னாக நடந்துபோவாய் (லூக்கா 1:69-76).

பழைய ஏற்பாட்டில், தேவன் ஆபிரகாம் மற்றும் தாவீதுக்கு இரட்சிப்பின் உடன்படிக்கை வாக்குத்தத்தங்களை அளித்தார். மேலும், தேவன் இந்த வாக்குத்தத்தங்களை நிறைவேற்றப் போகிறார் என்றும், அவருடைய குமாரன் யோவான் வழியை ஆயத்தம் செய்யும் தீர்க்கதரிசியாக இருப்பார் என்றும் சகரியா தீர்க்கதரிசனம் கூறினார்.

அடுத்து, லூக்கா 2:1-52 இல், லூக்கா இயேசுவின் பிறப்பு மற்றும் குழந்தைப் பருவத்தைப் பற்றி அறிவித்தார். இந்த தகவலுக்கும் யோவானின் பிறப்பைப் பற்றிய அவரது முந்தைய விவரிப்புக்கும் இடையே பல ஒற்றுமைகள் உள்ளன, ஆனால் இயேசுவின் பிறப்பு மற்றும் குழந்தைப் பருவத்தைப் பற்றிய லூக்காவின் பதிவு மிக நீண்டது மற்றும் விரிவானது. இது லூக்கா 2:1-20 இல் பதிவு செய்யப்பட்டுள்ள பெத்லகேம் என்ற யூத நகரமான தாவீதின் நகரில் இயேசுவின் பிறப்புடன் தொடங்குகிறது.

இயேசுவின் பிறப்பு மிகவும் தாழ்மையானது. அவர் ஒரு தொழுவத்தில் பிறந்தார் மற்றும் ஒரு முன்னணையில் கிடத்தப்பட்டார். ஆனால் அருகில் உள்ள மேய்ப்பர்களுக்கு அவருடைய பிறப்பை அறிவித்த தேவதூதரின் அறிவிப்பு கம்பீரமானதாக இல்லை. லூக்கா 2:10-11 இல் மேய்ப்பர்களிடம் தேவதூதன் கூறியதைக் கவனியுங்கள்:

> பயப்படாதிருங்கள். இதோ, எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்குத் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார் (லூக்கா 2:10-11).

தேவதூதன் தேவனுடைய நியாயத்தீர்ப்பிலிருந்து தேவனுடைய மக்களைக் காப்பாற்றுவார் என்ற நற்செய்தி அல்லது ”சுவிசேஷத்தை” அறிவித்தான்.

இந்த தேவதூதன் பின்னர் இயேசுவின் பிறப்புக்காக தேவனைப் புகழ்ந்து பாடிய தேவதூதர்களின் பரலோகப் சேனையுடன் சேர்ந்தான். இயேசுவின் பிறப்பு தாழ்மையானதாக இருந்தபோதிலும், மரியாளின் குமாரன் உண்மையில் தேவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட மேசியா மற்றும் ராஜா என்று லூக்கா தெளிவுபடுத்தினார்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

அடுத்து, லூக்கா லூக்கா 2:21-40 இல் எருசலேம் தேவாலயத்தில் இயேசுவின் விருத்தசேதனத்தைப் பற்றி விவரித்தார். தேவாலயத்தில், பரிசுத்த ஆவியானவர் சிமியோனையும், பரிசுத்த தீர்க்கதரிசி அன்னாவையும் நிரப்பி, உலகிற்கு இரட்சிப்பைக் கொண்டுவரும் இயேசுவே மேசியா என்று அறிவிக்க தூண்டினார். லூக்கா 2:30-32 இல் சிமியோன் தேவனைப் புகழ்வதைக் கவனியுங்கள்:

> புறஜாதிகளுக்குப் பிரகாசிக்கிற ஒளியாகவும், உம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலுக்கு மகிமையாகவும், தேவரீர் சகல ஜனங்களுக்கும் முன்பாக ஆயத்தம்பண்ணின உம்முடைய இரட்சணியத்தை என் கண்கள் கண்டது (லூக்கா 2:30-32).

இது ஏசாயா 49:6 இன் நிறைவேறுதலாக இருந்தது, அங்கு தேவன் இந்த வார்த்தைகளைச் சொன்னார்:

> யாக்கோபின் கோத்திரங்களை எழுப்பவும், இஸ்ரவேலில் காக்கப்பட்டவர்களைத் திருப்பவும், நீர் எனக்குத் தாசனாயிருப்பது அற்பகாரியமாயிருக்கிறது. நீர் பூமியின் கடைசிபரியந்தமும் என்னுடைய இரட்சிப்பாயிருக்கும்படி, உம்மை ஜாதிகளுக்கு ஒளியாகவும் வைப்பேன் (ஏசாயா 49:6).

சிமியோன் மூலம், இஸ்ரவேலுக்கு இரட்சிப்பையும் மகிமையையும் கொண்டுவரும் மேசியா இயேசு என்று தேவன் வெளிப்படுத்தினார். இதற்கும் மேலாக, புறஜாதியாரும் இரட்சிக்கப்படுவதற்காக, அவர் தேவனுடைய ராஜ்யத்தின் சுவிசேஷத்தை அவர்களுக்கு பிரசங்கிப்பார்.

இறுதியாக, லூக்கா 2:41-52 இல் தேவாலயத்தில் இயேசுவின் சுருக்கமான கதையுடன் இயேசுவின் குமாரத்துவத்தைப் பற்றிய கருப்பொருளுக்குத் திரும்பினார். இயேசுவுக்கு பன்னிரெண்டு வயதாக இருந்தபோது, எருசலேமில் நடந்த பஸ்காவிற்கு தனது பெற்றோருடன் சென்றார், ஆனால் அவர்கள் வீடு திரும்பியபோது அவர் அவர்களிடமிருந்து பிரிந்தார். அவரது பெற்றோர்கள் அவரை பல நாட்களுக்குப் பிறகு தேவாலயத்தில் உள்ள மன்றங்களில் ஆசிரியர்களுடன் பேசிக் கொண்டிருந்ததைப் பார்த்தனர். ஆலயத்தில் இருந்த அனைவரும் இயேசுவின் அறிவையும் புரிதலையும் கண்டு வியந்தனர். மரியாள் இயேசுவை எதிர்கொண்டபோது, அவருடைய பதில் அவர் எவ்வளவு சிறப்பு வாய்ந்தவர் என்பதை வெளிப்படுத்தியது. லூக்கா 2:49 இல் இயேசு சொன்னதை கவனியுங்கள்:

> என் பிதாவுக்கடுத்தவைகளில் நான் இருக்கவேண்டியதென்று அறியீர்களா? (லூக்கா 2:49).

இயேசு தேவனின் குமாரனாக இருந்ததால், தேவாலயம் அவருடைய பிதாவின் வீடாக இருந்தது.

யோவான் மற்றும் இயேசுவின் பிறப்பு மற்றும் குழந்தைப் பருவத்தைத் தொடர்ந்து, லூக்கா 3:1-20 இல் யோவான் இயேசுவை அடையாளம் காட்டியதை லூக்கா அறிவித்தார்.

## யோவான் இயேசுவை அடையாளம் காட்டுதல்

இந்தக் கதையில், இயேசுவை மேசியா என்று முறையாக அடையாளப்படுத்துவதன் மூலம் தேவனின் இரட்சிப்புக்கான வழியை யோவான் தயார் செய்தார். யோர்தான் நதியின் பிராந்தியத்தில் தனது பிரசங்க ஊழியத்தில், யோவான் வரவிருக்கும் தேவனுடைய ராஜ்யத்தை அறிவித்தார், மக்கள் தங்கள் பாவங்களில் இருந்து மனந்திரும்பும்படி அறிவுறுத்தினார், மனந்திரும்பியவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்தார். ஆனால் இயேசு ஞானஸ்நானம் பெற அவரிடம் வந்தபோது, யோவான் அவரை மேசியா என்று அடையாளம் காட்டினார், மேலும் அவர் மேசியாவின் பாதரட்சைகளை அவிழ்க்க கூட தகுதியற்றவர் என்று தெளிவாக அறிவித்தார். ஏசாயா 44:3 மற்றும் எசேக்கியேல் 39:29 போன்ற பழைய ஏற்பாட்டு பகுதிகளில் தீர்க்கதரிசனம் கூறப்பட்டுள்ளபடி, இயேசு பரிசுத்த ஆவியால் ஞானஸ்நானம் கொடுப்பார் என்று யோவான் கூறினார். வரலாற்றின் இறுதி யுகம் வந்து விட்டது மற்றும் தேவனுடைய இரட்சிப்பு முழுமையாக உணரப்படும் நேரம் வந்துவிட்டது என்பது இதன் பொருள்.

> பழைய ஏற்பாட்டில், யாத்திராகமம் 19 இல், இஸ்ரவேலர்களுடன் தேவன் பேசும்போது அல்லது தேவன் சீனாய் மலையில் இறங்கப் போகும்போது, அதற்கு முன்பு அவர்கள் தங்கள் ஆடைகளைத் துவைத்து தங்களை பரிசுத்தப்படுத்த வேண்டும் என்று அவர்களுக்கு கூறப்பட்டது சுவாரஸ்யமானது. எனவே, சுத்திகரிப்பு என்பது உண்மையில் தேவனுடைய வருகைக்கான ஆயத்தத்தைக் குறித்தது. யோவான் ஸ்நானகனின் பிரகடனத்தை நாம் பார்த்தால், அவர் அடிப்படையில் தேவன் நியாயம் தீர்க்க வரப் போகிறார் என்றும், மக்கள் மனந்திரும்பி ஞானஸ்நானம் மூலம் தங்களைத் தயார்படுத்திக்கொள்ள வேண்டும் என்றும் கூறுகிறார்.
>
> Dr. டேவிட் ஏ. ரெடலிங்ஸ்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

சுவிசேஷங்களில், யோவான் மக்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கிறார். பின்னர் நாம் இயேசு யோவானிடம் ஞானஸ்நானம் பெற வருகிறதைப் பார்க்கிறோம். அவர் ஏன் இதைச் செய்வார்? அதாவது, மனந்திரும்பி ராஜ்யத்திற்கு தயாராக இருங்கள் என்று யோவான் கூறுகிறார். இயேசு மனந்திரும்ப வேண்டுமா? அவர் மனந்திரும்ப வேண்டிய அவசியமில்லை. அவர் பாவம் செய்யாத தேவ குமாரன். அவர் பின்னர் ஏன் யோவானால் ஞானஸ்நானம் பெற்றார்? சரி, யோவானின் ஞானஸ்நானம் ராஜ்யத்தின் வருகைக்கான ஆயத்தத்தைக் குறிக்கிறது என்பதை உணர வேண்டியது அவசியம். அவர் மக்களை மனந்திரும்ப அழைத்து விசுவாசிக்கும்படி சொல்கிறார். கிறிஸ்தவ ஞானஸ்நானம் போன்றது அல்ல இது, அதில் அவர் ராஜ்யம் வரப்போகிறது என்றும் ராஜா வருகிறார் என்றும் அறிவிக்கிறார். அதற்கு அவர்கள் தயாராக இருக்க வேண்டும். யோவானால் ஞானஸ்நானம் பெற வரும் இயேசு, இப்போது தனது ஊழியத்தைத் தொடங்க வருகிறார். ஞானஸ்நானம் அனைத்தும் சுவிசேஷங்களில் இயேசுவின் ஊழியத்தின் தொடக்கத்தில் தொடங்குகிறது. எல்லா நீதியையும் நிறைவேற்றுவதற்காக அவர் தம்மை நம்முடன் அடையாளப்படுத்துகிறார். இது தான் மத்தேயுவின் அடிப்படையிலான சிந்தனையாகும். அவர் மனந்திரும்ப வேண்டும் என்பதற்காக ஞானஸ்நானம் எடுக்கவில்லை. அவர் பாவி என்பதற்காக அதை எடுக்கவில்லை. அவர் தனது மக்களுடன் தம்மை அடையாளப் படுத்தியதே இதற்குக் காரணம். அவர் தனது பொது ஊழியத்தைத் தொடங்குகிறார். அவர் தனது வாழ்க்கையில் நமது பிரதிநிதியாக செயல்படுகிறார், அது அவரது மரணம், உயிர்த்தெழுதல், பரமேறுதல் ஆகியவற்றில் உச்சம் பெறும். அதனால்தான், அவர் ஏதோவொரு வகையில், அவருடைய ஊழியத்தைத் துவக்கி வைக்கவும் யோவான் எதிர்பார்த்தது இப்போது அவருக்குள் வரப்போகிறது என்பதை அறிவிக்கவும் அவர் வந்து யோவானால் ஞானஸ்நானம் பெற்றார். அவர்தான் இப்போது ராஜ்யத்தைக் கொண்டுவருகிறார்.

Dr. ஸ்டீபன் ஜே. வெல்லம்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

யோவான் இயேசுவை அடையாளம் காண்பதைப் பற்றி இப்போது நாம் பரிசீலித்தோம், இந்தக் கதையின் நான்காவது மற்றும் இறுதிப் பகுதியான லூக்கா 3:21–4:13 இல் இயேசுவை தேவ குமாரனாக உறுதிப்படுத்துவதற்கு வருவோம்.

## தேவ குமாரனைக் குறித்த உறுதிப்படுத்தல்கள்

லூக்கா 3:21-22 இல் உள்ள தெய்வீக உறுதிப்படுத்தலுடன் தொடங்கி, இயேசுவை தேவ குமாரனாக மூன்று தனித்தனி உறுதிப்படுத்தல்களை வழங்கினார். லூக்கா 3:22 இல் இருந்து இயேசுவின் ஞானஸ்நானம் பற்றிய இந்த விளக்கத்தைக் கவனியுங்கள்:

> பரிசுத்த ஆவியானவர் ரூபங்கொண்டு புறாவைப்போல அவர்மேல் இறங்கினார். வானத்திலிருந்து ஒரு சத்தமும் உண்டாகி: "நீர் என்னுடைய நேசகுமாரன், உம்மில் பிரியமாயிருக்கிறேன் என்று உரைத்தது" (லூக்கா 3:22).

இயேசுவின் ஞானஸ்நானத்தில், ஆவியின் காணக்கூடிய தோற்றம் மற்றும் வானத்திலிருந்து வந்த அவரது சத்தம் மூலம் இயேசு அவருடைய குமாரன் என்பதை தேவனே பகிரங்கமாக உறுதிப்படுத்தினார்.

அடுத்து, லூக்கா 3:23-38 இல் இயேசு தேவ குமாரன் என்பதற்கு வம்ச வரலாற்று சான்றை லூக்கா கொடுத்தார்.

மத்தேயுவைப் போலவே, லூக்காவும் தாவீது மற்றும் ஆபிரகாமின் நீதியான வம்சாவளியின் மூலம் இயேசுவின் வம்சவரலாற்றைக் கண்டுபிடித்தார். ஆனால் மத்தேயுவைப் போலல்லாமல், லூக்கா மனிதகுலத்தின் நீதியான தலைமுறையை ஆதாம் வரை சேர்க்கும் வகையில் தனது பதிவை நீட்டித்தார். இந்த வம்சாவளியின் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ள, லூக்கா 3:38 இல் இது முடிவடைவதைக் கவனியுங்கள்:

> ஏனோஸ் சேத்தின் குமாரன்; சேத் ஆதாமின் குமாரன்; ஆதாம் தேவனால் உண்டானவன் (லூக்கா 3:38).

லூக்கா ஆதாமை "தேவ குமாரன்" என்று அழைத்தார் - இந்த அதிகாரங்கள் முழுவதும் இயேசுவுக்கு கொடுக்கப்பட்ட தலைப்பு அது தான். இந்த வழியில், புதிய ஏற்பாட்டின் மற்ற பகுதிகள் தெளிவாகக் கற்பிக்கும் ஒன்றை லூக்கா சுட்டிக்காட்டினார். தேவ குமாரனாக, தேவனின் முதல் குமாரனான ஆதாமின் நோக்கத்தை நிறைவேற்ற இயேசு நியமிக்கப்பட்டார். அல்லது அப்போஸ்தலனாகிய பவுல் 1 கொரிந்தியர் 15:45 இல் இயேசுவே "கடைசி ஆதாம்" என்று கூறியது போலாகும். ஆதாம் பூமியில் தேவனுடைய ஊழியக்கார ராஜாவாக இருந்தான், அவன் தேவனுடைய சித்தத்தைச் செய்ய வேண்டும் என்ற கட்டளை இருந்தது.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

ஆனால் அவன் படுதோல்வி அடைந்தான். எனினும் ஆதாம் தோல்வியுற்ற இடத்தில் வெற்றிபெற்று, பூமியிலுள்ள ஒவ்வொரு தேசத்திற்கும் இரட்சிப்பை நீட்டித்த தேவ குமாரன் இயேசு ஆவார்.

இயேசு தாமே தன்னை தேவ குமாரனாக கடைசியாக லூக்கா 4:1-13 இல் உறுதிப்படுத்தியதை காண முடியும். வனாந்தரத்தில் இயேசுவின் சோதனையைக் குறித்த விவரம் இது. லூக்கா 4:1 இல் லூக்கா குறிப்பிட்டது போல, பரிசுத்த ஆவியானவர் இயேசுவை நிரப்பி, அவரை வனாந்தரத்திற்கு அழைத்துச் சென்றார், அங்கு அவர் சாத்தானால் சோதிக்கப்பட்டார். கல்லை அப்பமாக மாற்றவும், பிசாசிடமிருந்து தேசங்கள் மீது அதிகாரம் பெறவும், தேவாலயத்தின் உச்சியிலிருந்து குதிக்கவும் பிசாசு இயேசுவைத் தூண்டினான். பிசாசு இந்த இரண்டு சோதனைகளை "நீ தேவனுடைய குமாரனாக இருந்தால்" என்ற கேலி வார்த்தைகளுடன் தொடங்கினான். பதிலுக்கு, இயேசு சாத்தானின் மூன்று சோதனைகளையும் கடுமையாக நிராகரித்தார், மேலும் தேவனுடைய உண்மையான குமாரன் என்ன செய்ய வேண்டும் என்பதை விவரிக்கும் பழைய ஏற்பாட்டின் வேத பகுதிகளையும் மேற்கோள் காட்டினார்.

> இயேசு பல காரணங்களுக்காக வனாந்தரத்தில் பிசாசினால் சோதிக்கப்பட்ட போது வேதத்தை மேற்கோள் காட்டுகிறார். முதலாவதாக, இயேசுவை தேவனுடைய உண்மையான குமாரனாக சித்தரிப்பதே சுவிசேஷ எழுத்தாளர்களின் வேலையாக இருந்தது. ஆகவே, , தேவனுடனான அவரது உடன்படிக்கை உறவே அவர் வேதவசனங்களை மேற்கோள் காட்டுவதற்கான ஒரு காரணமாகும். காரியங்களை ஒழுங்காக வைத்திருப்பதற்கும், பிதாவாகிய தேவனோடுள்ள தொடர்பில் தன் உடன்படிக்கை உறவை நிலைநாட்டவும், பிசாசின் மட்டுப்படுத்தப்பட்ட அதிகாரத்தைக் காட்டவும் வேதத்திலிருந்து வசனங்களை மேற்கோள் காட்டினார். எனவே, மனிதன் அப்பத்தால் மட்டும் பிழைக்காமல், தேவனுடைய வாயிலிருந்து வரும் ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று கூறுகிறார், அந்த உடன்படிக்கை உறவின் முன்னுரிமையை தனக்கு நினைவூட்டுவதற்காக அதை செய்தார். பிசாசிடமிருந்து இந்த சோதனையை எதிர்க்க அவருக்கு இது உதவியது. ஆனால் அவர் வேதத்தின் ஒரு குறிப்பிட்ட பகுதியிலிருந்து, குறிப்பாக உபாகமம் 6 முதல் 8 வரை மேற்கோள் காட்டுவதைக் காண்கிறோம், ஏனென்றால் தேவனுடைய மக்களின் வனாந்தர அனுபவத்தைப் பற்றி மோசே பேசுகிறார், மேலும் யாத்திராகம சமூகத்தின் அந்த வனாந்தர அனுபவம் அவர்களின்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> இருதயங்களில் இருந்ததை சோதித்தது, அவர்களின் இருதயத்தில் என்ன இருக்கிறது என்று பார்க்க முடிந்தது. இதேபோன்ற ஒன்று நடக்கிறதை நாம் காண முடியும், இயேசுவின் சோதனை தான் அது, இஸ்ரவேல் சோதனையில் தோல்வியடைந்த இடத்தில், இயேசு சோதனையில் தேர்ச்சி பெற்றார். எனவே, பழைய ஏற்பாட்டை சுவிசேஷ எழுத்தாளர்களும் இயேசுவின் சோதனைக் கதையில் இயேசுவும் பயன்படுத்துவதை நாம் காண்கிறோம்.
>
> Dr. கிரிகோரி ஆர். பெர்ரி

இது ஆதாமை தேவனின் குமாரனாக காட்டும் இயேசுவின் வம்சவரலாறைப் பின்பற்றுவதால், இயேசுவின் சோதனையைப் பற்றிய லூக்காவின் விவரமானது ஆதியாகமம் 3 இல் உள்ள ஆதாமின் சோதனையைப் பற்றிய விவரத்திற்கு மாறாக பார்க்கப்பட வேண்டும். அந்தக் கதையில், பிசாசு ஏதேன் தோட்டத்தில் ஆதாமை பாவம் செய்யத் தூண்டினான், ஆதாம் பாவம் செய்தபோது, தேவன் சிருஷ்டிப்பை சபித்து, மனிதகுலம் அனைவரையும் வனாந்தரத்தில் தள்ளினார். மாறாக, இயேசு வனாந்தரத்தில் சோதனையை எதிர்த்தார், மேலும் தேவனுடைய உண்மையுள்ள மக்களை மீண்டும் பரதீசுக்குக் கொண்டுவரும் தேவனின் உண்மையுள்ள குமாரன் அவர் என்பதை இது உறுதிப்படுத்தியது.

யூதேயாவிலும் யோர்தான் பிராந்தியத்திலும் இயேசுவின் தொடக்கத்திற்குப் பிறகு, லூக்கா சுவிசேஷத்தின் அடுத்த முக்கிய பகுதி கலிலேயாவில் இயேசுவின் ஊழியத்தைப் பற்றி தெரிவிக்கிறது. இந்த பகுதி 4:14–9:50 வரை நீண்டுள்ளது.

## கலிலேயாவில் இயேசுவின் ஊழியம்

பழைய ஏற்பாட்டில் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ஆவியால் அபிஷேகம் செய்யப்பட்ட இரட்சகர் இயேசு என்பதை நிரூபிப்பதற்காக, லூக்கா தனது சுவிசேஷத்தின் இந்தப் பகுதியில், இயேசுவின் அற்புத வல்லமை மற்றும் சுவிசேஷப் பிரசங்கத்தின் பல உதாரணங்களைப் பதிவு செய்தார்.

கலிலேயாவில் இயேசுவின் ஊழியத்தை விவரிக்கும் லூக்காவின் கதையை ஐந்து பகுதிகளாகப் பிரிக்கலாம்: முதலில், நாசரேத்தில் இயேசுவின் பிரசங்கம்; இரண்டாவது, அவரது போதனை மற்றும் அற்புதங்கள்; மூன்றாவது, இயேசு மற்றும் யோவான் ஸ்நானகன் ஆகிய பாத்திரங்களுக்கு இடையே உள்ள வேறுபாடு; நான்காவது, இயேசுவின் கூடுதல் போதனைகள் மற்றும் அற்புதங்கள்; மற்றும் ஐந்தாவது, ஊழியத்திற்காக பன்னிரண்டு அப்போஸ்தலர்களை இயேசு



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

தயார் படுத்துதல். லூக்கா 4:14-30 இல் நாசரேத்தில் இயேசுவின் முதல் பிரசங்கத்தில் தொடங்கி, இந்தப் பகுதிகள் ஒவ்வொன்றையும் பார்ப்போம்.

## நாசரேத்தில் பிரசங்கம்

முதல் மூன்று சுவிசேஷங்களும் இயேசுவின் கலிலேயா ஊழியத்தின் போது அவரது அற்புத வல்லமையையும் சுவிசேஷ அறிவிப்பையும் வலியுறுத்துகின்றன. ஆனால் லூக்காவின் விளக்கக்காட்சி மற்றவர்களிடமிருந்து வேறுபட்டது, ஏனென்றால் இயேசுவின் ஊழியத்தின் இந்த கட்டத்தை அவர் தனது சொந்த ஊரான நாசரேத்தில் கர்த்தருடைய முதல் பிரசங்கத்துடன் அறிமுகப்படுத்தினார். ஒய்வுநாளில் இயேசு ஜெப ஆலயத்தில் இருந்ததாகவும், அவருக்கு ஏசாயாவின் சுருள் கொடுக்கப்பட்டதாகவும் லூக்கா அறிவித்தார். எனவே, அவர் ஏசாயா 61:1-2-ஐ வாசித்து, ஆச்சரியமான பிரகடனத்தை செய்தார். லூக்கா 4:18-21 இல் இயேசு சொன்னதை கவனியுங்கள்:

> கர்த்தருடைய ஆவியானவர் என்மேலிருக்கிறார்; தரித்திரருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி என்னை அபிஷேகம்பண்ணினார். இருதயம் நருங்குண்டவர்களைக் குணமாக்கவும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், குருடருக்குப் பார்வையையும் பிரசித்தப்படுத்தவும், நொறுங்குண்டவர்களை விடுதலையாக்கவும், கர்த்தருடைய அநுக்கிரக வருஷத்தைப் பிரசித்தப்படுத்தவும், என்னை அனுப்பினார். உங்கள் காதுகள் கேட்க இந்த வேதவாக்கியம் இன்றையத்தினம் நிறைவேறிற்று என்றார் (லூக்கா 4:18-21).

> ”இந்த வசனம் இப்போது உங்கள் செவியில் நிறைவேறியது” என்று அவர் கூறியபோது, பழைய ஏற்பாடு வழங்கிய மற்றும் எதிர்பார்த்த ஒன்று இப்போது உணரப்படுகிறது என்று இயேசு சொன்னார். 49வது அல்லது 50வது வருடத்தில் நீங்கள் கணக்கிடும் விதத்தைப் பொறுத்து, பழைய ஏற்பாட்டு இஸ்ரவேல் மக்களைக் கடன்களிலிருந்து விடுவித்து, அவர்களின் மூதாதையரின் தாயகம், அவர்களின் கோத்திரப் பகுதிகள், அவர்களின் குடும்பங்களுக்குச் சொந்தமான நிலங்களை மீட்டெடுப்பது என்பது யூபிலியின் முழு நோக்கமாகும். மோசே மற்றும் யோசுவாவின் நாட்களில் அவர்களின் நிலம் திரும்பக் கொடுக்கப்பட்டது. மீட்பிற்கான பெரிய, முக்கியமான பழைய ஏற்பாட்டு நிகழ்வாக யாத்திராகமத்தை நாம் நினைத்தால், யூபிலி மறுசீரமைப்பிற்கான தேவனின் முக்கியமான ஏற்பாடாக



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> இருப்பதையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும். ஏனென்றால், நாம் விழுந்துபோன உலகில் வாழும் வரை, மீட்பு நம்மைக் காப்பாற்றப் போகிறது, ஆனால் மறுசீரமைப்பு தேவனுடைய மீட்பின் ஒரு பகுதியாகும். எனவே, இயேசு இந்த யூபிலியின் அடையாளங்களைக் காட்டப் போகிறார். அவர் பிசாசுகளின் அடக்குமுறையிலிருந்து மக்களை விடுவிக்கிறார், சமூக இழிவுபடுத்தல் அல்லது சமூக வகைப்பாட்டிலிருந்து அவர்களை விடுவிக்கிறார், மேலும் அவர் அவர்களை அவர்களின் சிருஷ்டிகரும் பிதாவுமான தேவனிடம் மீட்டுக் கொடுக்கிறார்.
>
> – Rev. மைக்கேல் ஜே. குளோடோ

தேவனுடைய ராஜ்யம் வருவதால், தேவனுடைய விசுவாசமுள்ள மக்கள் அனைவருக்கும் இரட்சிப்பு கிடைக்கும் என்று ஏசாயா தீர்க்கதரிசனம் சொல்லியிருந்தார். அந்த நாள் வந்துவிட்டது என்று இயேசு அறிவித்தார். இந்த மேற்கோள் இயேசுவின் முழு ஊழியத்தையும் விளக்குவதற்கு லூக்காவின் அடிப்படை மாதிரியை வெளிப்படுத்துகிறது: இயேசு மேசியா அல்லது கிறிஸ்து ஆவார், பழைய ஏற்பாட்டின் மூலம் தீர்க்கதரிசனம் கூறப்பட்ட இரட்சகராக இருந்தார், அவர் தனது மக்களுக்கு இரட்சிப்பைக் கொண்டு வருவதன் மூலம் பூமியில் தேவனுடைய ராஜ்யத்தை வெளிப்படுத்துவார்.

நாசரேத்தில் இயேசுவின் பிரசங்கத்தை விவரித்த பிறகு, லூக்கா 4:31-7:17 இல் இயேசுவின் வல்லமை வாய்ந்த போதனைகள் மற்றும் அற்புதங்களின் பல உதாரணங்களை லூக்கா அறிவித்தார்.

## போதனை மற்றும் அற்புதங்கள்

இந்தப் பகுதியில், ஏசாயா 61:1-2-ன் தீர்க்கதரிசனத்தை நிறைவேற்றியதால், இயேசு உண்மையிலேயே மேசியா என்பதை லூக்கா நிரூபித்தார். லூக்கா 4:31-36 இல் இயேசு பொல்லாத ஆவியிலிருந்து விடுதலை அளித்தார். அவர் 4:38-42 இல் பலரைக் குணப்படுத்தினார். மேலும் அவர் லூக்கா 5:1-11 இல் சீஷர்களான பேதுரு, யாக்கோபு, யோவான் ஆகியோரை அழைத்தார். மேலும் பின்வரும் வசனங்களிலும் இதே மாதிரியை நாம் காண்கிறோம். 5:12-15 இல் குஷ்டரோகியை குணப்படுத்துதல் மற்றும் 5: 17-26 இல் உள்ள திமிர்வாதக்காரனை சொஸ்தமாக்குதல் ஆகியவைகளைப் பார்க்கிறோம். அதைத் தொடர்ந்து சீஷனான லேவி அல்லது மத்தேயு 5:27-32 இல் அழைக்கப்படுவதைக் காண்கிறோம்.

அதே மாதிரி அடுத்த வசனங்களிலும் மீண்டும் மீண்டும் வருகிறது. ஆனால் குணப்படுத்துதல்களுக்கு பதிலாக, லூக்கா இயேசுவின் போதனைகளை பதிவு



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

செய்தார். 5:33-39 இல், இயேசு தான் இந்த உலகத்தில் இன்னும் இருப்பதால் உபவாசம் இராமல் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்று கற்பித்தார். 6:1-11 ல், ஒய்வுநாள் குணப்படுத்துவதற்கும் உயிர்களைக் காப்பாற்றுவதற்கும் என்று இயேசு கற்பித்தார். மேலும் 6:12-16 இல், அவர் தனது பல சீஷர்களில் பன்னிரண்டு பேரைத் தேர்ந்தெடுத்து அவருடைய விசேஷ அப்போஸ்தலர்களாக ஆக்கினார், அவர்கள் இஸ்ரவேலுக்கான புதிய ஒழுங்கை நிறுவும் பணியை நியமித்தார்.

இந்த அற்புதங்கள் மற்றும் போதனைகள் மூலம், ஏசாயாவால் தீர்க்கதரிசனம் கூறப்பட்ட மேசியா தான் என்பதை இயேசு நிரூபித்தார், ஏனென்றால் அவர் சுதந்திரம், குணப்படுத்துதல் மற்றும் அடக்குமுறையிலிருந்து விடுவித்தல் போன்ற வடிவங்களில் தேவனின் தயவைக் கொண்டுவந்தார்.

அடுத்து, லூக்கா 6:17-49 இல் இயேசு வழங்கிய ஒரு நீண்ட பிரசங்கத்தை லூக்கா அறிவித்தார். இந்த பிரசங்கம் பெரும்பாலும் இயேசுவின் சமவெளிப் பிரசங்கம் என்று குறிப்பிடப்படுகிறது, மேலும் இது மத்தேயு 5-7 இல் உள்ள அவரது மலைப் பிரசங்கத்துடன் பல ஒற்றுமைகளைக் கொண்டுள்ளது.

> மத்தேயுவிற்கும் லூக்காவிற்கும் இடையே உள்ள ஒரு சுவாரஸ்யமான முரண்பாடு என்னவென்றால், மத்தேயு 5-7 இல் மலைப் பிரசங்கம் உள்ளது மற்றும் லூக்கா 6 இல் சமவெளிப் பிரசங்கம் இருக்கிறது. மேலும் விவாதத்திற்கும் வாதத்திற்கும் முடிவே இல்லாமல் போகிறது. இவை ஒன்றா, அல்லது தனித்தனியானவையா? இரண்டு விஷயங்களைச் சொல்ல வேண்டும் என்று நினைக்கிறேன். முதலாவதாக, அந்தச் சந்தர்ப்பத்தில் இயேசு சொன்னவற்றின் மிகச் சிறிய அளவைத் தான் நாம் கையாள்கிறோம் என்பதை அறிவோம். அதாவது, மத்தேயு 5-7ஐப் வாசியுங்கள், அதை சத்தமாக வாசிக்க நாற்பது நிமிடங்கள் ஆகும். இயேசு மணிக்கணக்காகப் பேசுகிறார், அவருடைய போதனையை அவ்வளவு சுருக்கிவிட முடியாது. எனவே, நாம் அவர் பேசியதன் வெறும் சாராம்சத்தை மட்டுமே கையாளுகிறோம். எனவே, நாம் அதே சாராம்சத்தைப் பற்றி பேசுகிறோமா? நாம் அதைப் பற்றித் தான் பேசுகிறோம் என்று நினைக்கிறேன். மற்றொரு விஷயம் என்னவென்றால், அந்த பகுதியின் புவியியல் உங்களுக்குத் தெரிந்தால், அது கவர்ச்சிகரமானதாக இருக்கும். கப்பர்நகூமுக்குப் பின்னால் மலைகள் உள்ளன, இயேசு அமர்ந்தார், மக்கள் ஒரு மலையில் இருந்தார்கள் என்று நீங்கள் அந்த மலைகளைப் பார்த்து சொல்லலாம். ஆனால் மற்றொரு அர்த்தத்தில், நீங்கள் அதைப் பார்த்தால், இது உண்மையில் மூவாயிரம் அடிக்கு மேலே இருந்து

> கடல் மட்டத்திற்கு கீழே வருகிற எரிமலை பாறை மெதுவாக இறங்குவதை குறிக்கும். நீங்கள் அதை தூரத்திலிருந்து பார்க்கும்போது, உண்மையில் நீங்களும் நானும் சமவெளிகள் என்று குறிப்பிடக்கூடிய ஆயிரக்கணக்கான பகுதிகள் உள்ளன. அவை சாய்வாக உள்ளன, மேலும் அவை ஒரு மலையில் உள்ளன. நான் என் அப்பத்தைப் பெற்றுக்கொண்டு அதை சாப்பிடுவேன். நான் மலைப் பிரசங்கத்தைப் பற்றி பேசும்போது, இயேசு மலையில் அமர்ந்திருக்கிறார், அதை சமவெளிப் பிரசங்கம் என்று சொல்வேன், அவை இரண்டும் ஒன்று தான், இது ஒரு தட்டையான இடம் ஆகும். இங்கே ஒரு இறுதி புள்ளி உள்ளது என்று நான் நினைக்கிறேன் - இயேசு அணுகக்கூடியவர் என்ற தோற்றத்தை லூக்கா நமக்குத் தர விரும்புகிறார், எனவே அவர் சமவெளியில் இருக்கிறார், அவர் எங்களுடன் இருக்கிறார் என்று விவரிக்கிறார். ***சீ***னாய் மலையில் உள்ள மோசேயைப் போல மலையில் இருக்கும் இயேசு அதிகாரமுள்ளவர் என்பதை நாம் பார்க்க வேண்டும் என்று மத்தேயு விரும்புகிறார். மேலும் இரண்டுக்கும் பதில் சொல்லலாம் என்று நினைக்கிறேன்.
>
> Dr. பீட்டர் வாக்கர்

சமவெளிப் பிரசங்கத்தில், ஏசாயா தீர்க்கதரிசனம் கூறிய அதே பெரிய தலைகீழ் மாற்றத்தை இயேசு வலியுறுத்தினார். எளிமையுள்ளவர்கள் ஆசீர்வதிக்கப்படுவார்கள். பசித்தவர் திருப்தியடைவார்கள். அழுபவர்கள் சிரிப்பார்கள். மேலும் ஆதரவற்றவர்களை தேவன் ஆசீர்வதிப்பார். ஆனால் நல்ல செய்தியானது ஒரு படி மேலே சென்றது. தம்மைப் பின்பற்றவும், தேவனுடைய ராஜ்யத்தின் தராதரங்கள் மற்றும் மதிப்புகளின்படி வாழவும் ஆசீர்வதிக்கப்பட்டவர்களை இயேசு அழைத்தார், அவை பெரும்பாலும் பூமிக்குரிய தரங்களிலிருந்து மிகவும் வேறுபட்டவை. உதாரணமாக, அந்நியர்களிடம் எச்சரிக்கையாக இருக்கவும் எதிரிகளை வெறுக்கவும் சொல்லும் உலக மதிப்புகளுக்கு மாறாக, அந்நியர்களையும் அவர்களின் எதிரிகளையும் கூட நேசிக்கும்படி அவர் அவர்களை அழைத்தார். எனவே, ராஜ்யத்தின் செய்தி ஆசீர்வாதம் மட்டுமல்ல, நெறிமுறை பொறுப்பும் ஆகும்.

சமவெளிப் பிரசங்கத்திற்குப் பிறகு, ஏசாயாவின் தீர்க்கதரிசனத்தை இயேசு நிறைவேற்றுகிறார் என்பதற்கு இன்னும் அதிகமான ஆதாரங்களுடன் இந்தப் பகுதியை லூக்கா முடித்தார். லூக்கா 7:1-10 இல் நூற்றுக்கு அதிபதியின்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

வேலைக்காரனை இயேசு குணப்படுத்தினார். மேலும் 7:11-16 இல், நாயீன் ஊரில் உள்ள ஒரு விதவையின் மரித்த மகனையும் எழுப்பினார்.

கலிலேயாவில் இயேசுவின் ஊழியத்திலிருந்து லூக்காவின் அடுத்த தகவல், லூக்கா 7:18-50 இல் உள்ள யோவான் ஸ்நானகனைச் சுற்றி வரும் கதைகளின் தொகுப்பாகும்.

## யோவான் ஸ்நானகன்

யோவான் ஸ்நானகன் சிறையில் அடைக்கப்பட்ட பிறகு, அவர் உண்மையிலேயே மேசியாவா என்று இயேசுவிடம் கேட்க சில சீஷர்களை அனுப்பினார். மேலும் இயேசு தாம் செய்ததை அவர்களுக்கு நினைவூட்டி பதிலளித்தார். இயேசுவின் அற்புதங்களும் பிரசங்கமும் ஏசாயா 61:1-2 இல் உள்ள தீர்க்கதரிசனங்களை தெளிவாக நிறைவேற்றின, எனவே அவைகள் இயேசுவே உண்மையில் மேசியா என்பதை நிரூபித்தன. லூக்கா 7:22 இல் யோவானின் சீஷர்களிடம் இயேசு கூறியதைக் கவனியுங்கள்:

> நீங்கள் போய், கண்டவைகளையும் கேட்டவைகளையும் யோவானுக்கு அறிவியுங்கள்: குருடர் பார்வையடைகிறார்கள், சப்பாணிகள் நடக்கிறார்கள், குஷ்டரோகிகள் சுத்தமாகிறார்கள், செவிடர் கேட்கிறார்கள், மரித்தோர் எழுந்திருக்கிறார்கள், தரித்திரருக்குச் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுகிறது (லூக்கா 7:22).

தீர்க்கதரிசிகளில் யோவான் மிகப் பெரியவன் என்று இயேசு தொடர்ந்து கூறினார். ஆனால் யோவான் கூட தேவனுடைய ராஜ்யத்தில் மிகச் சிறிய நபராக அளவிடப்படவில்லை. லூக்கா 7:47-50 இல் இந்த காரியத்தை பேசினார், இயேசு தனது கால்களைக் கழுவிய ஒழுக்கக்கேடான ஸ்திரீயின் பாவத்தை உண்மையில் மன்னித்தார் என்று விளக்கினார். யோவான் மன்னிப்புக்காக தேவனிடம் வேண்டுகோள் விடுத்து மனந்திரும்பி மக்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்தார், ஆனால் பாவிகளை மன்னிப்பதன் மூலமும், நோயாளிகளைக் குணப்படுத்துவதன் மூலமும், ஏழைகளுக்கு நற்செய்தியைப் பிரசங்கிப்பதன் மூலமும் இயேசு ராஜ்யத்தை மக்களின் தற்போதைய அனுபவத்தில் கொண்டு வந்தார்.

யோவான் ஸ்நானகனைச் சுற்றி வரும் கதைகளுக்குப் பிறகு, லூக்கா லூக்கா 8:1-56 இல் இயேசுவின் போதனைகள் மற்றும் அற்புதங்களைப் பற்றி மேலும் கூறினார்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

## போதனை மற்றும் அற்புதங்கள்

இந்த கூடுதல் போதனைகளிலும் அற்புதங்களிலும், இயேசு ராஜ்யத்தின் சுவிசேஷத்தில் கவனம் செலுத்தினார். லூக்கா 8:1-15 இல் உள்ள விதைப்பவனின் உவமையும், லூக்கா 8:16-18 இல் விளக்கின் உவமையும், விசுவாசத்திலும் கீழ்ப்படிதலிலும் ராஜ்யத்தின் செய்திக்கு பதிலளிப்பதன் முக்கியத்துவத்தை விவரித்தன. லூக்கா 8:19-21 இல் இதே கருப்பொருள்களை அவர் திரும்பத் திரும்பக் கூறினார், அவருடைய உண்மையான குடும்ப உறுப்பினர்கள் தேவனின் வார்த்தையைக் கேட்டு கீழ்ப்படிபவர்கள் என்று அவர் கூறினார்.

பின்னர், லூக்கா 8:22-56 இல், இயேசு கொண்டு வரும் இரட்சிப்பை உறுதிப்படுத்தும் மற்றும் நிரூபிக்கும் பல அற்புதங்களான இயேசு புயலை அடக்கியதையும், பிசாசை விரட்டியதையும், நோய்வாய்ப்பட்ட ஒரு பெண்ணைக் குணப்படுத்தியதையும், ஒரு பெண்ணை மரித்தோரிலிருந்து எழுப்பினதையும் லூக்கா அறிவித்தார்.

இறுதியாக, லூக்கா 9:1-50 இல் இயேசு பன்னிரண்டு அப்போஸ்தலர்களை ஊழியத்திற்கு தயார்படுத்தியதை அறிக்கை செய்வதன் மூலம் கலிலேயாவில் இயேசுவின் ஊழியம் பற்றிய தனது கணக்கை முடித்தார்.

## பன்னிரண்டு அப்போஸ்தலர்களின் ஆயத்தம்

முதலாவதாக, லூக்கா 9:1-9 ல், இயேசு தனது பன்னிரண்டு அப்போஸ்தலர்களை குணப்படுத்தவும், சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவும் அனுப்பினார். லூக்கா 6 இல் அவர் தனியாகப் பிரித்தெடுத்த அதே மனிதர்கள் இவர்களே. பின்னர் அவர் 9:10-17 இல் 5,000 பேருக்கு உணவளிப்பதன் மூலம் தனது வல்லமையை நிரூபித்தார், அவருடைய வல்லமை மற்றும் பராமரிப்பு மீது நம்பிக்கை வைக்க அவரது அப்போஸ்தலர்களுக்கு கற்பித்தார். இந்த ஏற்பாடுகள் லூக்கா 9:18-27 இல் உச்சக்கட்டத்தை அடைந்தன, அங்கு இயேசு நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்ட மேசியா அல்லது கிறிஸ்து என்று அப்போஸ்தலர்கள் ஒப்புக்கொண்டனர்.

இயேசு தனது அப்போஸ்தலர்களை ஊழியத்திற்குத் தயார்படுத்துவதைப் பற்றிய பல கதைகளுடன் இந்த பகுதியை லூக்கா முடித்தார், குறிப்பாக அவர் பரலோகத்திற்கு ஏறிய பிறகு அவர்கள் செய்யும் ஊழியத்தைப் பற்றி பேசினார். லூக்கா 9:28-36 இல் பேதுரு, யாக்கோபு மற்றும் யோவான் ஆகியோருக்கு முன்பாக இயேசு மறுரூபமானார், அங்கு பிதா பரலோகத்திலிருந்து இயேசுவுக்கான தங்கள் உறுதிப்பாட்டை உறுதிப்படுத்த பேசினார். பின்னர் இயேசு 9:37-45 இல் மிகவும் கடினமான பிசாசுகளை துரத்தினார், மேலும் 9:46-50 இல் ராஜ்யத்தில் இருக்கக்கூடிய மகத்துவத்தைப் பற்றி கற்பித்தார். இந்தக் கணக்குகள்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

அனைத்திலும், இயேசு தம்முடைய அதிகாரத்தை அங்கீகரிக்கவும், தம்முடைய வல்லமையை நம்பவும், அவருடைய நாமத்தில் பணிவான ஊழியர்களாக ஊழியம் செய்யவும் தம் சீஷர்களைத் தயார்படுத்தினார், அதனால் அவர்கள் பூமியில் தம்முடைய ராஜ்யத்தின் திறம்பட்ட தலைவர்களாக இருப்பார்கள்.

கலிலேயாவில் இயேசுவின் ஊழியத்திற்குப் பிறகு, லூக்கா சுவிசேஷத்தின் அடுத்த முக்கிய பகுதி இயேசுவின் எருசலேம் பயணத்தை விவரிக்கிறது. இந்தப் பகுதி லூக்கா 9:51–19:27 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

# இயேசுவின் எருசலேம் பயணம்

இந்த பகுதியில் ஐந்து முறை எருசலேமுக்குச் செல்வதற்கான இயேசுவின் உறுதியை லூக்கா குறிப்பிட்டார்: 9:51, 13:22, 17:11, 18:31 மற்றும் 19:28 இல். உதாரணமாக, லூக்கா 18:31-32 ஐக் கவனியுங்கள்:

> "நாங்கள் எருசலேமுக்குப் போகிறோம், மனுஷகுமாரனைக் குறித்து தீர்க்கதரிசிகளால் எழுதப்பட்டவை அனைத்தும் நிறைவேறும் இயேசு பன்னிருவரையும் தனியே அழைத்துச் சென்று அவர்களிடம் சொன்னார். அவர் புறஜாதிகளிடம் ஒப்படைக்கப்படுவார். அவர் புறஜாதியாரிடத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு, பரியாசமும் நிந்தையும் அடைந்து, துப்பப்படுவார்" (லூக்கா 18:31-32).

எருசலேமில் மரிக்க வேண்டியிருந்தாலும், தம் மக்களைக் இரட்சிக்கும் தேவனுடைய திட்டத்தில் இயேசு உறுதியாக இருந்தார் என்பதை இது போன்ற பகுதிகளின் மூலம் லூக்கா தெளிவுபடுத்தினார்.

இயேசுவின் எருசலேம் பயணத்தைப் பற்றிய லூக்காவின் விவாதத்தை நான்கு முக்கிய பகுதிகளாகப் பிரிப்போம்: முதலில், சீஷத்துவத்தின் தன்மை பற்றிய இயேசுவின் போதனை; இரண்டாவதாக, இயேசுவுக்கும் அவருடைய எதிரிகளுக்கும் இடையே அதிகரித்து வரும் மோதலைப் பற்றிய லூக்காவின் அறிக்கைகள்; மூன்றாவதாக, சீஷர்களின் செலவு பற்றிய இயேசுவின் போதனை; மற்றும் நான்காவது, தம் மக்களைக் காப்பாற்றும் தேவனின் திட்டத்திற்கு இயேசுவின் அர்ப்பணிப்பு. லூக்கா 9:51-11:13 இல் உள்ள சீஷத்துவத்தின் தன்மையை முதலில் பார்க்கலாம்.

## சீஷனின் இயல்பு

தேவனுடைய ராஜ்யத்தைக் கட்டியெழுப்பவும், தம்முடைய மக்களை இரட்சிக்கவும் இயேசுவின் அர்ப்பணிப்பு, ஊழியர்களின் தலைமைத்துவத்திற்காக



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

அவருடைய விசேஷித்த அப்போஸ்தலர்களைத் தேர்ந்தெடுத்துப் பயிற்றுவிக்க அவரை வழிநடத்தியது. லூக்கா 9:51-10:24 இல், சுவிசேஷம் சொல்வது எப்படி என்று அவர்களுக்குக் கற்றுக் கொடுத்தார், மேலும் அவர்களுக்கு வாழ்க்கை கடினமாக இருக்கும் என்று எச்சரித்தார். ஆனால் அவர் பரிசுத்த ஆவியால் அவர்களுக்கு அதிகாரம் அளித்தார். இந்த ஆயத்தத்திற்குப் பிறகு, அவர் பார்க்கத் திட்டமிட்ட நகரங்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க அவர்களை அனுப்பினார்.

இதைத் தொடர்ந்து, லூக்கா 10:25-11:13 இல், இயேசு அவர்களுக்கு சீஷத்துவம் தொடர்பான மூன்று தலைப்புகளான அயலார்களிடம் அன்பு, தேவன் மீதான அன்பு மற்றும் ஜெபம் ஆகியவற்றைக் கற்பிப்பதன் மூலம் அவர்களுக்கு ஒரு பரந்த உலகக் கண்ணோட்டத்தை வழங்கினார். இயேசு லூக்கா 10:27 இல் அன்பைப் பற்றிய தனது போதனைகளை இவ்வாறு சுருக்கமாகக் கூறினார்:

> ”உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு மனதோடும், உன் முழுப் பலத்தோடும் அன்புகூருவாயாக என்பதே பிரதான கற்பனை” (லூக்கா 10:27).

இங்கே, முழு பழைய ஏற்பாட்டு பிரமாணமும் தேவனையும் நம் அயலாரையும் எப்படி நேசிக்க வேண்டும் என்பதை நமக்குக் கற்பிக்கிறது என்பதை விளக்குவதற்காக இயேசு உபாகமம் 6:5 மற்றும் லேவியராகமம் 19:18 ஐ மேற்கோள் காட்டினார்.

அடுத்த இரண்டு பத்திகள் இந்த அன்பு பிரமாணத்தின் இரண்டு பகுதிகளை விளக்குகின்றன. லூக்கா 10:29-37 இல் உள்ள ”நல்ல சமாரியன்” உவமை, ஒருவரின் அயலானை எவ்வாறு நேசிப்பது என்பதை விளக்குகிறது. இருவர் குழுக்களிடையே பதற்றம் நிலவிய போதிலும், ஒரு சமாரியன் காயம்பட்ட இஸ்ரவேலனாகிய அயலானிடம் அன்பைக் காட்டியதைப் பற்றிய நன்கு அறியப்பட்ட கதை இது. அடுத்து, லூக்கா 10:38-42 இல், இயேசு மரியாளை சந்தித்தது, தேவனை எப்படி நேசிப்பது என்பதற்கு ஒரு உதாரணத்தை வழங்குகிறார். இயேசுவின் காலடியில் அமர்ந்து அவருடைய போதனைகளைக் கேட்பதன் மூலமும், நம் வாழ்வில் தேவனுக்கு முதலிடம் கொடுப்பதன் மூலமும், கீழ்ப்படிதலுடன் கேட்பதன் மூலமும் நாம் தேவனை நேசிக்க வேண்டும் என்பதை மரியாள் காட்டினாள்.

கடைசியாக, லூக்கா 11:1-13 இல் உள்ள ஜெபத்தைப் பற்றிய இயேசுவின் போதனையானது, தேவனுடைய ராஜ்யத்தின் வரங்கள் மற்றும் ஆசீர்வாதங்களுக்காக உண்மையாகவும் விடாமலும் ஜெபிக்கும்படி கற்பிப்பதன் மூலம் அப்போஸ்தலர்களுக்கு அவர் அளித்த அறிவுறுத்தலை முடித்தார்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

கிறிஸ்தவர்களுக்கு ஜெபம் மிகவும் முக்கியமானது. இது இயேசுவின் வாழ்க்கையின் ஒரு முக்கிய பகுதியாக இருந்தது, அவருடைய வாழ்க்கையின் உதாரணத்தின் மூலம் அதன் முக்கியத்துவத்தை நாம் காணலாம். அவருடைய வேலைச் சுமை எவ்வளவு அதிகமாகிறதோ, அவ்வளவு அதிகமாக அவர் ஜெபித்தார், மேலும் அவர் ஒய்வெடுக்கும்போது தேவனின் பலத்தை நாடினார். ஆவிக்குரிய ரீதியில் தன்னைப் புதுப்பித்துக் கொள்ள பிதாவுடன் தொடர்ந்து உரையாட வேண்டும் என்பதை அவர் உணர்ந்தார். அவர் தனது பன்னிரண்டு சீஷர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு முன், அவர்களில் ஒருவர் தன்னைக் காட்டிக் கொடுப்பார் என்பதை அறிந்த அவர் இரவு முழுவதும் ஜெபித்தார். உண்மையில், அவர் தம் சீஷர்களைத் தேர்ந்தெடுத்தபோது அவர் சிலுவையை எதிர்நோக்கிக் கொண்டிருந்தார். இந்த மிக முக்கியமான ஊழியத்தை நடத்துவதற்கு முன்பு இயேசு இரவு முழுவதும் ஜெபித்தார். இயேசுவின் ஜெப வாழ்க்கை நமக்கு ஒரு உதாரணம். பின்னர், ”பிதாவே, வானத்திற்கும் பூமிக்கும் ஆண்டவரே, நான் உம்மைப் போற்றுகிறேன், ஏனென்றால் நீர் ஞானிகளுக்கும் கற்றவர்களுக்கும் இவற்றை மறைத்து சிறிய குழந்தைகளு**க்கு** வெளிப்படுத்தினீர்” என்று அவருடைய சீஷர்கள் தங்கள் அற்புதமான செயல்களால் மகிழ்ச்சியுடன் திரும்பி வந்தபோது, இயேசு பிதாவை ஸ்தோத்தரித்தார். இயேசு பிதாவைத் துதித்தார், எனவே நாமும் அவரைப் போற்ற வேண்டும். இயேசுவே ஜெபித்து துதிக்கிறார் என்றால், நாம் இன்னும் அதிகமாக செய்ய வேண்டும். அவர் கைது செய்யப்படுவதற்கு முன்பு, அவர் கெத்செமனே தோட்டத்தில் ஊக்கமாக ஜெபித்து, இறுதியாக, “என் பிதாவே, உமக்கு சித்தமானால், இந்த பாத்திரம் என்னிடமிருந்து எடுக்கப்படட்டும்” என்றார். ”இருந்தாலும் என் சித்தமல்ல உம் சித்தம்” என்றார். ஆக, இயேசு பிதாவுக்கு முற்றிலும் பணிந்திருப்பதைக் காண்கிறோம். பிதாவுடனான உறவின் காரணமாக இயேசு ஜெபித்தார், மேலும் மனிதகுலத்திற்கான இரட்சிப்பின் திட்டத்தை முடிக்க விரும்பினார். தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் ஜெபம் செய்வதும் பிதாவின் சித்தத்திற்கு அடிபணிவதும் நம் வாழ்வில் முக்கியமானவை என்பதை அவருடைய உதாரணம் நமக்குக் கற்பிக்கிறது.

Dr. பீட்டர் சோவ், மொழிபெயர்ப்பு

நாம் ஜெபிக்கும் ஒவ்வொரு முறையும், அது கிறிஸ்துவின் மீது நமக்குள்ள நம்பிக்கையின் வெளிப்பாட்டையும் சுவிசேஷத்தில் இளைப்பாறுதலையும் குறிக்கிறது. இதனால் கிறிஸ்தவர்கள் ஜெபிப்பது முக்கியம் என்று நான் கூறுவேன். நம்முடைய பாவங்களுக்காக இயேசு மரித்ததால் தான் நாம் ஜெபிக்க முடிகிறது; தேவனின் சிங்காசனத்திற்கு முன்பாக நாம் செல்ல இயேசு உதவினார். ஜெபத்தில் நம்பிக்கையுடன் கிருபையின் சிங்காசனத்தை நாம் தைரியமாக அணுகலாம், ஏனென்றால் இயேசு நாம் அங்கு செல்வதற்கு ஒரு வழியை உருவாக்கியுள்ளார். எனவே, நாம் ஜெபிக்க வேண்டிய முதல் காரணம் அது சுவிசேஷத்தின் ஒரு பயிற்சியாகும். நாம் ஜெபிக்க வேண்டிய இரண்டாவது காரணம், அது எல்லாவற்றுக்கும் தேவனைச் சார்ந்திருப்பதன் வெளிப்பாடாகும். நம் அன்றாட அப்பத்தைக் கேட்டு, தன் குழந்தைகளை ஆசீர்வதிக்க விரும்பும் நம் தந்தையாக நாம் அவரிடம் வருகிறோம். ஆனால் இது நாம் அவரை வணங்குவதையும், அவருடைய மதிப்பை வெளிப்படுத்துவதையும், அவரை உயர்த்துவதையும், அவருடன் உரையாடுவதையும் குறிக்கிறது. ஜெபத்தில் உறுதியாய் தரித்திருக்க வேண்டும் என்று வேதம் சொல்கிறது. தேவனுடைய பிரசன்னத்தைப் பற்றிய தினசரி உணர்வோடு நாம் இருக்க வேண்டும். அவர் தேவன் என்ற உணர்வும் அவர் நம் வாழ்வில் முக்கியமானவராக இருக்கிறார் என்கிற உணர்வும் நமக்கு இருக்க வேண்டும்.

Dr. கே. எரிக் தோனேஸ்

ஜான் வெஸ்லி ஜெபத்தை தேவனிடம் நெருங்கி வருவதற்கான மகத்தான வழி என்று அழைத்தார், இது கிருபையின் முக்கிய வழிமுறையாகும். உண்மையில், நீங்கள் கிறிஸ்தவத்தின் வரலாற்றைப் பார்க்கும்போது, வேதத்தை வாசிப்பதும் ஜெபம் செய்வதும் இரண்டு பிரதான ஆவிக்குரிய ஒழுக்கங்கள் ஆகும். அது கிறிஸ்தவம் வளர்க்க விரும்பும் தேவனுடனான உறவை உருவாக்குகிற காரணத்தால் ஜெபம் மிகவும் முக்கியமானது என்று நான் நினைக்கிறேன். நாம் ஜெபிக்கும்போது, நாம் தேவனுடன் பேசுகிறோம், தேவன் நம்மிடம் சொல்வதைக் கேட்டுக்கொள்கிறோம், பிறகு நாம் கேட்பதற்குப் பதிலளிக்கிறோம். அதுதான் உறவுக்கு அடிப்படையாகும்.

> தேவனிடம் நல்ல உறவைக் கொண்டிருக்க வேண்டும் என்பதையே உண்மையில் தேவன் விரும்புகிறார். நீங்கள் ஆதியாகமத்திற்குத் திரும்பிச் சென்று, அங்கு தேவன் உண்மையில் தோட்டத்தில் நடந்து, ஆதாம் மற்றும் ஏவாளுடன் ஐக்கியம் கொள்ள தேடியதை கவனியுங்கள். ஜெபம் என்பது தேவனுடன் நடக்கவும் பேசுவதற்குமான ஒரு வழியாகிறது. "அவர் என்னுடன் நடக்கிறார், என்னுடன் பேசுகிறார், நான் அவருக்கு சொந்த**மானவன்**" என்கிற பழைய பாடலை நினைவு கூருங்கள். அதாவது, நீங்கள் ஜெபிக்கும்போது கிறிஸ்தவம் எதை நோக்கமாகக் கொண்டுள்ளது என்பதை நீங்கள் புரிந்துகொள்கிறீர்கள், ஏனென்றால் அது தொடர்பு படுத்தக்கூடியதாக இருக்கிறது.
>
> Dr. ஸ்டீவ் ஹார்ப்பர்

சீஷத்துவத்தின் இயல்பைப் பற்றிய இயேசுவின் போதனைக்குப் பிறகு, லூக்கா 11:14-15:32 இல் இயேசுவுக்கும் யூதத் தலைவர்களுக்கும் இடையே அதிகரித்து வரும் மோதலை வலியுறுத்தினார்.

## அதிகரிக்கும் மோதல்

தனது பயணத்தின் இந்த பகுதியில், இயேசு குறைந்தபட்சம் மூன்று காரணங்களுக்காக யூத தலைமையை வேண்டுமென்றே பகைத்தார். முதலாவதாக, தேவனுடைய மக்களின் மோசமான தலைமையை அவர் கண்டிக்க விரும்பினார். இரண்டாவதாக, அவர் மக்களை தனது சொந்த ராஜ்யத்திற்கு அழைக்க விரும்பினார். மூன்றாவதாக, அவர்கள் எருசலேமில் அவரை சிலுவையில் அறைய வேண்டும் என்று அவர் விரும்பினார், இதனால் அவர் தனது மக்களின் பாவங்களுக்காக இரட்சிக்கும் பரிகாரம் செய்து, அவர்களை ராஜரிகம் செய்ய முடிந்தது.

உதாரணமாக, லூக்கா 11:14-28 இல், யூதர்கள் இயேசுவை "பிசாசுகளின் தலைவன்" என்று கூறினர். மேலும் இயேசு 29-53 வசனங்களில் அவர்களுடைய அக்கிரமத்தைக் கண்டனம் செய்து அவர்கள் மீது நியாயத்தீர்ப்பு வரும் என்று சொன்னார்.

லூக்கா 12:1-3 ல், பரிசேயர்களைப் போல் மாய்மாலக்காரர்களாக இருக்க வேண்டாம் என்று இயேசு மக்களை எச்சரித்தார். வசனங்கள் 4-21 இல், அவர் யூத ஜெப ஆலயங்கள், ஆட்சியாளர்கள் மற்றும் அதிகாரிகளின் நடைமுறைகளைத் தாக்கினார். வசனங்கள் 22-32 இல், தேவனுடைய ராஜ்யத்தைத் தேடும்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

ஒவ்வொருவரின் தேவைகளையும் தேவன் பூர்த்தி செய்வார் என்று அவர் வலியுறுத்தினார், அதனால் அவர்கள் யூத தலைமையைப் போல உலக செல்வத்தைத் தேட வேண்டிய அவசியமில்லை. 33-59 வசனங்களில், தேவனுடைய ராஜ்யத்தை விரும்பாதவர்களுடன் தம்மைப் பின்பற்றுபவர்களுக்கு மோதல் உண்டாகும் என்று இயேசு எச்சரித்தார்.

லூக்கா 13:1-9 இல், இயேசு யூதத் தலைமையை தொடர்ந்து பகைத்து, எல்லா இஸ்ரவேலர்களையும் தங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பும்படி அழைத்தார். பின்னர் 10-17 வசனங்களில், ஒய்வுநாளில் ஒரு ஊனமுற்ற பெண்ணைக் குணப்படுத்துவதன் மூலம் அவர் மோதலை அதிகப்படுத்தினார், இது ஜெப ஆலயத்தின் தலைவரை பெரிதும் கோபப்படுத்தியது. மேலும் 18-30 வசனங்களில், முக்கிய யூதத் தலைமையையும் அவர்களைப் பின்பற்றுபவர்களையும் தெளிவாகக் கண்டித்து, அவர்கள் அனுமதிக்கப்படுவார்கள் என்று நினைத்த பலரால் தேவனுடைய ராஜ்யத்தில் நுழைய முடியாது என்று இயேசு கற்பித்தார். இறுதியாக, 31-35 வசனங்களில், இயேசுவுக்கும் யூத ராஜா ஏரோதுக்கும் இடையே பதற்றம் அதிகரித்து வருவதாகவும், அவர் இப்போது அவரைக் கொல்லத் திட்டமிட்டுள்ளதாகவும் லூக்கா அறிவித்தார்.

லூக்கா 14 இல், இயேசு யூத தலைமையை மேலும் கோபப்படுத்தினார். வசனங்கள் 1-24 இல், அவர் ஒய்வுநாளில் ஒரு மனிதனைக் குணப்படுத்தினார், பின்னர் யூதத் தலைவர்களின் உலகப்பிரகாரமான காரியங்களை விமர்சித்தார். அவர்களில் ஒருவர் கூட தேவனுடைய ராஜ்யத்தை சுதந்தரிக்கப் போவதில்லை என்றார். பின்னர் 25-34 வசனங்களில், இயேசு தம்மைப் பின்பற்றுபவர்களை எச்சரித்தார், தம்மை எதிர்ப்பவர்களிடமிருந்து அவர்கள் சந்திக்கும் மோதலின் விளைவாக இந்த வாழ்க்கையில் எல்லாவற்றையும் இழக்க நேரிடும் என்றார்.

15:1-2 இல் ஒரு அறிமுகத்திற்குப் பிறகு, காணாமல் போன ஆடு, தொலைந்த காசு மற்றும் இளைய குமாரன் ஆகியவற்றைப் பற்றிய தனது உவமைகள் மூலம் இயேசு மீண்டும் யூதத் தலைவர்களுடன் மோதலைத் தொடர்ந்தார். ஒவ்வொரு கதையிலும், பரிசேயர்கள் மற்றும் நியாயப்பிரமாண ஆசிரியர்களின் மாய்மாலமான தனித்துவத்தை நிராகரிக்கும்படி இயேசு தம் மக்களை அழைத்தார், மேலும் உலகில் இழந்த பாவிகளின் மத்தியில் தேவன் தனது பிள்ளைகளைக் கண்டால் மகிழ்ச்சியடைய வேண்டும் என்றும் சொன்னார்.

சீஷர்களின் தன்மை மற்றும் யூதத் தலைவர்களுடனான அவரது அதிகரித்து வரும் மோதல்கள் பற்றிய இயேசுவின் போதனைகளைப் பேசிய பிறகு, லூக்கா லூக்கா 16: 1-18: 30 இல் இயேசு எருசலேமுக்கு பயணம் செய்ததைப் பற்றியதில் கவனம் செலுத்தினார்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

## சீஷத்துவத்தின் விலை

தம்முடைய ராஜ்யத்தில் தங்களுடைய சொந்த வாழ்க்கை அவருடைய சொந்த வாழ்க்கையின் மாதிரியாக இருக்கும் என்பதை தம்மைப் பின்பற்றுபவர்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்று இயேசு விரும்பினார். அவர்கள் உலகத் தலைவர்களால் துன்புறுத்தப்படுவார்கள், மேலும் தேவனுக்கு உண்மையாக இருக்க போராடுவார்கள். 16:1–17:10 லிருந்து, சீஷத்துவம் என்பது நமக்குச் சொந்தமான அனைத்தையும் தேவனின் உடைமையாகக் கருதுவதை உள்ளடக்கியது என்று இயேசு கற்பித்தார், அவர் தனது காரியதரிசிகளாக அதை நம்மிடம் ஒப்படைத்துள்ளார், அதை முழுவதுமாக அவருடைய நோக்கங்களுக்காகப் பயன்படுத்த வேண்டும். பூமிக்குரிய ஆசீர்வாதங்கள் ஒரு முட்டுக்கட்டையாக இருக்கும் என்றும், பணக்காரர்கள் உண்மையான சுவிசேஷத்தை அங்கீகரிப்பதை அது தடுக்கும் என்றும் அவர் எச்சரித்தார். கடைசியாக, அவர் விசுவாசத்தையும் மனந்திரும்புதலையும் ஊக்குவித்தார், நாம் எவ்வளவு நல்லதைச் செய்தாலும், நம்முடைய மிகச் சிறந்தவை தேவன் நம்மிடம் எதிர்பார்ப்பதை விட அதிகமாக இல்லை என்று சொன்னார்.

17:11-18:8 இல், இயேசு இந்த உலகத்தின் மீதான இறுதி நியாயத்தீர்ப்பில் கவனம் செலுத்தினார். இந்த வாழ்க்கையில் நாம் பெறும் நல்ல விஷயங்களான ஆரோக்கியம், உடைமைகள் மற்றும் நீதி ஆகியவை தேவனின் நற்குணத்தை நம்மைக் காண வைக்க வேண்டும், மேலும் இந்த வாழ்க்கையில் அவர் நம்மை ஆசீர்வதிக்க வேண்டும் என்று நாம் ஜெபிக்க வேண்டும். ஆனால் அவர்கள் இன்னும் இறுதித் தீர்ப்பில் அழிந்து போக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். உண்மையான செல்வம், ஆரோக்கியம் மற்றும் நீதி ஆகியவை தேவனின் நித்திய ராஜ்யத்தில் வெகுமதிகளாக மட்டுமே வருகின்றன, எனவே அதில் தான் நம் நம்பிக்கை இருக்க வேண்டும்.

இந்தக் கருத்துக்களுக்கு ஏற்ப, தாழ்மையுள்ளவர்கள் மட்டுமே தேவனின் மன்னிப்பையும் ஆசீர்வாதத்தையும் பெற்று நித்திய ஜீவனைப் பெறுவார்கள் என்பதால், மனத்தாழ்மையின் அவசியத்தை வலியுறுத்தி லூக்கா 18:9-30ல் இந்தப் பகுதியை இயேசு முடித்தார்.

லூக்கா 18:31-19:27 இல் தம் மக்களை இரட்சிக்கும் தேவனுடைய திட்டத்திற்கு அவரின் அர்ப்பணிப்பை வலியுறுத்துவதன் மூலம் இயேசுவின் எருசலேம் பயணத்தின் பதிவை லூக்கா முடித்தார்.

## இயேசுவின் அர்ப்பணிப்பு

லூக்கா 18:31-34 இல் தனது சொந்த மரணத்தை முன்னறிவிப்பதன் மூலம் தேவனின் திட்டத்திற்கு இயேசு தனது அர்ப்பணிப்பை முதலில் காட்டினார். தம்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

மக்களைக் காப்பாற்ற தாம் மரிக்க வேண்டும் என்பதை இயேசு அறிந்திருந்தார், மேலும் அவர் தனது பிதாவின் திட்டத்தைப் பின்பற்றத் தீர்மானித்தார்.

இதைத் தொடர்ந்து, லூக்கா 18:35-43 இல் அவர் குணமாக்கிய குருடர் மற்றும் லூக்கா 19:1-10 இல் அவர் அழைத்த வரி வசூலிப்பவரான சகேயு போன்றவர்களை ஆசீர்வதிப்பதன் மூலம் தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்திற்கான தனது உறுதிப்பாட்டை இயேசு வெளிப்படுத்தினார். இந்த மக்கள் பொதுவாக சமூகத்தால் நிராகரிக்கப்பட்டனர். ஆனால் ஏசாயா 61:1-2 இன் வாக்குத்தத்தத்தின் படி, அவர்கள் தேவனுடைய ராஜ்யத்தில் ஒரு பெரிய சுதந்தரத்தைப் பெறப் போகிறார்கள். லூக்கா 19:9-10 இல் சகேயுவைப் பற்றி இயேசு கூறியது போல்:

> இயேசு அவனை நோக்கி: இன்றைக்கு இந்த வீட்டுக்கு இரட்சிப்பு வந்தது; இவனும் ஆபிரகாமுக்குக் குமாரனாயிருக்கிறானே. இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்திருக்கிறார் (லூக்கா 19:9-10).

கடைசியாக, லூக்கா 19:11-27 இல், இயேசு தாம் வெளியில் இருந்தபோது தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட ராஜாவின் வேலையாட்களைப் பற்றிய உவமையைக் கூறினார். தேவனுடைய ராஜ்யத்தில் நாம் ஒரு சுதந்தரத்தைப் பெற விரும்பினால், இயேசுவைப் போலவே நாமும் தேவனுடைய திட்டத்தில் உறுதியுடன் இருக்க வேண்டும் என்பதை இந்த உவமை நிரூபித்தது.

இயேசுவின் எருசலேம் பயணத்தை விவரித்த பிறகு, எருசலேமில் இயேசுவின் ஊழியத்தை லூக்கா அறிவித்தார். இது லூக்கா சுவிசேஷத்தின் ஐந்தாவது பெரிய பகுதி, இது 19:28–21:38 வரை நீண்டுள்ளது.

## எருசலேமிலும் அதன் அருகிலும் இயேசுவின் ஊழியம்

எருசலேமில் இயேசுவின் ஊழியத்தைப் பற்றிய லூக்காவின் அறிக்கை லூக்கா 19:28-44 இல் தொடங்குகிறது, இயேசு எருசலேமுக்குள் நுழைந்தார், மக்கள் அவரை ஆரவாரம் மற்றும் புகழுடன் வரவேற்றனர். நகரத்திற்குள் நுழைந்ததைத் தொடர்ந்து, இயேசுவின் முதல் செயல் வணிகர்களை விரட்டி ஆலயத்தை சுத்தப்படுத்துவதாகும். இந்த நிகழ்வு லூக்கா 19:45-46 இல் காணப்படுகிறது. இந்த சுத்திகரிப்பு யூத வழிபாட்டையும் வாழ்க்கையையும் சீரழித்த பாவமான பழக்கவழக்கங்களை கண்டித்தது, இதன் மூலம் இது யூத தலைமையை பெரிதும் அவமதித்தது.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

புதிய ஏற்பாட்டில் உள்ள பல போதனைகளைப் புரிந்துகொள்வது போலவே, இயேசுவின் ஆலய சுத்திகரிப்பு நிகழ்வுகளைப் புரிந்து கொள்ள பழைய ஏற்பாட்டின் வரலாற்றுப் பின்னணி நமக்குத் தேவை. நாம் பழைய ஏற்பாட்டை மீண்டும் பார்க்க வேண்டும். 1 ராஜாக்கள் புத்தகம், அதிகாரம் 8, தேவாலயத்தின் பிரதிஷ்டையைப் பதிவு செய்கிறது. இந்த ஆலயம் பல ஆண்டுகளாக கட்டப்பட்டு வந்தது. அது முடிந்ததும், சாலொமோன் ராஜாவும் இஸ்ரவேலர்களும் ஆலயத்தைப் பிரதிஷ்டை செய்ய வந்தனர். சாலொமோன் ராஜா தேவனிடம், “உம்முடைய ஊழியக்காரரும் உமது ஜனமாகிய இஸ்ரவேலர்களும் இவ்விடத்தை நோக்கி ஜெபிக்கும்போது அவர்களுடைய விண்ணப்பத்தைக் கேளும். உம் வாசஸ்தலமான பரலோகத்திலிருந்து கேளும், நீர் கேட்கும்போது மன்னியும்” என்று ஜெபித்தார். அதோடு, தேவனுடைய மகத்தான நாமத்தைக் கேட்ட வெளி தேசத்தார், தேவாலயத்தை நோக்கி ஜெபிக்க தூர தேசத்திலிருந்து வந்தபோது, பூமியிலுள்ள எல்லா ஜனங்களும் தேவனின் நாமத்தை அறிந்து அவருக்குப் பயப்பட வேண்டும் என்று சாலொமோன் ராஜாவும் ஜெபித்தார். மேலும் தேவாலயம் தேவனுடைய நாமத்திற்காகக் கட்டப்பட்டது என்பதை அவர்கள் அறிவார்கள். எனவே, இயேசுவின் காலத்தில், மத தலைவர்கள் தேவாலயத்தைக் கொள்ளையர்களின் குகையாக மாற்றியபோது, அது தேவனின் நாமத்தைக் களங்கப்படுத்தியது, ஏனெனில் தேவாலயம் தேவனுடைய நாமத்துடன் தொடர்புடையது. மேலும், இயேசு தேவாலயத்தைச் சுத்தப்படுத்தியபோது, அதற்கு ஒரு அடையாள அர்த்தமும் இருந்தது. தேவாலயம் இயேசுவையே சுட்டிக் காட்டியது, ஏனென்றால் அவர் உண்மையான மற்றும் இறுதி ஆலயம் ஆவார். இயேசுவின் நாமத்தில் நாம் ஜெபிப்பதால், ஜெபிக்க வரும் அனைத்து தேசத்தாருக்கும் இயேசு ஆலயமாக இருக்கிறார். எனவே, பழைய ஏற்பாட்டின் வெளிச்சத்தில் ஆலயத்தைப் புரிந்து கொண்டால், இயேசு ஆலயத்தைத் தூய்மைப்படுத்தியதன் முக்கியத்துவத்தையும், தேவனுடைய ராஜ்யம் வருவதற்கும் உள்ள தொடர்பையும் பார்க்கலாம்.

Dr. பீட்டர் சோவ், மொழிபெயர்ப்பு



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> ஆலயத்தில் புறஜாதிகள் வந்து சிருஷ்டிகரின் பிரசன்னத்தில் இருக்க முடியும். அனைத்து தேசத்தாரும் அங்கு வரலாம். அவர்கள் ஆலயத்தின் உள் பகுதிக்குள் செல்ல முடியாது, அது யூதர்களுக்கு மட்டுமானது, ஆனால் வெளிப்பிரகாரம் தேசங்களுக்கானது, புறஜாதியார்களுக்கானது. அவர்கள் அங்கு வந்து ஜெபிக்கலாம். நாம் பார்ப்பது என்னவென்றால், ஜெபிக்க அங்கு இடமில்லை. அந்த இடத்தின் உண்மையான நோக்கத்தின் அடிப்படையில் புறஜாதிகளுக்கு இடமில்லை. இது தான் இயேசுவை மிக வருத்தப்பட வைத்த காரியமாகும். எனவே, நாம் பார்ப்பது என்னவென்றால், இயேசு ஆலயத்தை மீட்டெடுக்கிறார், மேலும் அந்த இடத்தில் தேசங்கள் வந்து ஜெபிக்க முடியும் என்பதற்காக அந்த இடத்தை அகற்றுவதன் மூலம் அந்த இடத்தின் செயல்பாட்டை மீட்டெடுக்கிறார்.
>
> Dr. கிரிகோரி ஆர். பெர்ரி

லூக்கா 19:47-21:38 இல் நாம் வாசிக்கிறபடி, இயேசு அடுத்த சில நாட்களும் ஆலயங்களில் போதித்து, தேவனுடைய ராஜ்யத்தைப் பற்றிப் பேசினார். இந்த நேரத்தில், யூதத் தலைவர்களுடனான அவரது மோதல் தீவிரமடைந்தது, அவர் தொடர்ந்து அவர்களின் நடைமுறைகளைக் கண்டித்து, அவருடைய அதிகாரத்தை அவர்கள் தொடர்ந்து சவால் செய்தனர். லூக்கா 20:20 இல் வேத போதகர்களும் பிரதான ஆசாரியர்களும் செய்ததைக் கவனியுங்கள்.

> அவர்கள் சமயம்பார்த்து, தேசாதிபதியின் ஆளுகைக்கும் அதிகாரத்துக்கும் அவரை ஒப்புக்கொடுக்கும்படி அவருடைய பேச்சிலே குற்றங்கண்டுபிடிக்கலாமென்று, தங்களை உண்மையுள்ளவர்களாய்க் காண்பிக்கிற வேவுகாரரை அவரிடத்தில் அனுப்பினார்கள் (லூக்கா 20:20).

ஆனால், பொல்லாத மனிதர்கள் அவரைப் பிடிக்க முயன்றதால் இயேசு சத்தியத்தைப் பிரசங்கிப்பதை நிறுத்தவில்லை. மாறாக, வெளிப்படையாகவே அவர்களைக் கண்டித்தார். லூக்கா 20:46-47 இல் அவர் கூட்டத்தினரிடம் கூறியது போல்:

> நீண்ட அங்கிகளைத் தரித்துக்கொண்டு திரியவும், சந்தை வெளிகளில் வந்தனங்களை அடையவும், ஜெபஆலயங்களில் முதன்மையான ஆசனங்களில் உட்காரவும், விருந்துகளில் முதன்மையான இடங்களில் இருக்கவும் விரும்பி,



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> விதவைகளின் வீடுகளைப் பட்சித்து, பார்வைக்கு நீண்ட ஜெபம்பண்ணுகிற வேதபாரகரைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள், அவர்கள் அதிக ஆக்கினையை அடைவார்கள் (லூக்கா 20:46-47).

இயேசு எருசலேமை நெருங்கியபோது, இஸ்ரவேலர்கள் அவரை இரட்சிக்கும் மேசியாவாக ஏற்றுக்கொள்ள மறுத்ததால் நகரத்தின் அழிவை தீர்க்கதரிசனமாக சொன்னார். ஆனால் இந்த பேரழிவு கூட பெரிய நியாயத்தீர்ப்பின் முன்னறிவிப்பாக மட்டுமே இருக்கும். கடைசி நாளில், இயேசு மகிமையில் திரும்பும்போது, எல்லோரும் அவருக்கு முன்பாக கணக்கு கொடுப்பார்கள். இந்த காரணத்திற்காக, இயேசு ஒவ்வொரு காலகட்டத்திலும் தம்முடைய சீஷர்களை தமக்கு விடாமல் கீழ்ப்படிவதற்கும், அவருடைய வருகையை கவனமாகக் கவனிக்கும்படி அழைக்கிறார்.

எருசலேமில் இயேசுவின் ஊழியத்தைப் பற்றிப் பேசிய பிறகு, லூக்கா சுவிசேஷத்தின் கடைசி முக்கிய பகுதியான லூக்கா 22:1–24:53 இல் எருசலேமுக்கு வெளியே இயேசு சிலுவையில் அறையப்பட்டு உயிர்த்தெழுதல் பற்றிய விவரிப்பைக் காண்கிறோம்.

# இயேசு சிலுவையில் அறையப்படுதல் மற்றும் உயிர்த்தெழுதல்

லூக்கா தனது சுவிசேஷத்தின் இந்த பகுதியில், இயேசு உண்மையில் தனது மக்களுக்கு எவ்வாறு இரட்சிப்பைத் தந்தார் என்பதை விளக்கினார். பாவநிவாரண பலியாகத் தம்மை அர்ப்பணம் செய்து பரலோகப் பிதாவின் திட்டத்தை நிறைவேற்றினார். அவருடைய தந்தையான தாவீதின் சிங்காசனம் அவருக்கு கொடுக்கப்பட்டது, அதனால் அவர் இப்போது தனது மக்களை அவர்களின் ராஜாவாக ஆட்சி செய்கிறார்.

இயேசு சிலுவையில் அறையப்படுதல் மற்றும் உயிர்த்தெழுதல் பற்றிய லூக்காவின் அறிக்கையை இயேசுவின் கைது, விசாரணை மற்றும் மரணம் மற்றும் அவரது உயிர்த்தெழுதல் மற்றும் பரமேறுதல் என்று இரண்டு பகுதிகளாகப் பிரிக்கலாம். லூக்கா 22:1-23:56 இல் இயேசுவின் கைது, விசாரணை மற்றும் மரணத்தை முதலில் பார்ப்போம்.

## கைது, விசாரணை மற்றும் மரணம்

இயேசுவின் கைது, விசாரணை மற்றும் மரணம் பற்றிய பதிவு லூக்கா 22:1-6 இல் இயேசுவைக் காட்டிக்கொடுக்கும் சதியுடன் தொடங்குகிறது. பின்னர், 7-38



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

வசனங்களில் பதிவுசெய்யப்பட்ட கடைசி இராப் போஜனத்தின் போது, யூதாஸின் காட்டிக்கொடுப்பைப் பற்றி இயேசு தீர்க்கதரிசனம் கூறினார், அதே போல் தான் இயேசுவைப் பின்தொடர்ந்ததை பேதுரு மறுதலிப்பதையும் தீர்க்கதரிசனமாகக் கூறினார். ஆனால் இந்த இருண்ட கணிப்புகளுக்கு நடுவில், அவர் தனது ராஜ்யத்தில் சீஷர்களுக்கு அவர்களின் இடத்தை கொடுப்பதாகவும், இந்த நிகழ்வுகள் அனைத்தையும் தனது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதையும் உறுதி செய்தார்.

கடைசி இராப்போஜனத்தைத் தொடர்ந்து, லூக்கா 22:39-46 இல் ஒலிவ மலையில் இயேசுவின் ஜெபத்தைக் காண்கிறோம். இந்த ஜெபத்தின் போது இயேசு மிகுந்த வேதனையில் இருந்தார், அவர் இரத்தம் வியர்வையாக இருப்பதையும், முடிந்தால், சிலுவையில் அறையப்படுவதைத் தவிர்க்க பிதா எப்படியாவது அனுமதிக்க வேண்டும் என்ற அவரது விருப்பத்தின் மூலம் நாம் பார்க்க முடியும். ஆனால் இவை அனைத்தின் மூலமாகவும், பரலோகப் பிதா மீதுள்ள வலுவான நம்பிக்கையிலோ அல்லது பிதாவின் திட்டத்திற்கு அவர் அர்ப்பணிப்பதிலோ இயேசு ஒருபோதும் தளரவில்லை.

லூக்கா 22:47-53 இல் இயேசுவின் கைது, 54-62 வசனங்களில் உள்ள பேதுருவின் மறுதலித்தல் ஆகிய நிகழ்வுகளையும், 22:63-23:25 இல் யூதத் தலைவர்களான பிலாத்து மற்றும் ஏரோது ஆகியோருக்கு முன்பாக இயேசுவின் சோதனைகளையும் இயக்குகிறது. ஏரோது மற்றும் பிலாத்து இருவரும் ரோமுக்கு எதிராக மரணத்திற்கு தகுதியான எந்த குற்றத்திலும் இயேசு குற்றமற்றவர் என்று கண்டறிந்தனர். இருப்பினும், பிலாத்து யூத தலைவர்கள் மற்றும் கூட்டத்தின் அழுத்தத்திற்கு அடிபணிந்தார், மேலும் அப்பாவி இயேசுவை சிலுவையில் அறைய வேண்டும் என்று கண்டனம் செய்தார்.

> இயேசுவின் விசாரணை மற்றும் அவரது மரணத்தின் போது மக்கள் கூட்டம் அவருக்கு எப்படி பதிலளித்தார்கள் என்பது பற்றி சுவிசேஷங்களைப் படிக்கும்போது மக்கள் சில சமயங்களில் குழப்பமடைகிறார்கள். ஒரு பதில் என்னவென்றால், மனித பாவத்தின் ஆழத்தை நாம் மனதில் கொள்ள வேண்டும், மக்கள் மிகவும் பாவமுள்ளவர்கள், நாம் அநீதிக்கு ஆளாகிறோம். மேலும், கூட்டத்தின் உணர்வுகளுக்குள் கொண்டு செல்லப்படுவதற்கும், தவறுகளைச் செய்வதற்கும் நாம் வாய்ப்புள்ளவர்களாக இருக்கிறோம், ஏனெனில் அந்த நேரத்தில் அது நம்மை மிகவும் வசதியாக அல்லது மிகவும் பிரபலமாக்கும் என்கிற நினைப்பு நமக்கு இருக்கக்கூடாது. இல்லையென்றால் நாம் ஏமாற்றப்பட்டு தவறு செய்து **விடு**வோ**ம்**. இயேசுவின் விசாரணையில் அதில் ஒரு கூறு இருந்திருக்கலாம்

> என்று நான் நினைக்கிறேன். நாம் மனதில் கொள்ள வேண்டிய மற்றொரு விஷயம் என்னவென்றால், அங்கே இருந்த கூட்டத்தினர் அநேகமாக இயேசுவுக்கு எதிராக மிகவும் உறுதியாக இருந்த பரிசேயர்களுடன் உண்மையில் உடன்படும் மக்கள் கூட்டமாக இருக்கலாம். இயேசுவுக்குப் பயந்த பிரதான ஆசாரியர்கள் ரோமர்கள் தங்கள் அதிகாரத்தை எடுத்துவிடுவார்கள் என்று பயந்தார்கள்; அவர்கள் இயேசுவுக்கு ஏதாவது செய்யவில்லை என்றால் அவர்கள் அரசியல் ரீதியாக ரோமர்களுடன் சிக்கலில் சிக்குவார்கள். அவர்களின் மிகவும் கோழைத்தனமான நடவடிக்கைகள் ஒரு புறம் இருந்தன. தைரியமற்ற மனிதர்களாக அவர்கள் இல்லை. இயேசுவை எதிர்ப்பதில் இறையியல் ரீதியாக தவறாக வழிநடத்தப்பட்ட பரிசேயர்களின் செயல்களை நாம் காண முடியும். எனவே, கூடியிருந்த மக்கள் அனைவரும் அவரை எதிர்த்தவர்கள் அல்ல, ஆனால் அவர்கள் இயேசுவை எதிர்த்தவர்களுடன் ஒத்துப்போன ஒரு குறிப்பிட்ட மக்கள் குழுவாக இருந்தனர். ஆரம்பகால கிறிஸ்தவர்கள், சபையின் ஆரம்ப நாட்களில் உண்மையில் யூதர்கள் என்பதையும், அப்போஸ்தலர்கள் யூதர்கள் என்பதையும், இயேசுவே ஒரு யூதர் என்பதையும் நாம் அறிவோம். பல யூதர்கள் இயேசுவோடு நேர்மறையாக இருந்ததையும் நாம் நினைவில் கொள்வது மிகவும் அவசியம். சிலுவையில் அவருடைய மரணத்திற்காக கூக்குரலிட்டவர்கள் அநேகமாக இயேசுவின் ஊழியத்தின் போது இயேசுவோடு தொடர்பு கொண்டவர்களில் ஒரு சிறிய துணைக்குழுவாக இருக்கலாம்.
>
> Dr. ப்ரான்க் தீல்மேன்

சுவாரஸ்யமாக, இயேசுவின் கைது மற்றும் சோதனைகள் பற்றிய லூக்காவின் விவரிப்பு இயேசுவின் வரவிருக்கும் மரணத்தில் கவனம் செலுத்தவில்லை, மாறாக அவர் கிறிஸ்து என்பதை அடையாளம் காட்டுவதில் கவனம் செலுத்தப்பட்டது. லூக்கா 22:67-70 இல் இயேசுவுக்கும் யூதத் தலைவர்களுக்கும் இடையேயான இந்த பரிமாற்றத்தைக் கவனியுங்கள்:

> ”நீ கிறிஸ்துவா?” அதை ”எங்களுக்குச் சொல்” என்றார்கள். அதற்கு அவர்: ”நான் உங்களுக்குச் சொன்னாலும் நம்பமாட்டீர்கள். இதுமுதல் மனுஷகுமாரன் சர்வவல்லமையுள்ள தேவனுடைய வலதுபாரிசத்தில்

> வீற்றிருப்பார்." அதற்கு அவர்களெல்லாரும்: அப்படியானால், நீ தேவனுடைய குமாரனா?" என்று கேட்டார்கள். அதற்கு அவர்: "நீங்கள் சொல்லுகிறபடியே நான் அவர்தான்" என்றார் (லூக்கா 22:67-70).

இந்த வேத பகுதியில், இயேசு தன்னை கிறிஸ்து, மனித குமாரன் மற்றும் தேவ குமாரன் என்று அடையாளம் காட்டினார். இந்த வார்த்தைகள் அனைத்தும் பழைய ஏற்பாட்டில் தீர்க்கதரிசனமாக கூறப்பட்ட மேசியாவைக் குறிப்பிடுகின்றன.

அவருடைய சோதனைகளைத் தொடர்ந்து, இயேசு சிலுவையில் அறையப்பட்டது லூக்கா 23:26-49 இல் விவரிக்கப்பட்டுள்ளது. வசனங்கள் 43 மற்றும் 46 இல், இயேசு சிலுவையில் இருந்து பேசிய வார்த்தைகளை லூக்கா இரண்டு முறை மேற்கோள் காட்டினார், மற்ற சுவிசேஷ எழுத்தாளர்கள் யாரும் நமக்காக அப்படிச் செய்யவில்லை. இந்த வார்த்தைகள் லூக்கா தனது சுவிசேஷத்தில் பலமுறை கூறிய இரண்டு குறிப்புகளை வலியுறுத்துகின்றன: முதலாவதாக, ஆதரவற்றவர்களுக்காக இயேசு இரக்கப்பட்டார்; இரண்டாவதாக, இந்த நிகழ்வுகள் அனைத்தையும் கட்டுப்பாட்டில் வைத்திருந்த தம் பிதாவை இயேசு விசுவாசித்தார். லூக்கா 23:43 இல், இயேசு சிலுவையில் இருந்த திருடனுக்கு இரக்கத்துடன் பதிலளித்தார், இந்த வார்த்தைகளால் அவருக்கு ஆறுதல் கூறினார்:

> இயேசு அவனை நோக்கி: இன்றைக்கு நீ என்னுடனேகூடப் பரதீசிலிருப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார் (லூக்கா 23:43).

மேலும் வசனம் 46 இல், இயேசு தம் பிதாவிடம் நம்பிக்கையுடன் வேண்டினார்:

> பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன் (லூக்கா 23:46).

கர்த்தருடைய மரணத்திற்கு முந்தைய இறுதித் தருணங்கள், பிறர் மீதான இரக்கத்தாலும், தம் பிதாவின் மீதுள்ள நம்பிக்கையாலும் நிரம்பியதாகத் தெளிவுபடுத்தினார். பின்னர், லூக்கா 23:50-56 இல், லூக்கா வெட்டப்பட்ட பாறையின் கல்லறையில் இயேசுவை அடக்கம் செய்ததற்கான செய்தியை வழங்கினார், ஓய்வுநாள் தொடங்கவிருந்ததால் அவரது சரீரம் அடக்கம் செய்யத் தயாராக இல்லை என்பதை பதிவு செய்கிறார்.

உபத்திரவத்தில் இருந்த லூக்காவின் வாசகர்கள் இயேசுவின் பாடுகளை எவ்வாறு அடையாளம் கண்டிருப்பார்கள் என்பதைப் பார்ப்பது கடினம் அல்ல. அவர்கள் என்ன துன்புறுத்தலைச் சகித்துக்கொண்டிருந்தாலும், இயேசு அதைவிட மோசமான பாடுகளை சகித்தார். மேலும் சிறப்பு என்னவென்றால், அவர்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

அவர்களுக்காகத் தான் அதைச் செய்திருந்தார். அவர்களுடைய கர்த்தர் அவர்களுக்காக பாடு படுவதற்கும் மரிப்பதற்கும் தயாராக இருந்திருந்தால், நிச்சயமாக அவர்கள் அவருக்காக துன்பப்பட்டு மரிக்கவும் தயாராக இருக்க வேண்டும். ஆனால் இது வெறும் கடன் அல்ல. இயேசு தம் கீழ்ப்படிதலுக்கும் துன்பத்துக்கும் வெகுமதியைப் பெற்றதைப் போலவே, கீழ்ப்படிதலுள்ள அவரைப் பின்பற்றுபவர்களும் தங்கள் துன்பங்களுக்கு வெகுமதியைப் பெறுவார்கள்.

கடைசியாக, இயேசுவின் கைது, விசாரணை மற்றும் மரணம் ஆகிய நிகழ்வுகளை விவரித்த பிறகு, லூக்கா லூக்கா 24:1-53 இல் இயேசுவின் உயிர்த்தெழுதல் மற்றும் பரமேறுதல் பற்றிய விவரத்துடன் தனது சுவிசேஷத்தை முடித்தார்.

## உயிர்த்தெழுதல் மற்றும் பரமேறுதல்

24:1-12 இல் லூக்கா இயேசுவின் வெற்றுக் கல்லறை, தேவதூதர் மற்றும் அவரது சீஷர்களின் குழப்பமான அவநம்பிக்கை ஆகியவற்றை குறிப்பிடுகிறார். இயேசு முன்னறிவித்தபடியே மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார். அவர் தனக்காகவும், அவர் மீது நம்பிக்கை கொண்ட அனைவருக்காகவும் மரணத்தை வென்றார்.

லூக்கா 24:13-35 அதே நாளின் பிற்பகுதியில், எம்மாவுக்குச் செல்லும் வழியில் இரண்டு சீஷர்களுடன் இயேசு சேர்ந்ததைப் பற்றியதான கதையை சொல்கிறது. அவர் தனது சொந்த ஊழியம் மற்றும் உயிர்த்தெழுதலின் வெளிச்சத்தில் பழைய ஏற்பாட்டை வாசிக்க அவர்களுக்குக் கற்றுக் கொடுத்தார். வேதாகமம் இதுவரை பதிவு செய்த அனைத்தும் இயேசுவையும் அவருடைய இரட்சிப்பின் பணியையும் சுட்டிக்காட்டியது.

பின்னர், லூக்கா 24: 36-49 இல், இயேசு தம் சீஷர்களுக்குத் தோன்றி, இந்த நிகழ்வுகளுக்கு சாட்சியமளிக்க அவர்களை ஊக்குவித்தார். எல்லா தேசங்களுக்கும் மனந்திரும்புதல் மற்றும் மன்னிப்பு பற்றிய சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதன் மூலம் தனது பணியைத் தொடரச் சொன்னார். பின்னர் லூக்கா தனது இரண்டாவது தொகுதியான அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்திற்கு மேடை அமைத்தார், இந்த பணிக்காக அவர்களுக்கு வல்லமை அளிக்க பரிசுத்த ஆவியை அனுப்புவதாக இயேசு கூறிய வாக்குத்தத்தத்தை குறிப்பிட்டார்.

லூக்கா தனது சுவிசேஷத்தை 24:50-53 இல் இயேசு பரமேறுவதோடு முடித்தார். இந்த அற்புதத்திற்கு பதிலளிக்கும் விதமாக, சீஷர்கள் தேவனை வணங்கி, மகிழ்ச்சியடைந்து, துதித்தார்கள். லூக்கா 2:10 இல் தேவதூதர் அறிவித்த மிகுந்த மகிழ்ச்சியின் நற்செய்தி இறுதியாக தேவனுடைய மக்களுக்கு வந்தது. உயிர்த்தெழுந்த, வெற்றிபெற்ற கர்த்தராகிய இயேசு அவர்களின் இரட்சகராக இருந்தார்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இந்த சவால்கள் மற்றும் சந்தேகங்களுக்கு பதிலளிக்கும் விதமாக, புறஜாதி விசுவாசிகள் இயேசுவைப் பின்பற்றுவதற்காக எடுத்த முடிவு சரியானது என்பதை உறுதியளிக்கும் பொருட்டு இந்த புத்தகத்தை லூக்கா எழுதினார். லூக்கா தனது சுவிசேஷத்தின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்தின் மூலம், இயேசுவின் வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சமும் தேவனுடைய ராஜ்யத்தை நிறுவுவதற்கான திட்டத்தின் ஒரு பகுதியாக இருந்தது என்பதை நிரூபித்தார். அவர் தேவ குமாரனும் ஏசாயாவினுடைய இரட்சிப்பின் தீர்க்கதரிசனங்களை நிறைவேற்ற வந்த தாவீதின் குமாரனுமாவார். இயேசு அனைத்து தேசங்களையும் தனது ஆட்சியின் கீழ் கொண்டு வரும் கிருபையும் இரக்கமும் கொண்ட ஒரு தடுக்க முடியாத வல்லமையாக இருந்தார். அவர் உண்மையில் தேவனுடைய ராஜ்யத்தைத் துவக்கி வைத்தார். அவர் உண்மையில் மனித இனத்தின் அனைத்து குடும்பங்களுக்கும் இரட்சிப்பை வழங்குகிறார். மேலும் அவருக்கு உண்மையாக இருந்த அனைவரையும் அவர் இரட்சிப்பார்.

லூக்கா சுவிசேஷத்தின் பின்னணி மற்றும் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, அதன் முக்கிய கருப்பொருள்கள் சிலவற்றைப் பார்க்க நாம் தயாராக இருக்கிறோம். நம் பாடத்தின் இந்தப் பகுதியில், லூக்கா வலியுறுத்திய சில முக்கிய கருப்பொருள்களை ஆராய்வோம்.

# முக்கிய கருப்பொருள்கள்

பொதுவாக, முதல் மூன்று சுவிசேஷங்களான மத்தேயு, மாற்கு மற்றும் லூக்கா ஆகிய மூன்றும் தேவனுடைய ராஜ்யத்தைக் கொண்டுவருபவர் கிறிஸ்து இயேசுவே என்கிற ஒரே மையக் கருப்பொருளைப் பகிர்ந்து கொள்கின்றன என்று நாம் கூறலாம். ஆனால் இந்த சுவிசேஷங்கள் ஒவ்வொன்றும் இந்த மையக் கருத்தை வெவ்வேறு வழிகளில் கையாள்கின்றன. எனவே, லூக்கா சுவிசேஷத்தில் இந்த காரியத்தை நாம் ஆராயும்போது, தேவனுடைய ராஜ்யமே இரட்சிப்பு என்று லூக்காவின் விளக்கத்தில் கவனம் செலுத்துவோம்.

மற்ற சுவிசேஷ எழுத்தாளர்களை விட லூக்கா குறைந்தபட்சம் 25 முறையாவது இரட்சித்துக்கொள், இரட்சிக்கிற, இரட்சிப்பு மற்றும் இரட்சகர் என்ற வார்த்தைகளைப் பயன்படுத்தினார். கிறிஸ்து இல்லாத நமது அவநம்பிக்கையான நிலையையும், நாம் மீட்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார். மேலும் தேவனுடைய ராஜ்யமே நம்முடைய மிகப்பெரிய இரட்சிப்பு என்று அவர் போதித்தார்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இரட்சிப்பு என்ற சொல் பழைய ஏற்பாட்டின் மேசியாவைக் குறித்த நம்பிக்கையில் ஆழமாக வேரூன்றியுள்ளது. தீமையின் கொடுங்கோன்மையிலிருந்தும், பாவத்திற்கு எதிரான தேவனின் நியாயத்தீர்ப்பிலிருந்தும் விடுவிப்பதாக நாம் அதை வரையறுக்கலாம். பழைய ஏற்பாடு முழுவதும், குறிப்பாக தீர்க்கதரிசன புத்தகங்களில், மேசியா இறுதியில் பாவத்தின் விளைவுகளிலிருந்தும், அதன் பிரசன்னத்திலிருந்தும் இரட்சிப்பைக் கொண்டுவருவார் என்று தேவன் தனது மக்களுக்குக் கற்பித்தார்.

இரட்சிப்பின் மீதான லூக்காவின் முக்கியத்துவத்திற்கு ஏற்ப, லூக்கா சுவிசேஷத்தின் முக்கிய கருப்பொருள்கள் பற்றிய நமது விவாதத்தை கிறிஸ்துவினுடைய இரட்சிப்பின் வெவ்வேறு அம்சங்களுடன் தொடர்புடைய மூன்று பகுதிகளாகப் பிரிப்போம். முதலில், தனிப்பட்ட இரட்சிப்பைப் பற்றிய லூக்காவின் விளக்கத்தைக் கருத்தில் கொள்வோம். இரண்டாவதாக, தேவனை நம் இரட்சகராக அவர் சித்தரிப்பதைக் கருத்தில் கொள்வோம். மூன்றாவதாக, இரட்சிக்கப்பட்ட நபர்களின் வகைகளை நாம் ஆராய்வோம். இரட்சிப்பைப் பற்றிய லூக்காவின் விளக்கத்துடன் ஆரம்பிக்கலாம்.

## இரட்சிப்பின் விளக்கம்

லூக்கா தனது சுவிசேஷம் முழுவதும், தனிப்பட்ட இரட்சிப்பு முதன்மையாக மக்களின் நிலைமைகளை மாற்றியமைக்கும் ஒரு விஷயம் என்று காட்டினார். இது அவர்களின் நிலையையும் தேவனின் முன் நிற்கும் அவர்களின் நிலையையும் மாற்றுகிறது, மேலும் அவர்கள் சபிக்கப்பட்டதற்குப் பதிலாக ஆசீர்வதிக்கப்பட்டவர்களாக இருக்க அவர்களின் விதியை மாற்றுகிறது.

நாம் அனைவரும் பாவிகளாகப் பிறந்துள்ளோம். இதன் விளைவாக, நாம் தேவனால் ஆக்கினைக்குட்பட்டு நித்திய அழிவை நோக்கிச் செல்கிறோம். ஆனால் சுவிசேஷம் நமக்கு பாவ மன்னிப்பை வழங்குகிறது, அதனால் தேவன் இனி நம்மைக் தண்டிக்க ஒரு காரணமும் இல்லை. லூக்கா அடிக்கடி சொல்வது போல், இரட்சிப்பு நமக்கும் தேவனுக்கும் இடையே சமாதானத்தை விளைவிக்கிறது. நாம் புதிதாகப் பெற்ற அந்தஸ்துடன், தேவனுடைய ராஜ்யத்தில் நித்திய ஆசீர்வாதங்களைப் பெறுகிறோம், இயேசு திரும்பி வந்து பூமியை முழுமைப்படுத்தும்போது அதை நாம் பெறுவோம். அந்தப் புதிய பூமியில் வியாதியோ மரணமோ ஊனமோ வலியோ இனி இருக்காது. இப்போது நம் வாழ்க்கை எப்படி இருந்தாலும், வரவிருக்கும் உலகில் நாம் செல்வந்தர்களாகவும் பாக்கியமுள்ளவர்களாகவும் இருப்போம்.

> லூக்காவின் வாசகர்கள், இயேசு**வின்** வாழ்க்கை மற்றும் ஊழியத்தின் சமூக சூழலில் செல்வாக்கு இல்லாத



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> குழுக்**களான** பெண்கள், புறஜாதிகள், குழந்தைகள் மேல் குறிப்பாக கவனம் செலுத்துகிறார் என்பதை அடிக்கடி கவனிக்கிறார்கள். இதற்கு ஒரு ஆழமான இறையியல் காரணம் இருப்பதாக நான் நினைக்கிறேன், மேலும் பெலனற்றவர்களுக்கு நன்மை செய்யும் வகையில் தேவனுடைய இறுதி நேர விதியை லூக்கா புரிந்துகொண்டார் என்பதிலிருந்து இது உருவாகிறது. மற்றும், அதன் விளைவாக, பெலன் வாய்ந்தவர்களுக்கு பாதகமான காரியங்கள் நடக்கும். இப்போது, உண்மையில், இந்தப் பாத்திரங்களின் தலைகீழ் மாற்றம் சுவிசேஷங்களுக்கோ அல்லது புதிய ஏற்பாட்டுக்கோ அல்லது கடைசி காலம் பற்றிய கருத்துக்களுக்கோ தனித்துவமானது அல்ல, "பரலோக ராஜ்யம் சமீபமாக உள்ளது" என்பது உங்களுக்குத் தெரியும். வேதாகம வெளிப்பாட்டின் மூலம் நீங்கள் அதைக் காணலாம். எடுத்துக்காட்டாக, ஆதியாகமம் புத்தகத்தில் இரண்டாவது பிறந்த குமாரர்கள், முதலில் பிறந்த குமாரர்களுக்கு எதிராக தேர்ந்தெடுக்கப்படுவதை நாம் மீண்டும் மீண்டும் கவனிக்கிறோம். இது எதிர்பார்ப்புகளின் தலைகீழ் மாற்றமாகும். லூக்காவைப் பொறுத்த வரையில், பழைய ஏற்பாட்டில் நீங்கள் கொண்டிருக்கும் எதிர்பார்ப்புகள் தலைகீழாக மாறியதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு மட்டுமே, இது லூக்காவைப் பொறுத்த வரையில், அதிகமாக கொண்டாடப்பட்ட எதிர்பார்ப்புகள் புதிய ஏற்பாட்டில் தலைகீழாக மாறுகின்றன.
>
> Dr. டேவிட் ஆர். பாவுர்

லூக்கா 7 இல், யோவான் ஸ்நானகன் இயேசுவை உண்மையாகவே மேசியாவா என்று கேட்க தூதர்களை அனுப்பியது உங்களுக்கு நினைவிருக்கும். மேலும் இயேசு அவருடைய பொது ஊழியத்தின் தொடக்கத்தில் ஜெப ஆலயத்தில் வாசித்த ஏசாயா 61:1-2 இல் உள்ள அதே பத்தியை எளிமைப்படுத்துவதன் மூலம் பதிலளித்தார். லூக்கா 7:22 இல் இயேசுவின் பதிலை மீண்டும் ஒருமுறை கவனியுங்கள்:

> குருடர் பார்வையடைகிறார்கள், சப்பாணிகள் நடக்கிறார்கள், குஷ்டரோகிகள் சுத்தமாகிறார்கள், செவிடர் கேட்கிறார்கள், மரித்தோர் எழுந்திருக்கிறார்கள், தரித்திரருக்குச் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுகிறது (லூக்கா 7:22).



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இங்கே இயேசு குறிப்பிட்டுள்ள அனைத்தும் இரட்சிப்பின் ஒரு வடிவம் ஆகும். அதாவது மோசமான நிலைமைகளிலிருந்து நல்ல நிலைமைகளுக்குத் திரும்புதல்.

புதிய பூமியில், இந்த மோசமான நிலைமைகள் முற்றிலும் அகற்றப்படும். இப்போதும் கூட, அந்த நித்திய ஆசீர்வாதங்களின் முன்னறிவிப்பை இரட்சிப்பு நமக்கு அளிக்கிறது. ஆனால் இரட்சிப்பின் பெரும் பின்னடைவுகள் நமது வெளிப்புற சூழ்நிலைகளுக்குள் அடங்கவில்லை. உள்ளுக்குள் நம்மையும் மாற்றுகிறது. லூக்கா 6:27-36 இல் இயேசு கூறியது போல்:

> உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மைசெய்யுங்கள். உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்; உங்களை நிந்திக்கிறவர்களுக்காக ஜெபம்பண்ணுங்கள்... உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள், நன்மைசெய்யுங்கள், கைம்மாறுகருதாமல் கடன் கொடுங்கள். அப்பொழுது உங்கள் பலன் மிகுதியாயிருக்கும், உன்னதமானவருக்கு நீங்கள் பிள்ளைகளாயிருப்பீர்கள், அவர் நன்றியறியாதவர்களுக்கும் துரோகிகளுக்கும் நன்மைசெய்கிறாரே. ஆகையால் உங்கள் பிதா இரக்கமுள்ளவராயிருக்கிறதுபோல, நீங்களும் இரக்கமுள்ளவர்களாயிருங்கள் (லூக்கா 6:27-36).

ராஜ்யத்தின் ஆசீர்வாதங்கள் வெளிப்புற சூழ்நிலைகளை மட்டும் மாற்றுவதில்லை. இரட்சிக்கப்பட்டவர்களின் குணம் மற்றும் முன்னோக்குகளையும் அவை தலைகீழாக மாற்றுகின்றன. வெளிப்புற மாற்றங்களைப் போலவே, இந்த உள் தலைகீழ் மாற்றங்களும் தற்போதைய உலகில் ஓரளவு வெளிப்படுகின்றன, மேலும் அடுத்த உலகத்தில் முழுமையாக வெளிப்படுகின்றன. இப்பொழுதே, பரிசுத்த ஆவியானவர் நமக்குள் வாசம் செய்வதால் வித்தியாசமாக சிந்திக்கவும் செயல்படவும் தொடங்குகிறோம், மேலும் புதிய கண்களால் உலகைப் பார்க்கிறோம். இந்த மாற்றங்கள் பரலோகத்தில் தொடரும், அங்கு நாம் பாவத்தின் பிரசன்னம், பாவ சீர்கேடு மற்றும் பாவத்தின் விளைவுகளிலிருந்து முற்றிலும் விடுபடுவோம். இயேசு திரும்பி வந்து, புதிய பூமியில் நமது புதிய சரீரத்தைக் கொடுக்கும்போது அவை நிறைவடையும்.

இரட்சிப்பின் இந்த ஆசீர்வாதங்கள், லூக்காவின் சுவிசேஷத்தில், இரட்சிப்பை மக்கள் பெறும்போது அது மகிழ்ச்சியாக ஏன் இருக்கிறது என்பதை விளக்குகிறது. லூக்கா 1:68-79 இல் உள்ள சகரியாவின் பாடல், லூக்கா 1:46-55 இல் உள்ள மரியாளின் பாடல் மற்றும் லூக்கா 2:29-32 இல் உள்ள சிமியோனின் பாடல் போன்ற பல பாடல்களில் நாம் இதைக் காண்போம். லூக்கா 1:14 இல் சகரியாவுக்கு



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

கொடுக்கப்பட்ட செய்தி மற்றும் லூக்கா 2:10-11 இல் மேய்ப்பர்களுக்கு அளிக்கப்பட்ட மிகுந்த மகிழ்ச்சியின் நற்செய்தி போன்ற தேவதூதர்களின் அறிவிப்புகளிலும் இரட்சிப்பின் மகிழ்ச்சி குறிப்பிடப்பட்டுள்ளது. லூக்கா 15 இல் காணாமற்போன செம்மறியாடு, காணாமற்போன காசு மற்றும் தொலைந்த மகன் பற்றிய இயேசுவின் உவமைகளின் நிலையான கருப்பொருள் மகிழ்ச்சி ஆகும். மகிழ்ச்சியைப் பற்றி இயேசு லூக்கா 6:21-23 இல் இவ்வாறு சுருக்கமாகக் கூறினார்:

> இப்பொழுது அழுகிற நீங்கள் பாக்கியவான்கள்; இனி நகைப்பீர்கள்.... அந்நாளிலே நீங்கள் சந்தோஷப்பட்டுக் களிகூருங்கள் (லூக்கா 6:21-23).

தேவன் நமக்கு மகிழ்ச்சியைக் கொடுக்க இரட்சிப்பை விரும்புகிறார். நம்முடைய பாவங்கள் துடைக்கப்பட்டுவிட்டன என்பதாலும் - அவருடன் நாம் அமைதியான உறவைக் கொண்டிருப்பதாலும் - அவருடைய ராஜ்யத்தின் ஆசீர்வாதங்களை நாம் சுதந்தரித்துக்கொண்டிருப்பதாலும் நாம் சந்தோஷப்பட வேண்டும் என்று அவர் விரும்புகிறார். இந்தத் தலைப்பு லூக்காவிற்கு மிகவும் முக்கியமானதாக இருந்தது, அவர் தனது சுவிசேஷத்தை அதனுடன் முடித்து விட்டார். லூக்கா 24:52-53 ஐக் கவனியுங்கள், அங்கு இயேசு பரலோகத்திற்கு ஏறிய பிறகு சீஷர்கள் என்ன செய்தார்கள் என்று அவர் கூறினார்:

> அவர்கள் ... அவரைப் பணிந்துகொண்டு, மிகுந்த சந்தோஷத்தோடே எருசலேமுக்குத் திரும்பி வந்து, நாடோறும் தேவாலயத்திலே தேவனைப் புகழ்ந்து துதித்துக்கொண்டிருந்தார்கள் (லூக்கா 24:52-53).

> நாம் தேவனை யார் என்பதற்காகப் பார்க்கும்போது, கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப் பார்க்கும்போது, அது சந்தோஷத்திற்கு வழிவகுக்கும், அது மகிழ்ச்சிக்கு வழிவகுக்கும். நான் என் மனைவிக்கு பூக்களைக் கொண்டுவந்தால், அவளிடம், ”இதோ சில பூக்கள், என் செல்லமே, நான் இதை உனக்குக் கொடுக்க வேண்டும்” என்று சொன்னால், அதை அவள் விரும்ப மாட்டாள். நான் அவளை நேசிப்பதால் இது மகிழ்ச்சியுடனும் சந்தோஷத்துடனும் செய்யப்பட வேண்டும். எனவே, தேவனில் நாம் மகிழ்ச்சியடைவது, தேவனை அவர் உண்மையில் இருப்பதை அறிந்துகொள்வதற்கான அடிப்படை வெளிப்பாடாகிறது. எனவே, தேவனில் மகிழ்வதும் அவரில் திருப்தி அடைவதும் கிறிஸ்தவ வாழ்க்கையின் அடிப்படையாகும்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

Dr. கே. எரிக் தோனேஸ்

இரட்சிப்பின் இந்த விளக்கத்தை மனதில் கொண்டு, நமது இரண்டாவது முக்கிய விஷயத்திற்கு வருவோம்: தேவன் நம் இரட்சகர் என்று லூக்கா வலியுறுத்துகிறார்.

## இரட்சகராகிய தேவன்

மூன்று படிகளில் தேவனை நமது இரட்சகராகக் கருதுவோம். இரட்சிப்பு தேவனுடைய வல்லமையினாலும், தேவனுடைய திட்டத்தின்படியும், தேவனுடைய குமாரன் மூலமாகவும் வருவதைக் காண்போம். இரட்சிப்பு தேவனுடைய வல்லமையால் வருகிறது என்பதை முதலில் பார்ப்போம்.

### தேவ வல்லமை

லூக்காவின் சுவிசேஷம், தேவன் தம்முடைய மக்களின் இரட்சகர் என்ற பழைய ஏற்பாட்டின் கருத்தை தொடர்ந்து எதிரொலிக்கிறது. எடுத்துக்காட்டாக, லூக்காவின் ஆரம்ப அதிகாரங்களில் இது ஒரு முக்கிய கருப்பொருளாகும், இது முழு புத்தகத்திற்கும் தொனியை அமைத்தது. லூக்கா 1:47 இல் தேவன் தனது இரட்சகராக இருந்ததால் மரியாள் மகிழ்ச்சியடைந்தாள். லூக்கா 1:68-79 இல் தேவன் கொண்டுவரும் இரட்சிப்பைப் பற்றி சகரியா பாடினார். லூக்கா 2:29-30 இல் சிமியோன் குழந்தையான இயேசுவைக் கையில் பிடித்தபோது சொன்னதைக் கவனியுங்கள்:

> ஆண்டவரே, உமது வார்த்தையின்படி உமது அடியேனை இப்பொழுது சமாதானத்தோடே போகவிடுகிறீர். உம்முடைய இரட்சணியத்தை என் கண்கள் கண்டது (லூக்கா 2:29-30).

சிமியோன் தேவனை சர்வாதிகாரம் கொண்ட கர்த்தர் என்று குறிப்பிடுகிறார். கிரேக்க மொழியில் டெஸ்போடா என்று அது அழைக்கப்படுகிறது. அதாவது அனைத்து சிருஷ்டிகளின் மீதும் தேவனுக்கு அதிகாரமும் வல்லமையும் இருக்கிறது என்பது இதன் அர்த்தம் ஆகும். மேலும் "உங்கள் இரட்சிப்பு" என்ற வார்த்தையுடன் சிமியோன், இரட்சிப்பைக் கொண்டுவர தேவன் தனது வல்லமையைப் பயன்படுத்துகிறார் என்று சுட்டிக்காட்டினார்.

லூக்கா சுவிசேஷத்தின் மற்ற பகுதிகள் முழுவதும் இதே கருப்பொருள் தொடர்கிறது. உதாரணமாக, யோவான் ஸ்நானகன் லூக்கா 3:6 இல் முழு பூமியையும் தேவன் தம் வல்லமையால் புதுப்பிப்பார் என்பதன் பின்னணியில் தேவனுடைய இரட்சிப்பை அறிவித்தார். மேலும் லூக்கா 18:26-27 இல், இரட்சிப்பு



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

மனிதர்களால் சாத்தியமற்றது, ஆனால் தேவனால் எல்லாம் சாத்தியம் என்று இயேசு கற்பித்தார்.

தேவன் எல்லாவற்றையும் கட்டுப்படுத்துகிறார் என்பதை வாசகர்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்று லூக்கா விரும்பினார். எனவே, மனிதனின் பலம், புத்திசாலித்தனம், உறுதிப்பாடு அல்லது செல்வத்தால் இரட்சிப்பை அடைய முடியாது. இரட்சிப்பு தேவனுடையது. இது அவருடைய வேலை, அவருடைய வல்லமையால் நிறைவேற்றப்பட்டது. தன் நியாயத்தீர்ப்பிலிருந்து மக்களை விடுவிக்க தேவனுக்கு மட்டுமே அதிகாரம் உள்ளது. உள்ளுக்குள் இருக்கும் மனிதர்களை மாற்றும் வல்லமை தேவனுக்கு மட்டுமே உண்டு. அவருடைய ராஜ்யத்தை பூமிக்குக் கொண்டுவருவதற்குத் தேவையான பலம் தேவனுக்கு மட்டுமே உள்ளது. மேலும் அந்த ராஜ்யத்தின் ஆசீர்வாதங்களால் தம் மக்களுக்கு வெகுமதி அளிக்கும் திறன் தேவனுக்கு மட்டுமே உள்ளது.

இரட்சிப்பு தேவனுடைய வல்லமையால் விளைகிறது என்பதை வலியுறுத்துவதைத் தவிர, இரட்சிப்பு தேவனுடைய திட்டத்தின் ஒரு பகுதியாகும் என்று லூக்கா கற்பித்தார்.

## தேவ திட்டம்

உதாரணமாக, இயேசு லூக்கா 4 இல் தனது பொது ஊழியத்தை ஆரம்பித்தபோது, அவர் ஏசாயா 61:1-2 இல் இருந்து வாசித்தார். மேலும் அவர் அந்த தீர்க்கதரிசனத்தை அந்த நேரத்திலும் இடத்திலும் நிறைவேற்றுவதாகக் கூறி கூட்டத்தினரை ஆச்சரியப்படுத்தினார். இயேசுவினுடைய வாழ்க்கையின் வியத்தகு நிகழ்வுகள் பழைய ஏற்பாட்டில் தேவனுடைய வாக்குத்தத்தங்களை நிறைவேற்றியதைக் காண்பிப்பதன் மூலம் இரட்சிப்பு என்பது தேவனுடைய திட்டம் என்பதை லூக்கா தனது புத்தகம் முழுவதும் தொடர்ந்து நிரூபித்தார். லூக்கா 24:44 இல் இயேசு தனது பொது ஊழியத்தின் முடிவில் சொன்ன வார்த்தைகளைக் கவனியுங்கள்:

> மோசேயின் நியாயப்பிரமாணத்திலும் தீர்க்கதரிசிகளின் ஆகமங்களிலும் சங்கீதங்களிலும் என்னைக்குறித்து எழுதியிருக்கிறவைகளெல்லாம் நிறைவேறும் (லூக்கா 24:44).

முழு பழைய ஏற்பாடும் தேவன் இயேசுவின் மூலம் நிறைவேற்றும் இரட்சிப்பைப் பற்றி பேசுகிறது. இந்த வழியில் தம் மக்களை இரட்சிப்பது தேவனின் திட்டமாக எப்போதும் இருந்து வருகிறது.

இரட்சிப்பு தேவனின் திட்டத்தை நிறைவேற்றுகிறது என்று லூக்கா காட்டிய மற்றொரு வழி, இயேசு செய்த காரியங்கள் அவசியமானவை என்பதைத் தொடர்ந்து சுட்டிக்காட்டுவது ஆகும், ஏனென்றால் தேவன் தான் அவைகள்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

நிகழும்படி நியமித்தார். ஒரு உதாரணத்திற்கு, லூக்கா 9:22 இல் இயேசு தனது துன்பத்தையும் மரணத்தையும் விவரித்த விதத்தைக் கவனியுங்கள்:

> மனுஷகுமாரன் பல பாடுகள்படவும், மூப்பராலும் பிரதான ஆசாரியராலும் வேதபாரகராலும் ஆகாதவனென்று தள்ளப்படவும், கொல்லப்படவும், மூன்றாம்நாளில் உயிர்த்தெழுந்திருக்கவும் வேண்டும் (லூக்கா 9:22).

என்ன நடக்கப் போகிறது என்பதை இயேசு விளக்கியபோது, “கண்டிப்பாக” என்று பொருள்படும் கிரேக்க வார்த்தையான *டே* என்ற வார்த்தையைப் பயன்படுத்தினார். இதற்கு “கட்டாயம்” என்று அர்த்தம். அது ஏன் தேவைப்பட்டது? ஏனென்றால் தேவனுக்கு அது தேவைப்பட்டது. இயேசுவுக்கு நடந்த அனைத்தும் தேவனுடைய மக்களை இரட்சிக்கும் பண்டைய திட்டத்தின் ஒரு பகுதியாகும்.

தேவன் நம் இரட்சகர் என்பதை நிரூபிக்க நாம் குறிப்பிடும் மூன்றாவது விஷயம், இரட்சிப்பு தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாக வருகிறது என்பதேயாகும்.

## தேவ குமாரன்

லூக்கா சுவிசேஷம் இயேசு தேவனுடைய குமாரன் என்பதை மீண்டும் மீண்டும் உறுதிப்படுத்துகிறது. லூக்கா 1:32-35 இல் உள்ள அவரது பிறப்பு பற்றிய தேவதூதரின் அறிவிப்பைப் போலவே, சில சமயங்களில் இயேசுவின் குமாரத்துவம் அவரை தேவனின் அவதாரமாக அடையாளப்படுத்துகிறது. மற்ற நேரங்களில், அது அவருடைய அதிகாரத்தை வலியுறுத்துகிறது. லூக்கா 3:22 இல் அவருடைய ஞானஸ்நானத்தில் இதைக் காண்கிறோம், அங்கு தேவன் பரலோகத்திலிருந்து தாம் அங்கீகாரம் கொடுத்ததைப் பற்றி பேசினார், மேலும் லூக்கா 9:35 இல் அவருடைய மறு ரூபத்தின் போது, தேவன் தம்முடைய குமாரனுக்குச் செவிசாய்க்கும்படி மக்களுக்கு அறிவுறுத்தினார். இன்னும் சில சமயங்களில் லூக்கா 22:29 இல் உள்ள கடைசி இராப்போஜனத்தின் போது, தேவனுடைய மேசியா ராஜாவாக அவர் வகிக்கும் பாத்திரத்தை இது குறிக்கிறது.

ஆனால், இயேசு தேவ குமாரன் என்கிற இந்தக் குறிப்புகள் அனைத்தும் பொதுவான ஒரு விஷயத்தையாவது பகிர்ந்து கொள்கின்றன: இவை அனைத்தும் இயேசுவின் மூலம் தேவன் இரட்சிப்பைச் தருகிறார் என்பதைக் குறிக்கிறது. இயேசு தேவனுடைய குமாரன் ஆவார், அவர் தம்முடைய மக்களை ஆக்கினையிலிருந்து விடுவிப்பதற்காக உலகிற்கு அனுப்பப்பட்டவர், அவர்களுடைய இடத்தில் மரித்து, தேவனுடைய ராஜ்யத்தை பூமிக்குக் கொண்டு வந்தார்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

சில சமயங்களில், பிதா நம்மை வெறுக்கும் கோபமான தேவன் என்றும், நமக்காக வந்த அவருடைய கலகக்கார குமாரன் இயேசு என்றும் தவறாக நினைக்கிறார்கள். ஆனால் உண்மைக்கு அப்பால் எதுவும் இருக்க முடியாது. இயேசு நம்மை இரட்சிக்க வந்தார், ஏனென்றால் அவருடைய பிதா அவரை அனுப்பினார். ஆம், இயேசு உண்மையில் நம் இரட்சகர். மேலும் அவர் உண்மையில் பிதாவின் நியாயத்தீர்ப்பிலிருந்து நம்மைக் காப்பாற்றுகிறார். ஆனால் அவர் கொண்டு வரும் இரட்சிப்பு பிதாவிடமிருந்து தொடங்குகிறது என்பதைப் புரிந்துகொள்வது மிகவும் முக்கியமானது. தேவனின் குமாரனாக, இயேசு பிதா கட்டளையிடுவதை மட்டுமே செய்கிறார். தேவனின் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக அவர் தேவனின் வல்லமையைப் பயன்படுத்துகிறார். இந்த வழியில், பிதாவாகிய தேவன் நமது இறுதியான இரட்சகர் என்பதற்கு இயேசுவின் மீட்புப் பணி சான்றாகும்.

இரட்சிப்பைப் பற்றிய லூக்காவின் விளக்கத்தையும், தேவன் நம் இரட்சகராக இருப்பதையும் இப்போது நாம் பார்த்தோம், லூக்காவின் நற்செய்தியில் மூன்றாவது முக்கிய கருப்பொருளான இரட்சிக்கப்படும் பல்வேறு மக்களுக்கு திரும்புவோம்.

## இரட்சிக்கப்படும் மக்கள்

இயேசுவின் நாளில், சமுதாயத்தில் மரியாதை அல்லது அதிகாரம் பெற்றவர்களுக்கு இரட்சிப்பை வழங்கியிருந்தால் யாரும் ஆச்சரியப்பட்டிருக்க மாட்டார்கள். தேவனுடைய பிரமாணத்திற்கு இணங்குபவர்களை அவர் ஏன் இரட்சித்தார் என்று யாரும் யோசித்திருக்க மாட்டார்கள். யூத சமுதாயம் ஏற்கனவே இகழ்ந்த மக்களை, தேவன் ஆசீர்வாதத்திற்காக வெளிப்படையாக கடந்து சென்ற மக்களை அவர் ஆக்கினைக்குட்படுத்தி இருந்தால், யாரும் ஆச்சரியப்பட்டிருக்க மாட்டார்கள். ஆனால் இயேசு செய்தது அதுவல்ல. லூக்காவின் சுவிசேஷத்தின் முக்கிய கருப்பொருள்களில் ஒன்று, இயேசு இரட்சித்த ஆச்சரியமான மக்களையும், அவர்களுக்கு அவர் அளித்த ஆச்சரியமான கனம் மற்றும் அந்தஸ்தையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

> லூக்காவின் கதைகளில் குறிப்பிடத்தக்க ஒன்று என்னவென்றால், அவர் குறைவுள்ளதிலும், கடைசியாக இருப்பதிலும் இழந்தவற்றிலும் ஆர்வமாக உள்ளார், உண்மையில் அவரது முக்கிய கருப்பொருள்களில் ஒன்று தலைகீழ் கருப்பொருளாகும். சிறியவர்களும், கடைசியாக உள்ளவர்களும், இழந்தவர்களும் தேவனின் ராஜ்யத்தில் முதன்மையானவர்களாகவும், அதிகம் உள்ளவர்களாகவும்,



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

காணப்பட்டவர்களாகவும் மாறுவார்கள். லூக்கா உண்மையில் சுவிசேஷத்தின் நெறிமுறை குறித்த காரியங்களில் ஆர்வமாக உள்ளார். அவர் இயேசுவின் ஊழியத்தைப் பற்றிப் பாராட்டத்தக்கதாகவோ அல்லது நல்லொழுக்கமுள்ளதாகவோ கருதப்பட வேண்டும் என்பதில் அவர் ஆர்வமாக உள்ளார், எனவே லூக்கா மற்றும் அப்போஸ்தலருடைய நடபடிகள் ஆகிய இரண்டிலும் நாம் நிச்சயமாகக் காணும் விஷயங்களில் ஒன்று என்னெவென்றால், ஏழைகளுக்கும், பெண்களுக்கும், நோயுற்றவர்களுக்கும், முதியவர்களுக்கும் அவர் முக்கியத்துவம் கொடுக்கிறார். இந்த வகையான விஷயங்களுக்கு மற்ற சுவிசேஷங்களில் இருப்பதை விட லூக்கா / அப்போஸ்தலருடைய நடபடிகளில் அதிக முக்கியத்துவம் உள்ளது என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. அதாவது, மத்தேயு சுவிசேஷத்தில் ”ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்” என்று உள்ளது, ஆனால் லூக்காவில் ”எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்” என்று இருக்கிறது. லூக்கா இதில் தான் அதிக கவனம் செலுத்துகிறார். இயேசுவின் மூலம் மீட்பு மட்டுமல்ல, நீதியும் வரும் என்று அவர் நம்புவதால் அதில் கவனம் செலுத்துகிறார். சமூகத்தின் தவறுகளை, மனிதகுலத்தின் வீழ்ச்சியை சரிசெய்வது இயேசுவால் கொண்டுவரப்பட்டது, மேலும் இயேசு உலகத்தின் இரட்சகர் என்பதை அவர் உண்மையில் வலியுறுத்த விரும்புகிறார். அவர் அனைவருக்கும் இரட்சகர் ஆவார். இயேசுவை சந்திப்பதற்கு அதிக நேரம் ஆகாது. நீங்கள் மிக உயர்ந்த நபர்களில் ஒருவராக இருந்தாலும் அல்லது மிகவும் உயரடுக்கு நபர்களில் ஒருவராக இருந்தாலும் அல்லது நன்கு படித்த நபர்களாக இருந்தாலும் அல்லது சமுதாயத்தில் மிகவும் பிரபலமானவராக இருந்தாலும் அல்லது மிகக் குறைவானவராக இருந்தாலும், இயேசு அனைவருக்குமானவர் என்பதை லூக்கா நிச்சயமாக வலியுறுத்த விரும்புகிறார்.

Dr. பென் விதரிங்டன் III

இந்தப் பாடத்தில் உள்ள நம் நோக்கங்களுக்காக, லூக்கா அடிக்கடி கவனத்தை ஈர்த்த நான்கு ஆச்சரியமான வகை நபர்களைப் பார்ப்போம். முதலில் புறஜாதிகளிலிருந்து தொடங்குவோம்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

புறஜாதிகள் இறுதியில் தேவனுடைய ராஜ்யத்திற்குள் கொண்டுவரப்பட்டு அதன் இரட்சிப்பு மற்றும் ஆசீர்வாதங்களைப் பெறுவதைப் பற்றி பழைய ஏற்பாடு பேசுகிறது. ஆனால் இஸ்ரவேலின் நாளில் யூதர்கள் பொதுவாக புறஜாதிகளை தேவனுடைய ராஜ்யத்தின் முதன்மையான ஆசீர்வாதங்களிலிருந்து விலக்கப்பட்டவர்களாகக் கருதினர்.

லூக்கா தனது சுவிசேஷத்தை எழுதும் நேரத்தில், உலகம் முழுவதும் உள்ள கிறிஸ்தவ சபை பெரும்பாலும் புறஜாதியாக மாறியவர்களைக் கொண்டிருந்தது. வியக்கத்தக்க விதங்களில் புறஜாதியாரை ஆசீர்வதிக்க வேண்டும் என்ற தனது நோக்கத்தை வரலாறு மூலம் தேவன் தெளிவாக வெளிப்படுத்தினார். இந்த பாடத்தில் நாம் முன்பு பார்த்தது போல், கிறிஸ்தவர்களாக மாறுவதன் மூலம் அவர்கள் தவறு செய்யவில்லை என்று புறஜாதியார்களுக்கு உறுதியளிக்க வேண்டும் என்பதே லூக்கா இந்த சுவிசேஷத்தை எழுதுவதற்கான காரணங்களில் ஒன்றாகும். எனவே, தனது சுவிசேஷம் முழுவதும், பழைய ஏற்பாட்டின் நம்பிக்கைகள் மற்றும் இலட்சியங்களை நிறைவேற்றுவதற்காக, புறஜாதிகளுக்கு இரட்சிப்பு நீட்டிக்கப்பட்ட இடங்களில் அவர் கவனம் செலுத்தினார்.

உதாரணமாக, லூக்கா 2:10-14 இல், சுவிசேஷத்தின் மகிழ்ச்சி ”எல்லா மக்களுக்கும்” மற்றும் ”பூமியில் உள்ள மனிதர்களுக்கும்” இருக்கும் என்று தேவதூதர்கள் அறிவித்தனர். இஸ்ரவேலின் புதிய ராஜா யூதர்களை இரட்சிக்கப் பிறந்தார் என்று கூறுவதற்குப் பதிலாக, தேவதூதர்கள் மிகவும் உலகளாவிய சொற்களில் பேசினார்கள். மேலும் லூக்கா 2:32 இல் சிமியோன் குழந்தையான இயேசு ”புறஜாதிகளுக்கு வெளிச்சமாக இருப்பார்” என்று அறிவித்தார். நான்கு சுவிசேஷங்களும் யோவான் ஸ்நானகன் கதையில் ஏசாயா 40 யை மேற்கோள் காட்டினாலும், லூக்கா 3:6 மட்டும் ”எல்லா மனிதர்களும் தேவனின் இரட்சிப்பைக் காண்பார்கள்” என்ற வார்த்தைகளை உள்ளடக்கிய மேற்கோளை நீட்டித்தது.

யூதர்கள் தங்கள் எதிரிகளாகக் கருதிய சமாரியர்களும் இரட்சிக்கப்படுவார்கள் என்றும் லூக்கா குறிப்பிட்டார். உதாரணமாக, லூக்கா 17:11-19 இல், இயேசு பத்து குஷ்டரோகிகளை குணப்படுத்தினார், ஆனால் ஒரே ஒரு சமாரியன் மட்டுமே அவருக்கு நன்றி செலுத்தினான். லூக்கா 10:30-37 இல் காணப்படும் நல்ல சமாரியன் உவமையை லூக்கா மட்டுமே பதிவு செய்தார், அதில் சமாரியன் நம் அயலானை நேசிக்க வேண்டும் என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டாகும்.

இதற்கு அப்பால், புறஜாதிகள் இயேசுவை இரட்சகராக அவர் மீது உண்மையான விசுவாசத்தை வெளிப்படுத்திய காலங்களை லூக்கா பதிவு செய்தார். உதாரணமாக, லூக்கா 7:9 இல், ரோம நூற்றுக்கு அதிபதியைப் பற்றி இயேசு கூறினார்:



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> இஸ்ரவேலருக்குள்ளும் நான் இப்படிப்பட்ட விசுவாசத்தைக் காணவில்லை (லூக்கா 7:9).

இந்தப் பாடத்தில் நாம் முன்பு பார்த்தது போல, லூக்கா இயேசுவின் வம்சவரலாற்றை ஆதாம் வரையில் நீட்டினார், இது யூதர்கள் மற்றும் புறஜாதிகள் உட்பட ஆதாமின் முழு இனத்தையும் இரட்சிக்க இயேசு வந்தார் என்பதைக் குறிக்கிறது.

லூக்கா சுவிசேஷத்தில் இரட்சிப்பைப் பெற்ற இரண்டாவது ஆச்சரியமான வகை மக்கள் பாவிகள் ஆவார்கள். இப்போது, ஒரு முக்கியமான அர்த்தத்தில், எல்லா மனிதர்களும் பாவிகள் தான். ஆனால் இயேசுவின் நாளில் சிலரின் பாவங்கள் மிகப் பெரியதாகவும், பகிரங்கமாகவும் இருந்ததால், லூக்கா 7:36-50 இல் உள்ள ஒழுக்கக்கேடான பெண்ணைப் போலவும், லூக்கா 19:1-9 இல் வரி வசூலிப்பவரான சகேயுவைப் போலவும் யூத சமுதாயத்தால் அவர்கள் அடிப்படையில் ஒதுக்கி வைக்கப்பட்டனர். வரி வசூலிப்பவர்கள் பாவிகளாக இருந்தனர், ஏனென்றால் அவர்கள் அரசாங்கத்தால் தேவைப்படாத அதிகப்படியான வரி விகிதங்களை தங்கள் நாட்டு மக்களிடம் வசூலித்து தங்கள் வாழ்க்கையை நடத்தினார்கள். ஆனால் இயேசு அவர்களை இரட்சிக்க வந்தார். விசுவாசத்தில் மனந்திரும்புகிற எவருக்கும் இரட்சிப்பை வழங்க அவர் ஆர்வமாக இருந்தார். உதாரணத்திற்கு, லூக்கா 5:29-32 விலுள்ள விவரங்களை கவனியுங்கள்:

> அந்த லேவி என்பவன் தன் வீட்டிலே அவருக்குப் பெரிய விருந்துபண்ணினான். அநேக ஆயக்காரரும் மற்றவர்களும் அவர்களோடேகூடப் பந்தியிருந்தார்கள். வேதபாரகரும் பரிசேயரும் அவருடைய சீஷருக்கு விரோதமாக முறுமுறுத்து: நீங்கள் ஆயக்காரரோடும் பாவிகளோடும் போஜனபானம்பண்ணுகிறதென்னவென்று கேட்டார்கள். இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: "பிணியாளிகளுக்கு வைத்தியன் வேண்டியதேயல்லாமல் சுகமுள்ளவர்களுக்கு வேண்டியதில்லை. நீதிமான்களையல்ல, பாவிகளையே மனந்திரும்புகிறதற்கு அழைக்க வந்தேன்" (லூக்கா 5:29-32).

லூக்கா சுவிசேஷத்தில் இரட்சிக்கப்பட்ட மூன்றாவது ஆச்சரியமான மக்கள் பெண்கள் குழு ஆவர். இயேசு வாழ்ந்த பண்டைய கிழக்கு மத்தியதரைக் கடல் உலகில், பெண்களுக்கு சமூகத்தில் பல உரிமைகள் இல்லை, மேலும் அவர்கள் மிகவும் மதிக்கப்படவில்லை. ஆனால் இயேசு அவர்களுக்கு இரட்சிப்பைக் கொண்டு வந்த விதத்தை லூக்கா கவனித்தார். லூக்கா 8:41-53 ல், யாவீருவின் மகளையும், பன்னிரண்டு வருடங்களாக இரத்தப்போக்கினால் அவதிப்பட்ட



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

பெண்ணையும் இயேசு குணப்படுத்தினார். பண்டைய முற்பிதாக்களின் சமூகத்தில் எந்த உதவியும் இல்லாத, நம்பிக்கையும் இல்லாத விதவைகள் மீதும் அவர் மிகுந்த இரக்கத்தைக் காட்டினார். லூக்கா 7:11-17 மற்றும் 18:1-8 மிகவும் தேவையுள்ள மக்கள் மீது இயேசுவுக்கு இருந்த அக்கறையைப் பற்றி விளக்குகிறது.

பெண்களின் இரட்சிப்பை முன்னிலைப்படுத்திய லூக்காவின் மிகவும் வியத்தகு கற்பித்தல் நுட்பங்களில் ஒன்று, தாழ்மையான பெண்களை பெருமைமிக்க ஆண் மதத் தலைவர்களுடன் ஒப்பிடுவதாகும். உதாரணமாக, லூக்கா 13:14-15 இல், ஜெப ஆலயத்தின் அதிபதியை இயேசு நயவஞ்சகன் என்று அழைத்தார், அதே சமயம் அடுத்த வசனத்தில் ஊனமுற்ற ஒரு பெண்ணை ”ஆபிரகாமின் மகள்” என்று அழைத்தார். லூக்கா 7:37-50 இல் இதேபோன்ற வேறுபாட்டைக் காண்கிறோம், அங்கு இயேசு ஒரு ஒழுக்கக்கேடான பெண் தன்னை வணங்குவதை ஏற்றுக்கொண்டார், அதே சமயம் பெருமைமிக்க பரிசேயன் சீமோனைக் கண்டனம் செய்தார்.

தேவனை நேசிப்பது என்றால் என்ன என்பதற்கான அவரது இறுதி உதாரணத்திற்காக, லூக்கா இயேசுவின் தோழியான மரியாளின் கதையை விவரித்தார். லூக்கா 10:27 இல், இரண்டு பெரிய கட்டளைகள் தேவனை நேசிப்பதும் நம் அயலானை நேசிப்பதும் என்று இயேசு கற்பித்தார். பின்னர், வசனங்கள் 38-42 இல், மரியாள் தேவனை எவ்வாறு நேசிப்பது என்பதை, குறிப்பாக, அவருடைய போதனைகளுக்குக் கீழ்ப்படிதலுடன் செவிசாய்ப்பதன் மூலம் உதாரணம் காட்டினார். பேதுரு அல்ல, யோவான் அல்ல, நிச்சயமாக யூத தலைமை அல்ல, ஆனால் ஒரு பெண் தெய்வீக பக்தியின் முன்மாதிரியாக இருந்தாள்.

இறுதியாக, லூக்காவின் சுவிசேஷத்தில் இரட்சிக்கப்படும் நான்காவது ஆச்சரியமான வகை மக்கள் ஏழைகள் ஆவர். மரியாள் மற்றும் யோசேப்பின் குடும்பம் ஏழ்மையானது என்பதை சுட்டிக்காட்டி லூக்கா தனது சுவிசேஷத்தைத் தொடங்கினார். லூக்கா 2:24 இல், அவர்கள் ஆலயத்துக்குக் கொண்டுவந்த காணிக்கை, லேவியராகமம் 12:8 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏழைகளின் காணிக்கையாக இருந்ததால் இதை நாம் அறிவோம்.

லூக்கா 12:13-21 இல் ஐசுவரியவானாக இருந்த ஒரு முட்டாளின் உவமை போன்ற இடங்களிலும், லூக்கா 16:19-31 இல் ஐசுவரியவான் மற்றும் லாசரு பற்றிய அவரது கதையிலும் இயேசு ஏழைகளுக்கு ஆதரவாக இருந்தார் என்று காட்டினார். ஏசாயா 61:1இல் இருந்து இயேசு வாசிக்கும் லூக்கா 4:18 யை மீண்டும் ஒருமுறை கவனியுங்கள்:



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> கர்த்தருடைய ஆவியானவர் என்மேலிருக்கிறார்; தரித்திரருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி என்னை அபிஷேகம்பண்ணினார் (லூக்கா 4:18).

இந்த நிகழ்வைக் குறிப்பிடுகிற ஒரே சுவிசேஷ எழுத்தாளர் லூக்கா மட்டுமே. இயேசுவின் முழு ஊழியத்திற்கும் ஒரு முன்மாதிரியாக அவர் அதைச் சேர்த்தார். தேவனுடைய ராஜ்யத்தைக் கொண்டுவருவதின் ஒரு பகுதி ஏழைகளுக்கு இரட்சிப்பின் சுவிசேஷத்தைப் பிரகடனப்படுத்துகிறது என்பதே அவருடைய கருத்து. பிரபஞ்சத்தின் தேவன் சமூகம் இகழ்ந்தவர்களைக் கூட இரட்சிப்பதற்காக மனித அவதாரம் எடுத்தார் என்பதை லூக்கா குறிப்பிட்டார். யூத சமுதாயத்தில் புறஜாதிகள், பாவிகள், பெண்கள் மற்றும் ஏழைகளுக்கு மிகக் குறைவான உரிமைகள் இருந்தன, மேலும் அவர்கள் தேவனுடைய ராஜ்யத்தின் மிகப்பெரிய ஆசீர்வாதங்களைப் பெறுவார்கள் என்பது எதிர்பார்க்கப்படவில்லை. ஆனால் இயேசு அந்த மதிப்பு முறையை நிராகரித்தார். அவரை இரட்சகராகவும் கர்த்தராகவும் பெற்ற அனைவருக்கும் அவர் முடிவில்லா ஆசீர்வாதங்களை வழங்கினார்.

> அனைத்து சுவிசேஷ எழுத்தாளர்களிலும் லூக்கா தனது நாளின் பாலஸ்தீனிய சமூகத்தில் உள்ள விளிம்புநிலைக் குழுக்களுக்கு ஒரு குறிப்பிட்ட முக்கியத்துவம் கொடுக்கிறார். அவர் தொடர்ந்து ஆண்களின் விவரங்களை பெண்களுடனான விவரங்களுடன் இணைப்பதைப் பார்க்கிறோம். அவர் சமாரியர்கள் மீது குறிப்பாக கவனம் செலுத்துவதையும், ஏழைகள் மீது கவனம் செலுத்துவதையும் நாம் காண்கிறோம். உதாரணமாக, லூக்காவின் சுவிசேஷத்தைக் குறிக்கும் இந்த உவமையைப் பார்க்கிறோம், ஐசுவரியவான் மற்றும் லாசருவின் உவமை லூக்காவின் சுவிசேஷத்தில் மட்டுமே காணப்படுகிறது. லூக்காவில் மட்டுமே நல்ல சமாரியன் உவமை வருவதை நாம் மீண்டும் பார்க்கிறோம். எனவே, இயேசுவினுடைய போதனையின் இந்த விவரங்கள் நாசரேத்தில் அவர் நிகழ்த்திய நிகழ்ச்சி நிரல் பிரசங்கத்துடன் நன்றாகப் பொருந்துகின்றன. நான் வந்தேன், இன்று வேதவாக்கியம் நிறைவேறியது; ஏழைகளுக்கும் சிறைபிடிக்கப்பட்டவர்களுக்கும் ஒடுக்கப்பட்டவர்களுக்கும் நற்செய்தியை அறிவிக்கும்படி ஆவியானவர் என்மீது இருக்கிறார் என்று இயேசு சொன்னார். மேலும் இயேசு தம் சீஷர்களிடம் விருந்துக்கு வரும்போது, ஊனமுற்றவர்களையும் ஏழைகளையும் அழைக்க வேண்டும்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

என்று கூறுகிறார். எனவே, இயேசு மிக முக்கியமான ஒன்றை விளக்குகிறார், தேவனின் சாயலைக் கொண்டுள்ள மற்றவர்களுடனான நமது உறவில், நாம் நம்மைப் பற்றி அதிகமாக சிந்திக்கக் கூடாது, இதைத் தான் பவுல் சொன்னார். ஆனால், சமுதாயத்தின் ஒவ்வொரு அம்சத்திலும் கிருபையைக் காட்டினார் என்பதை நாம் பார்க்க வேண்டும். அதைச் செய்ய சீஷர்களை அழைத்தார். நாமும் அதைச் செய்ய வேண்டும். விபச்சாரிகளுடனும் பாவிகளுடனும் நேரத்தை செலவிட்டதற்காக இயேசு கேலி செய்யப்படுகிறார், அதற்கு அவர் நான் நீதிமான்களுக்காக அல்ல, ஆனால் பாவிகளுக்காக வந்துள்ளேன் என்று பதிலளித்தார். எனவே, இது அன்றைய அவரது சமுதாயத்தின் ஒவ்வொரு அம்சத்தையும் சென்றடைவதற்கான இயேசுவின் பணியின் பிரதிபலிப்பு மட்டுமல்ல, அது நாம் உண்மையில் யார் என்பதைப் பற்றியதும் நமது உண்மையான தேவை பற்றிய உணர்வுமாயிருக்கிறது. நம் அனைவருக்கும் தேவனின் கிருபை தேவை, நமது சொந்த நற்செயல்கள் மூலமோ அல்லது சமுதாயத்தில் நமது சொந்த நிலையின் மூலமோ தேவனின் தயவைப் பெற முடியாது, எனவே நாம் அனைவரும் தேவனுக்கு முன் சமமான நிலையில் இருக்கிறோம், ஒருவருக்கொருவர் கருணை காட்ட வேண்டும், ஒவ்வொருவரையும் அணுக வேண்டும். ஏனென்றால் நமக்கும் அதே வகையான தேவை உள்ளது.

Dr. கிரிகோரி ஆர். பெர்ரி

# முடிவுரை

இந்தப் பாடத்தில், லூக்காவின் சுவிசேஷத்தை அதன் ஆசிரியர் மற்றும் அசல் பார்வையாளர்கள் மற்றும் அதை எழுதும் சந்தர்ப்பத்தின் அடிப்படையில் அதன் பின்னணியைக் கருத்தில் கொண்டு ஆராய்ந்தோம்; அதன் அமைப்பு மற்றும் உள்ளடக்கம்; மற்றும் இரட்சிப்பின் தலைப்பைச் சுற்றியுள்ள அதன் முக்கிய கருப்பொருள்கள் ஆகியவற்றை ஆராய்ந்தோம். லூக்காவின் சுவிசேஷத்தை வாசிக்கும்போது இந்தக் கருத்துக்களை மனதில் வைத்துக் கொண்டால், அவருடைய அர்த்தத்தை நாம் நன்றாகப் புரிந்துகொள்வோம், மேலும் சபையிலும்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

உலகிலும் நம் வாழ்வில் அதைப் பயன்படுத்துவதற்கு இன்னும் தயாராக இருப்போம்.

லூக்கா சுவிசேஷம் இயேசுவை உலகின் அன்பான இரட்சகராக பூமிக்கு வந்த தேவனுடைய மகிமையான குமாரனாக முன்வைக்கிறது. அவர் இனம், செல்வம் அல்லது அந்தஸ்தைப் பொருட்படுத்தாமல் அனைவருக்கும் தேவனின் இரட்சிப்பின் நற்செய்தியை விரிவுபடுத்துகிறார். அவருடைய சொந்த நாளில், யூத மேசியாவைப் பின்பற்றுவதன் மூலம் அவர்கள் தவறு செய்யவில்லை என்று புறஜாதி கிறிஸ்தவர்களுக்கு லூக்காவின் சுவிசேஷம் உறுதியளித்தது. நமக்கும் அது பொருந்தும். முதல் நூற்றாண்டிலிருந்து, சபையில் பெரும்பான்மையானவர்கள் புறஜாதிகளாக இருந்தனர். மேலும் நாம் எந்த தவறும் செய்யவில்லை. கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்களாக, உண்மையான இரட்சிப்பைக் கொண்டுவரக்கூடிய ஒரே செய்தி நம்மிடம் உள்ளது என்பதை அறிந்து, மனந்திரும்புதல் மற்றும் விசுவாசத்தின் அதே நற்செய்தியை உலகில் உள்ள அனைவருக்கும் தொடர்ந்து பிரசங்கிப்பது நமது பொறுப்பாகும்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.